கல்கி

திருச்சி நகரச் சிறப்பிதழ்


KALKI 29.11.92 ரூ. 3.00



"சமூக விரோதிகள்தான் என்னை ரவுடிபோல் சித்திரிக்கிறார்கள்!"

– திருச்சி நகர எம். எல். ஏ. மாலா விளக்குகிறார்

இவர்கள் அனைவரும் உங்கள் இல்லத்திற்கு வந்தால்,
அவர்கள் பருக எதை வழங்குவீர்கள்...



ஒவ்வொரு சாகர் ஸ்கிம்ட் மில்க் பவுடர் பேக் உங்களுக்கு வளமான புரதச் சத்துள்ள $5^1/_4$ லிட்டர் பாலைத் தருகிறது ஆம்! இத்தனை எளிதாக இவ்வளவு பாலை நீங்கள் இதுவரை தயாரித்தது இல்லை. அபரிமிதமான பாலைப் பெற, இன்றே வாங்குங்கள் சாகர்.

குஜராத் கோ-ஆபரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிட். ஆனந்த் 388 001. ASP-SSMP-109/92 TAM|R


ஸ்ரீரங்கம் ராஜ கோபுரத்தில் ஏற்பட்டிருக்கும் விரிசல்கள் பற்றிப் பலரும் கவலைப்படவே செய்கிறோம். நமது புராதனமான வாஸ்து சாஸ்திரங்கள் கட்டடக் கலை, நகர நிர்மாணம் பற்றியெல்லாம் நிறையச் சொல்கின்றன. வாஸ்து சாஸ்திரத்தை நன்கு ஆராய்ந்துள்ள நிபுணர் கே. வி. டி. சர்மா, 1990, ஏப்ரல் 23ம் தேதி, ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். சில பகுதிகள் :

ஐந்து தெற்குத் திசையை நேருக்கு நேர் சந்திக்கின்றன. ஆனால் ராஜகோபுரம் இலேசாகத் திசை திரும்பியுள்ளது.

நமது சாஸ்திரங்களின்படி வடகிழக்கு, தென்கிழக்கு என்றெல்லாம் பிரதான வாசலைத் திசை திருப்பி அமைக்கக் கூடாது. அப்படி அமைத்தால் பலவித இன்னல்களைச் சந்திக்க நேரும் என்று கூறப்படுகிறது.

ராஜகோபுரம் சற்றே திசை திரும்பி அமைந்திருப்பதால் காற்றின் அழுத்தத்தை அதிகமாக உணர்கிறது. வடமேற்கு தென்

ராஜகோபுரத்தைப் பலப்படுத்த...



நமது புராதன சாஸ்திரங்களின்படி வீடோ அல்லது கோவிலோ நான்கு திசைகளில் ஏதேனும் ஒன்றை நோக்கி இருந்தாலும் நேருக்கு நேராக அந்தத் திசையில் அமைய வேண்டும். ஒரு கோணத்தில் அமையக் கூடாது. ஸ்ரீரங்கத்தில் மொத்தம் ஆறு கோபுரங்கள் உள்ளன. இவற்றுள் கிழக்குப் பருவக் காற்றுகளின் தாக்கு தலைக் கூடுதலாகச் சந்திக்கிறது.

ஒரு குடியிருப்பு, நதி அல்லது ஏரி அருகே அமையும் போது, போதிய அளவு திறந்த வெளிப் பிரதேசம் குறிப்பிட்ட பகுதிகளில் விடப்பட வேண்டும் என்றும்



ராமன்
பிறந்த இடம்...
அன்று
அயோத்தி!
இன்று...
'ஐயோ' 'தீ'!!

– வி. ராஜப்பா


"வேலைக்காரிக்கு ரெண்டு நாள் லீவு வேணுமாம்!"
"கொடுக்கவேண்ணா?"
"உ வ ர் ன் தி ட ம் மனு கொடுப்பாளாம்!"

– விஜயம்



நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வாறு செய்யாவிட்டால் என்னென்ன இன்னல்கள் விளையும் என்று பட்டியலிடுகின்றன. ஸ்ரீரங்கம் இரண்டு நதிகளின் இடையில் அமைந்திருப்பதைக் கவனிக்க வேண்டும். அவ்வாறிருக்கும் போது பூமி, மிருதுவாக, நெகிழ்ந்து கொடுப்பதாக இருக்கும். எனவேதான் முன்காலத்தில் பரந்த உள் பிராகாரம், வெளிப்பிராகாரம் எல்லாம் ஏற்படுத்தி, திறந்த வெளிகளை நிர்ணயித்தார்கள். ஆனால் காலப்போக்கில் ஸ்ரீரங்கம் கோயில் பிராகாரங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கெல்லாம் வீடுகள் வந்து விட்டன. இதனால் ராஜகோபுரத்தைச் சுற்றியுள்ள பூமி போதிய அளவு சூரிய வெளிச்சத்தைப் பெற்று உலர்வது சாத்தியமில்லாமல் போகிறது. ராஜகோபுரத்தைக் கட்டிய போது இந்த முக்கியமான விஷயம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

கோயில் பிராகாரத்துக்குள் கட்டப்பட்டுள்ள வீடுகள் நீக்கப்பட்டால் அந்தப் பகுதியில் பூமி மீது அழுத்தும் பாரம் ஐம்பது சதம் குறையும் என்பதோடு, இவ்வாறு ஏற்படும் திறந்தவெளி, சூரிய வெளிச்சத்தைப் பூமிக்குப் பெற்றுத் தரும். வேகமான பருவக் காற்றுகளைத் தாக்குப் பிடிக்கவும் இந்தத் திறந்தவெளி உதவும். ஸ்ரீரங்கத்தில் பல மாடி காங்கிரீட் கட்டடங்கள், நிலத்தடிக் கிடங்குகள் முதலியன கட்டப்படுவதற்கும் தடைவிதிக்க வேண்டும். இவையெல்லாமாகச் சேர்ந்து ராஜகோபுரம் சிறிது சிறிதாகக் கீழிறங்குவதைத் தவிர்த்து, அதன் ஆயுட் காலத்தை நீடிக்கச் செய்யலாம்.



வடக்கு வாசல் :

விட்டுக் கொடுக்காத வைஜயந்திமாலா!



● உடும்புப் பிடி

விலைவாசி ஏற்றத்தால் அவதியுற்ற பொது மக்களுக்கு நவம்பர் மூன்றாம் தேதி நடந்த பாரத் பந்த் மேலும் வெறுப்பையே கொடுத்தது. பி.ஜே.பி. கட்சி 'பந்த் முழு வெற்றி' என்று முழங்க, 'படுதோல்வி' என்றது காங்கிரஸ்! பள்ளி, கல்லூரி, ஆபீஸ்களிலிருந்து பஸ், ரயில் இன்றி நொந்தவண்ணம் நடந்து வந்த பொது மக்கள், இத்தகைய 'பந்த்'களை சற்றும் வரவேற்க முடியாது! கட்சிகள் இதை ஒரு கௌரவப் பிரச்னையாக்காமல் தங்களுக்கு வோட்டுப் போடுகின்ற பொது மக்களைப் பற்றிச் சற்றேனும் சிந்தித்துப் பார்த்தால் நலம்! நாட்டில் இதுவரை 4.35 கோடி போலி ரேஷன் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. புழக்கத்தில் இருக்கும் 22 ரேஷன் கார்டுகளில் ஒரு கார்டு போலி! இவற்றைப் பறிமுதல் செய்வதல்லாமல் இவற்றைத் தயாரித்த, உடந்தையாக இருந்த நபர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கினால், ரேஷன் பொருட்கள் சரியான நபருக்கு நியாயமாகப் போய்ச் சேரும். இந்த வகைய 'பந்த்'களுக்குத் தேவையே இருக்காது!

'ஷங்கர்ஸ் வீக்லி'யை நடத்தி வந்த ஷங்கர் பிள்ளை ஆரம்பித்த பி.சி. ராய் நூலகம் கண்டிப்பாக ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையிலான குழந்தைகளுக்கு மட்டுமே. சுமார் 3,000 குழந்தைகளை அங்கத்தினர்களாகக் கொண்ட இந்தப் புத்தக சாலையில் 50,000 புத்தகங்கள் இருக்கின்றன. மணிக்கணக்கில் குழந்தைகள் புத்தகக் கடலில் மூழ்கியிருக்கும் இந்த இடம், புதுதில்லி பகதூர்ஷா ஜாஃபர் மார்க்கில், பல்வேறு நாளிதழ் அச்சக அலுவலகங்களிடையே அமைந்திருக்கிறது! இந்நூலகத்தில் ஆண்டொன்றுக்கு 50,000 ரூபாய்க்குப் புத்தகங்கள் வாங்கப்படுகின்றன. இதன் அருகிலேயே 'தேரு பொம்மைகள் கண்காட்சி' உள்ளது. அதனால் தூர்தர்ஷன், ஸ்டார் டி.வி. இவற்றை மறந்து, தங்கள் விடுமுறை தினங்களை ஆனந்தமாக இங்கு அனுபவிக்கின்றனர் குழந்தைகள்!

● 'சங்கர்ஸ் வீக்லி' சங்கர்



"ரூபாய் ஒரு லட்சத்துக்கு மேலான பொருள்களுக்கு வழக்காடுவோர் இனி தில்லி ஹைகோர்ட்டுக்குத்தான் செல்ல வேண்டும்" என்ற உத்தரவை எதிர்த்து 5000 சப்கோர்ட் வக்கீல்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர். ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ் மாதம் 30 வழக்குகளில் தீர்ப்பு அளித்தால், ஒரு சப்ஜட்ஜ் 3,000 கேஸ்களில் தீர்ப்புக் கொடுக்கின்றார். ஒரு ஹைகோர்ட் ஜட்ஜுக்கான சம்பளத்தில் ஒரு டஜன் சப்கோர்ட் நீதிபதிகளை நியமிக்கலாம்! அப்படியிருக்க வழக்குகளின் கால, பண விரயத்திற்குக் காரணமாகும் இந்த உத்தரவை வாபஸ் பெற வேண்டும் என்கின்றனர் சப்-கோர்ட்டின் வக்கீல்கள்! இந்த வழக்கைத் தீர்க்கலாம் என்றால் மேல்மட்டத்தில் சட்டமந்திரியே இல்லை!

சென்ற மக்களவைத் தேர்தலில் தோற்றவர்கள், டிக்கெட் கிடைக்காதவர்கள் போன்ற முன்னாள் எம்.பி.க்கள் பலர் தங்களுக்கு அரசாங்கம் கொடுத்த வீட்டை இன்னமும் காலி செய்யாமல் உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் வைஜயந்தி மாலா பாலி, "நான் கலையுலகில் ஒரு முக்கியப் புள்ளி! எனக்குத் தில்லியில் வீடு தேவை" என்று கேட்க, அரசு, "அதற்கு வேறு வீடு தருவோம்; இது எம்.பி.க்கான வீடு" என்றது. அவர் கோர்ட்டுக்குச் செல்ல, கோர்ட் ஒரு காலவரம்பு நிர்ணயித்தது. அது முடிந்த பின்னரும் வைஜயந்தி மாலா காலி செய்யவில்லை! தேர்தலில் தோற்ற முன்னாள் மந்திரிகள் வசந்த் சாத்தே, ஹெச்.கே.எல். பகத் போன்றோரும் இவ்வாறே அரசாங்க வீடுகளைக் காலி செய்யாமல் இருக்கிறார்கள். இவர்களுடைய அகராதிப்படி சட்டங்கள் மற்றவர்களுக்காக ஏற்பட்டது போலும்!

- ராஜீவி நரசிம்மன்

மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் திருச்சியைச் சுற்றினோம்!




* மறைத்திரு ஜார்ஜ்.



* கமலா குருசாமி




* போலீஸ் பொது மக்கள் நல்லுறவுக் கூட்டம்.




* குடியிருப்புப் பகுதியில் லாரிகள்.

●● விருந்துக்கு வந்தவன் வீட்டுக்காரன் தலையில் கைவைத்தது போலாகிவிட்டது, திருச்சி - ஜங்ஷன் பஸ் நிலையத்தின் கதை. அங்கு ஏற்கெனவே இட நெருக்கடி. இந்த நிலையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினரும் வந்து நெரிசலுக்குள் டேரா அடித்து விட்டதால் ஏக குழப்படி. திருவள்ளுவருக்கென்று பக்காவாக தனி பஸ் நிலையம் கட்டப்பட்டிருந்தும் எதற்காக இந்த ஒண்டுக் குடித்தனம்? திருவள்ளுவர் பஸ் நிலையத்தைப் பல ஆண்டுகளாக யோசித்து யோசித்துக் கட்டியதாலோ என்னவோ, கட்டி முடிக்கப்பட்ட பிறகு பஸ்களை உள்ளே கொண்டு போய் திறந்தினால், கதவுகளைத் திறக்க முடியவில்லையாம்! காரணம், பிளாட்பாரம் கதவைத் திறக்க முடியாமல் இடிக்கிறது! அதனால் மெயின் பஸ் நிலையத்திலேயே டேரா அடித்துவிட்டார் திருவள்ளுவர். மாதம் ஒன்பதாயிரம் ரூபாய் வாடகையாக வருகிறதே என்று



* கோட்டை வாயில்: அடையா நெடுங்கதவும் குறையாத நெரிசலும்.

ஜங்ஷன் பஸ் நிலையம்.





* இரா. கலைக்கோவன்.



* ஸ்ரீரங்கம் பஸ் நிலையம்.

திருச்சி நகராட்சியும் திருவள்ளுவர் பஸ்களை காலி செய்யச் சொல்லாமல் தயங்குகிறது. ஆக, பணம் வருகிறது என்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பதற்கு திருச்சி நகராட்சியே ஓர் உதாரணம்!

●● பஸ் நிலையத்துக்குள் இட நெருக்கடி என்றால், பஸ் ஏற வருகிறவர்களுக்கு இயற்கையின் நெருக்கடி! பாவம், என்னதான் செய்வார்கள்? பஸ் நிலைய காம்பவுண்டுச் சுவரைச் சுற்றிலும் பலரும் ஒரு வேண்டுதல் மாதிரி நின்று கொண்டு சிறுநீர் கழிக்கிறார்கள். அதனால் மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் உள்ளே நுழைய வேண்டியிருக்கிறது. பெண்கள் கண்களையும் சேர்த்து மூடிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இதற்கு என்னதான் வழி? "ஏன் இல்லை? அண்மையில் ஜெயலலிதா திருச்சிக்கு வந்த போது போலீஸ்காரர்கள் நின்று கொண்டு அதுமாதிரி ஆசாமிகளை லத்தி சார்ஜ் செய்த மாதிரி தினமும் செய்தால் இந்த அநாகரிகம் நடக்குமா?" என்று நாம் தங்கியிருந்த ஹோட்டலுக்கே வந்து கோபப்பட்டார் ஒரு பெண்மணி. "அந்த லத்தி சார்ஜை எங்கள் கல்லூரி காம்பவுண்டு சுவர் வரைக்கும் விஸ்தரிக்க வேண்டும்; அப்போதுதான் நாங்களும் எங்கள் கல்லூரிக்குப் போகும் போதும் வரும்போதும் கண்களைத் திறந்து வைத்துக் கொள்ள முடியும்!" என்றார்கள் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரியிலுள்ள சுற்றுச்சூழல் விழிப்புணர்வுச் சங்கத்திலிருந்து வந்து நம்மைச் சந்தித்த மூன்று மாணவிகள். ஆக, புதுமைப் பெண்கள் புறப்பட்டு விட்டார்கள்! ஆண்களே, இனியாவது அடக்கி வாசியுங்கள்!

●● திருச்சியிலுள்ள இன்னொரு நெரிசலான பகுதி காந்தி மார்க்கெட். அது ஒரு வழிப்பாதை என்றாலும் நெரிசலுக்குக் குறைவில்லை. காரணம், வியாபாரி களின் சாலையோர ஆக்ரமிப்பு. அதுவும் வெயில் காலங்களில் நாட்டுச் சர்க்கரை யைப் பிளாட்பாரங்களில் அம்பாரம் அம்பாரமாகக் குவித்து வைத்துக் கொண்டு, அழுக்குக் கால்களுடன் அதை மண்வெட்டியால் எடுத்து எடுத்துக் கோணிகளில் நிரப்புவதைப் பார்த்தால், வியாதியில்லாதவர்கள் கூட பயந்து போய் டாக்டரைத் தேடி ஓடுவார்கள்!

●● காந்தி மார்க்கெட்டில் சரக்குகளை இறக்கிய லாரிகள் எங்கே நிறுத்தப்படுகின்றன தெரியுமா? "கீழ அரண்சாலையிலுள்ள எங்கள் குடி



* திருவானைக்காவல் - சன்னதித் தெரு.



● அகிலா, நடராஜன், ஜெயந்தி நாதன், ராம் குமார்.

யிருப்புப் பகுதிகளில்தான்!'' என்கிறார் அப் பகுதியைச் சேர்ந்த கே. ராமச்சந்திரன். ''சும்மா நிறுத்தி வைத்திருந்தால் கூடப் பரவாயில்லை; அதை 'டர் டர்' என்று ஸ்டார்ட் செய்து ரிப்பேர் வேறு செய்கிறார்கள். அதனால் ஏகச் சத்தம், புகை!'' என்று நொந்து போகிறார், அவர். லாரிகள் போடும் சத்தத்தில் சுற்றுச் சூழல் பாது காப்புத் துறையினர் காதுகளில் இவர்களது கூக்குரல் எங்கே கேட்கப்போகிறது?

●● மலைக் கோட்டை உச்சிப் பிள்ளையார் ஏன் கிழக்கு நோக்கி இருக் கிறார் தெரியுமா? அவருக்குப் பின்னால் தெப்பக் குளம் இருப்பதால்தான்! ஆச்சரிய மாக இருக்கிறதா? சுற்றிலுமிருக்கிற கடைக் காரர்கள் தங்கள் குப்பை கூளங்களை யெல்லாம் கொட்டிக் கொட்டி அதைச் சாக் கடையாக்கிவிட்டால் பிள்ளையார் வேறு என்னதான் செய்வார்?

●● மக்களை இப்பிறவிப் பிணியி லிருந்து உய்யக் கொள்வதற்காகவே அவ தரித்ததால் அங்கு சிவனுக்கு 'உய்யக் கொண்டான்' என்ற திருப்பெயர். அவரது பெயராலேயே திருச்சியின் நடுநாயகமாக ஓடுகிறது உய்யக் கொண்டான் வாய்க்கால். இத்தனை அழகான திருப்பெயரை உடைய ஓடை, திருச்சி நகரச் சாக்கடைகளெல்லாம் அதில்தான் கலக்கின்றன என்பதால், பக்கத்

● திருவள்ளுவர் பஸ் நிலையம்; தவறான கட்டுமானம்.



தில் போனாலே குமட்டுகிறது! ஒரே ஒரு ஆறுதல்: உய்யக் கொண் டான் பெயரைக் கெடுத்தாலும் சென்னை கூவத்துக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது அந்த வாய்க் கால்!

●● திருச்சியில் சட்டக் கல் லூரி ஆரம்பிக்கப்பட்டுப் பத் தாண்டுகளுக்கு மேலாகியும்



● ஃபரீதா பேகம், ஜமீலா பேகம்: கலைக்காவிரி மாணவிகள்.

சொந்தக் கட்டடம் ஏதும் இல்லை. இன்ன மும் பாப்பம்மாள் சத்திரத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதால் மாணவ, மாணவியருக்குப் போதுமான அளவுக்கு பெஞ்ச் வசதிகள் கூட இல்லை. அவசரத்திற்குச் சுகாதாரமான டாய்லட் வசதிகளும் இல்லை. சரியான அளவுக்கு மின்விசிறிகளும் இல்லாததால் மாலைக் கல்லூரியில் படிப்பவர்கள் பாடங்களைக் கவனிப்பதைவிடக் கொசுக்களைக் கவ னித்து விரட்டுவதிலேயே குறியாக இருக் கிறார்கள். கல்லூரி முதல்வரைச் சந்தித்த போது, ''அருமையான கட்டடம் உரு வாகிக் கொண்டிருக்கிறது!'' என்றார். ''ஆமாம்; இதையேதான் ரொம்பக் கால மாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!'' என்கிறார்கள் மாணவர்கள், அலுப்புடன்!

●● திருச்சியை இணைக்கும் புதிய காவிரிப் பாலத்திற்கு இரவில் போதுமான விளக்கு வசதிகள் இல்லை. அதாவது தொடர்ந்து எரி பவை இரண்டு மூன்று விளக்கு கள்தாம். இந்த நிலையில் அருகி லேயே இருக்கும் பழைய பாலத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். நிர்வா கத்தினர் அதைச் சுத்தமாகவே கவனிக் காமல் விட்டு விட்டார்கள். பிற கென்ன? சமூகவிரோதிகளுக்கு ஏக குஷி! அண்மையில் பழைய பாலத் தில் ஒரு கொலை நடந்த போது,

ஸ்ரீ கந்தசுவாமி
பர்மனென்ட் பண்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 60, சாமி பண்டாரம் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 2

துவக்கம் : 1990
பதிவு எண்: 19722

பிக்சட் டிபாசிட் திட்டம்

45 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு*
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

*குறைந்த அளவு டிபாசிட் ரூ. 20,000/- காலம் 5 ஆண்டுகள். மாத வட்டிக்கான செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்.

சேவிங்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி உங்கள் டிபாசிட்டுகள்
45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது

காமதேனு மணி பேக் திட்டம்

பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்
5-ம் ஆண்டு முடிவில் ரூ. 6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
10-ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ. 6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
15-ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ. 50,000/- பெறுவீர்

பென்ஷனர் நலத்திட்டம்

சேமிப்பு ரூ. 13,000/- வட்டி வீதம் - **19%** கால வரம்பு 12 மாதங்கள்
காசோலைகள் முன்னதாகவே வழங்கப்படும். முதியோர்களும், விதவைகளும்,
உடல் ஊனமுற்றோர்களும் மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும்
சேர்ந்து பயன் பெறலாம்.

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்.

பிரதி மாத டிபாசிட்	ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை						
	12	24	36	48	60	72	84
ரூ. 25	330	715	1,180	1,800	2,510	3,350	4,370
ரூ.100	1,320	2,860	4,720	7,200	10,050	13,400	17,500

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ. 7500/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,20,000/- பெறலாம்
ரூ. 9000/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,44,000/- பெறலாம்

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள், நகைக்கடன் சவரனுக்கு ரூ. 2400/-
வட்டி விகிதம் ரூ. 1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை.
தருவதில் தாமதமில்லை. R.D கட்ட வேண்டியதில்லை...

(Friday Weekly Holiday)
பங்குதாரர்களுக்கு மட்டும்: Business Hours,
Week Days 9.00 A.M - 12.00 Noon.
&
2.30 P.M - 6.00 P.M
Sunday 9.00 A.M. 12.00 Noon.

சேர்மன்
P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
சீனியர் டிரஸ்டி - ஸ்ரீ கந்தகோட்டம்.
சென்னை - 3. ☎ 564599

SURESH

- சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி



● தெப்பக்குளமா? குப்பைக் குளமா?

மூன்று நாட்கள் கழித்துத்தான் அப்படி யொரு கொலை நடந்த விஷயமே போலீ ஸாருக்குத் தெரிய வந்ததாம். ''ஏன் அதை யும் பராமரித்து இருசக்கர வாகனங்கள் மட்டும் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யக் கூடாது?'' என்கிறார்கள் உள்ளூர் வாசிகள்.

●● ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்டுள்ள புதிய பஸ் நிலையம் பற்றி 'மாதம் ஒரு மாவட்டம்' சென்ற போதே எழுதினோம். அது இன்னமும் உபயோகிக்கப்படாமல் தான் கிடக்கிறது. காரணம், பஸ் நிலையத் திற்குச் செல்லும் வழிகள் குறுகலான தெருக் களாக இருப்பதால் பஸ்கள் உள்ளே செல்ல முடிவதில்லை என்பதுதான். இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிரமிக்க வைக்கும் தொழில் நுட்பத்தைக் கொண்டு கல்லணையைக் கட்டிய சோழநாட்டில் தான் இப்போது ஒரு பஸ் நிலையத்தைக் கூடச் சரியான முறையில் திட்டமிடாமல் கட்டியிருக்கிறார்கள்!

●● ஸ்ரீரங்கம் வாசிகளுக்கு ஒரு வழக்கம். 'ஒன்று, இரண்டு, மூன்று' என்று அவர்கள் எதையும் எண்ணத் துவங்க மாட் டார்கள். 'ஸ்ரீரங்கம், பெரியகோவில், மூன்று, நான்கு....' என்றுதான் ஆரம்பிப் பார்கள்.

●● வெளிநாட்டவரையும் கவரும் ஸ்ரீரங்கம் ஏனோ இதுவரை தி.மு.க. வினரைக் கவரவேயில்லை. ஆமாம்; 52 - ம் ஆண்டுப் பொதுத்தேர்தலிலிருந்து இன்று வரை தி.மு.க. வேட்பாளர்கள் யாரும் ஸ்ரீரங்கம் தொகுதியில் வெற்றி பெற்ற தேயில்லை!

●● திருவானைக்காவிலுள்ள ஸ்ரீஜம்புகேஸ்வரர்தான் நீரில் இருக்கிறார் என்பதில்லை; மழைக்காலத்தில் சன்னதித் தெரு முழுமையுமே வெள்ளத்தில்தான் இருக்கும்!

●● தஞ்சைப் பெரிய கோயிலின் விமானம் ஒரே கல்லால் ஆனதல்ல; அது ஆரஞ்சுச் சுளைபோல் பல கற்களைக் கொண்டு ஆனதுதான் என்பது 1946 லேயே இந்திய தொல் பொருள் ஆய்வுக் கழகம் கண்டு பிடித்துச் சொல்லிவிட்டது. அதன் பிறகு அந்த விமானத்தைத் தாங்கியுள்ள கல் ஒரே கல்லால் ஆனது என்று சொல்லப் பட்டது. இப்போது அதுவும் எழுகற்களால் ஆனதுதான் என்று கண்டு பிடிக்கப்பட் டுள்ளது. இதை ஆராய்ந்து சொன்னவர் திருச்சியிலுள்ள கண் டாக்டர் இரா. கலைக் கோவன். ''டாக்டர் மா. இராசமாணிக் கனார் வரலாற்றாய்வு மையம்'' என்று தமது தந்தையின் பெயரில் ஒரு தனிப்பட்ட ஆய்வு மையத்தை நடத்திக் கொண்டிருக்கும் கலைக் கோவன் அவ்வப்போது இப்படிப் பட்ட புதிய புதிய கண்டுபிடிப்புகளைச் செய்து கொண்டிருக்கிறார். திருச்சி பாரதி தாசன் பல்கலைக் கழகத்தில் வரலாற்றாய்வு செய்யும் மாணவ, மாணவியருக்கு இவர் பெரிதும் உதவியாக இருக்கிறார்!

●● போலீஸுக்கும் பொது மக்களுக்கும் எப்படிப்பட்ட உறவுகள் இருந்தால் அது நல்லுறவாக இருக்கும்? அதற்கு இரு தரப்பினரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இவற்றையெல்லாம் விளக்கிச் செம்மைப்படுத்துவதற்காகவே, 'போலீஸ் பொதுமக்கள் நல்லுறவு இயக்கம்' ஒன்று திருச்சியிலுள்ள கிராப்பட்டியில் துவங்கப் பட்டுள்ளது. ஆரம்பத்தில் போலீஸையும் பொது மக்களையும் சந்திக்க வைத்துக் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்வதற்காக இவர்கள் போலீஸை அணுகிய போது, 'இப்படியோர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலேயே எங்களுக்கும் மக்களுக்கும் நல்லுறவு இல்லையென்றல்லவா ஆகிறது!' என்று சில போலீஸார் மறுத்தார்களாம். பிறகு மெல்ல மெல்ல இவர்களது நல்லெண்ணம் புரிபட ஆரம்பித்தவுடன் இப்போது போலீஸார் முழுமையாக ஒத்துழைப்புத் தருகிறார்களாம்.

●● திருச்சியில் 'கலைக் காவிரி' என்று ஓர் அமைப்பு. நடத்துபவர்கள் கிறிஸ்துவர்களாக இருந்தாலும் பரத நாட்டியத்தையும் கர்நாடக இசையையும் முறைப்படி கற்றுத் தருகிறார்கள். இங்கு கிறிஸ்துவப் பெண்கள் மட்டுமல்ல; இந்துப் பெண்களும் முஸ்லீம் பெண்களும் கூட பரதநாட்டியம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். பாரதிதாசன் பல்கலைக் கழகமும் இவற்றை அங்கீகரித்திருக்கிறது. ''இது போன்ற சாஸ்திரீயக் கலைகளைப் பெரும்பாலும் வசதிபடைத்த வீட்டுப் பெண்களும் சிறுவர்களும்தான் கற்றுக் கொள்ள முன்வருகிறார்கள் என்கிற நிலை மாறி, ஏழைக் குடும்பத்தினரும் முன்வர வேண்டும் என்கிற நோக்கிலேயே இதை ஆரம்பித்தோம். ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்களுக்கு உபகாரச் சம்பளம் தந்து கூடக் கற்றுத் தந்து கொண்டிருக்கிறோம்!'' என்கிறார் கலைக் காவிரியின் இயக்குனர் மறைத்திரு ஜார்ஜ்.

●● 48 - ல் காந்திஜியின் அஸ்தி கொண்டுவரப்பட்ட போது, திருச்சியிலுள்ள சில பெண்கள் ஒன்று சேர்ந்து அஞ்சலி செய்வதற்காகப் பஜனை செய்தார்கள். அது தொடர்ந்தும் செய்யப்பட்டு வந்தது. வெறும் பஜனைக்குப் பதில் காந்திஜியின் நினைவாக ஏதாவது செய்ய வேண்டுமே என்று யோசித்த அந்தப் பெண்கள், ஆதரவற்ற பெண்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அதன் விளைவாக ஆரம்பிக்கப்பட்டதுதான் திருச்சி சேவா சங்கம். ஆதரவற்ற பெண்களுக்குக் கைத்தொழில்கள் கற்றுத் தருவ


சிறப்பு மாநாட்டின் சில துளிகள்!

சென்னை ஹியூமர் கிளப் மாநாட்டில் நரம்பியல் நிபுணர் டாக்டர். பி. ராமமூர்த்தி, நினைவு கூர்ந்த சம்பவம் : ''கலைஞர் கருணாநிதி, ஒருமுறை உடல் நலம் குன்றிப் படுத்திருந்த போது, பி. ராமமூர்த்தி அவரைச் சந்திக்கப் போயிருந்தார். ''அவசர வேலை. தலையைக் காட்டி விட்டு, உடனே போக வேண்டியிருக்கிறது'' என்று இவர் சொன்னதும், கலைஞர் பட்டென்று சொன்னாராம்: ''என்ன டாக்டர்! எல்லாரும் உங்களிடம் தலையைக் காட்டுகிறார்கள், நீங்கள் என்னடா வென்றால், என்னிடம் தலையைக் காட்ட வந்திருக்கிறீர்களே!''



பாக்யராஜ் பள்ளிப் பருவத்துச் சம்பவம் ஒன்று சொன்னார் :

இரவு நேரங்களில், கேரம் போர்டு ஆடி விட்டு, ஊர் சுற்றி விட்டு, வீடு திரும்ப நள்ளிரவு ஆகி விடும். வீட்டுக்கு வந்து, கதவைத் தட்டினால், அண்ணன் விழித்துக் கொண்டு, அடித்துப் பிய்த்து உதறி விடுவார். அதற்குப் பயந்து கொண்டு, புறக்கடை வழியே வந்து, மெதுவாய்க் குரல் கொடுத்தால், அம்மா வந்து கதவைத் திறந்து விடுவார். இது வழக்கம். ஒருநாள் நான் குரல் கொடுத்த போது, அம்மாவுக்கு முன் தாத்தா விழித்துக் கொண்டு, ''யாரடா அவன்?'' என்று உரக்கக் குரல் கொடுக்க, நான் பயந்து போய், மெதுவாய், ''நான் தான் பாக்யா'' என்று சன்னக் குரலில் கூற, அவரோ, ''பாக்யாவா?'' என்று சத்தம் போட்டுச் சொன்னதோடு ''இன்னேரம் வரை ஊரைச் சுத்திட்டு இப்பத்தான் வீட்டுக்கு வாரியா?'' என்று வேறு கேட்டு அமர்க்களப் படுத்தி விட்டார். 'பட்' 'பட்' டென்று அத்தனை லைட்களையும் போட்டுக் கொண்டு வீட்டில் அனைவரும் எழுந்து விட்டனர். கோபத்தில் அண்ணன் என்னை முறைக்க, தாத்தா, ''டேய்! அவன் பாவம்! கையால அடிக்காதே! இந்தா கொம்பு'' என்றாரே பார்க்கலாம்!



- ஜூலி

தோடு, அவர்களது குழந்தைகளுக்கும் பள்ளிக் கூடம் நடத்தப்படுகிறது.

●● ஒவ்வொரு மாதமும் பழக் கடைப் பூங்கா என்கிற இடத்தில் கவிதை யில் ஆர்வமுள்ள சிலர் ஒன்று கூடுகிறார் கள். தங்கள் கவிதைகளை அந்தக் கூட்டத் தில் அரங்கேற்றுகிறார்கள்; விமர்சிக்கிறார் கள். அப்படி அரங்கேறிய கவிதைகளில் சிறந்தவைற்றைத் தேர்வு செய்து 'சோலைக் குயில்கள்' என்ற தலைப்பில் வெளியாகும் தங்கள் கவிதை இதழ்களில் வெளியிடு கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று :

மோதிரக் கையால்
குட்டுப் பட்டதாகப்
பெருமைப் படுகிறீரே....!
நாளை
தங்கவாளால்
தலையை வெட்டுவார்கள்
சம்மதமா?

●● திருச்சி விமான நிலையம் எதிரி லுள்ள ஏயர்லைன் ரோடு படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறது. காரணம், அது ஏர்போர்ட் அதாரிடி ஆப் இந்தியாவுக்குச் சொந்தமானது என்பதால் உள்ளூர் நிர்வாக மான பொன்மலை நகராட்சி கண்டு கொள் ளாமலிருந்தது. சாலையின் நிலை படா வதியாக, வேறு வழியின்றித் தானே பரா மரிப்பதாகப் பொன்மலை நகராட்சி கேட்டது. மறுத்து விட்ட ஏர்போர்ட் அதாரிடி, தானும் பராமரிக்காமல் கிடப்பி லேயே போட்டுவிட்டது. இப்போது ஏர் போர்ட் அதாரிடி பொன்மலை நகராட்சி யிடம் ஒப்படைக்கத் தயார். ஆனால், நிதி வசதியில்லாததால் நகராட்சி தன் பொறுப் பில் ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறது!

●● திருச்சி நகரிலுள்ள பள்ளிகளுக் குப் பக்கத்திலுள்ள கம்பரசம்பேட்டை போன்ற ஊர்களிலிருந்தும் மாணவ, மாண வியர் வந்து படித்துக் கொண்டிருக்கிறார் கள். அவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வசதியும் உண்டு. பிறகென்ன சிரமம் என் கிறீர்களா? ''நினைப்படி கலெக்ஷனைக் கொண்டுதான் ஓட்டுநர், நடத்துனர்களுக் குத் தினசரி ஊக்கத் தொகை கொடுக்கப் படுகிறது என்பதால், இலவச பாஸ் வைத் துள்ள சிறுவர்களை மதித்து நீரன் பஸ்கள் நிற்பதேயில்லை; அப்படியே நின்று ஏற்றிக் கொண்டாலும் 'ஓசி பாஸா?' என்று கண் டக்டர்கள் தலையில் லேசாகக் குட்டுகிறார் கள்!'' என்கிறார்கள் தினமும் இதை அனு பவித்துக் கொண்டிருக்கும் பொடிசுகளான நடராஜன், ஜெயந்தி நாதன், ராம் குமார், அகிலா ஆகியோர்!

●● திருச்சியிலுள்ள உபயோகிப் பாளர் பாதுகாப்புக் குழு ரொம்பவும் 'ஆக்டிவ்' ஆக இருப்பது அனைவருக்கும் தெரியும். அண்மையில் இவர்கள் டெலி போன் இலாகாவோடு போராடி வெற்றி கண்ட சாதனை: விசாரணை எண்ணான 197 க்கு டயல் செய்தால் இனிமேல் இலவசம் என்பது!

●● திருச்சியை விட்டு ரயிலேறு முன் ஜங்ஷனில் கிடைத்த ஒரு கொசுறு : ஜங்ஷனிலுள்ள கடைகளையெல்லாம் இப் போது, ரயில்வே நிர்வாகம்தான் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்தக் கடை களில் குறிப்பிட்ட ஒரு பெயருள்ள பிஸ்கட், குறிப்பிட்ட ஒரு பெயருள்ள சிகரெட் என்று தான் விற்கப்படுகின்றன. காரணம் என்ன? ஊழியர்களிடமே விசாரித்தோம். பொது மக்கள், விரும்பி வாங்குவது போல் பல ரகப் பொருள்களை விற்க ஆரம்பித்தால் கடைகள் லாபம் காண ஆரம்பித்து விடும். அதை அனுமதிக்கலாமா? நஷ்டம் ஏற்பட் டால்தானே, அதையே காரணம் காட்டி கடைகளைத் தனியார்களுக்கு காண்ட்ராக் டுக்கு விட்டுக் 'கமிஷன்' பெற முடியும்!'' என்றார்கள் ரகசியமாக.

– சாங்கிருத்தியாயன்,
தில்லப்பா.

அடுத்த இதழில்......

●● **''தட்டிக் கேட்கத்தான் தோழமைக் கட்சி!''**

– மூப்பனார் சிறப்புப் பேட்டி



T. S. S. NIDHI LTD

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Office: 230, R. K. Mutt Road, Mylapore, Madras 600 004. Phone: 77503.

THIRUVANMIYUR BRANCH : 112, Thiruvalluvar Salai, Kamraj Nagar, Madras 600 041.

DEPOSIT SCHEMES

FIXED DEPOSIT SCHEME

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

Period (months)	Rate of Interest P.A.	CASH INCENTIVE
6	15 %	not applicable
12	17 %	1/2 %
24	18 %	1 %
36	19 %	1 1/2 %
60	20 %	2 %

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan)

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

DEPOSIT AMOUNT RS.	PERIOD (Months)	MATURITY VALUE RS.	CASH INCENTIVE
1000	12	1180	1/2 %
1000	24	1425	1 %
1000	36	1760	1 %
1000	45	2025	1 1/2 %
1000	67	3025	2 %

HIGHLIGHTS:

* Recognised as a **NIDHI COMPANY** by Central Government of India.
* Company is in 20th year of Service.
* Monthly interest warrants for the financial year would be despatched in advance at the beginning of the year for fixed deposits.
* No tax deduction at source if the fixed deposit holders submits 15 H in case. For any financial year interest exceeds Rs. 2500/-.
* Loan facility upto 75 % on Fixed Deposit and 85 % on Recurring Deposit paid-up amount.
* Pre-mature repayment facility as per terms and conditions
* Your Deposit amount is advanced against Gold Jewels and immovable properties of Madras city limits.
* Transaction with members only. (Rupees Two only for Membership.)

JEWEL LOAN

Jewel loans granted on Gold ornaments at Rs. 255/- per gram i.e. Rs. 2040/- per sovereign (8 gm).

Recurring Deposit not required.

SENIOR CITIZEN DEPOSIT SCHEME 19 % p.a.

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS.)

Minimum Deposit Rs. 10000/- **Period - 12 months.**

RECURRING DEPOSIT SCHEME

(Minimum of Rs. 10/- and in Multiples of Rs. 10/-)

MONTHLY DEPOSIT	100	100	100	100	100	100
PERIOD (Months)	12	24	36	48	60	72
MATURITY VALUE	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9%

	BUSINESS HOURS		WEEKLY HOLIDAY
	WEEK DAYS	SUNDAYS	
HEAD OFFICE Mylapore	9 am - 12.30pm 2.30 pm - 5 pm	9 am to 12.30pm -	FRIDAY
BRANCH OFFICE Thiruvanmiyur	9 am - 12.30pm 2.30 pm - 5 pm	9 am to 12.30pm -	TUESDAY

M. B. PANDURANGAM
President

P. S. SAMBASIVAM
Secretary



சுட்டுத் தள்ளிட்டேன்!
ஐயோ! உறுமுதே...
கொர்ர்ர்... கொர்ர்ர்...
அம்மாடியோவ்!
உங்களைக் காப்பாத்தத்தான் வந்திருக்கேன், படகில ஏறுங்க...!
தமிழக அரசின் நிவாரணப் பணி
அது சரி! ஆனா, படகில ஒரு பெரிய ஓட்டை இருக்குதே, கவனிக்காம விட்டுட்டீங்களா?
மேடம், காப்பாத்துங்க...
தி.மு.க.



கல்கி

1992
நவம்பர் 29
மலர் : 51
இதழ் : 18
ஆங்கீரச
கார்த்திகை 14



இயற்கையின் சீற்றமும் அரசின் தூக்கமும்!

மழை பொய்த்தால் கடும் வறட்சி; பெய்தாலோ புயல், வெள்ளம்! 'மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி' என்பது போல் மக்களுக்கு அவதி. இவை ஆண்டுதோறும் நாம் பார்த்து வருபவைதாம்; ஆனால் பாடம் கற்கவில்லை! இயற்கையின் சீற்றத்தை மனிதனால் தவிர்த்து விட முடியாது என்றாலும் அதைச் சமாளிக்கப் போதிய முன்னேற்பாடுகளைச் செய்ய முடியும். இன்று வானிலை ஸாட்டலைட் என்றும் முன்னெச்சரிக்கை அமைப்புகள் என்றும் எத்தனையோ விஞ்ஞான முன்னேற்றங்கள் உள்ளன. புயல் வீசப் போவதைப் பல நாட்கள் முன்பாகவே படம் பிடித்தே தந்து விடுகின்றன. வயர்லெஸ் வசதிகள், தந்தி, டெலிஃபோன் என்று எவ்வளவோ செய்தித் தொடர்புச் சாதனங்கள். இத்தனை இருந்தும் முந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் (அதிகாரபூர்வமாக 211) செத்து மடிவதைத் தவிர்க்க முடியவில்லை என்றால் ஆட்சியில் இருப்பவர்களைப் பற்றி உயர்வாக எப்படி எண்ண முடியும்? 'முதல்வர் ஜெயலலிதா தமது கடமையில் தவறி விட்டார்' என்று ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் சந்திரலேகா கூறியிருப்பது கடுமையாகத் தோன்றினாலும் அர்த்தமுள்ளதாகவே ஒலிக்கிறது.

'இயற்கையின் சீற்றத்துக்கு அரசு என்ன செய்ய முடியும்?' என்று கேட்டுத் தப்பி விட முடியாது. புயலுக்கான அறிகுறிகள் இருப்பதாகப் பல நாட்கள் முன்னதாகவே செய்திகள் வெளியானதுமே தலைமைச் செயலகம் சுறுசுறுப்படைந்ததா? அமைச்சர்களும் அதிகாரிகளும் கூடி ஒரு எமெர்ஜென்ஸி திட்டம் வகுத்தார்களா? அந்தத் திட்டம் கலெக்டர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதா? அவர்கள் தங்களுக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகளை உசுப்பி விட்டார்களா? இந்தக் கேள்விகளுக்கு விடை தேவை.

விக்கிரமசிங்கபுரம் கிராமத்து மக்கள், 'மேல் மட்டத்தில் தாமிரபரணி ஆற்று நீர் திறந்து விடப்படுகிறது என்ற விவரமே எங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை' என்று முதல்வரிடம் குறைப்பட்டிருப்பது ஒன்றே போதும்; இந்த அரசு முன்னெச்சரிக்கையுடனோ திறம்படவோ இயங்கவில்லை என்பதற்கு வேறு சாட்சியம் தேவையில்லை. பல்வேறு ஏரிகள் உடைப்பு எடுத்திருப்பதும் இதையே உணர்த்துகின்றன. கலெக்டர்களும் உத்தரவு வரக் காத்திராமல் முன்னேற்பாடுகளைத் தாங்களே கவனிக்கலாம். இவர்களிடம் பிரசார வேன், மைக், வீடியோ என்று பல சாதனங்கள் உள்ளன. ஆபத்தான இடங்களிலிருந்து மக்களை அப்புறப்படுத்தியிருக்கலாம். செய்யவில்லை.

புயல் வீச வேண்டுமென்பது கூட இல்லை. ஒரு மழை பெய்தாலே பல இடங்களில் முழங்காலளவு நீர் தேங்குகிறது. கேட்டால், 'தாழ்வான பகுதிகளில் வீடு கட்டிக் கொண்டது உங்கள் தவறு' என்று பதில். 'அப்படியானால் ஏன் அனுமதி வழங்கப்பட்டது? Betterment tax எப்படி, எதற்காக வசூலிக்கப்பட்டது?' என்றால் பதில் இல்லை. இவையெல்லாம் அதிகாரிகளிடம் பொறுப்புணர்வு குறைந்து, சுலபமாகப் பணம் பண்ணும் ஆசை அதிகரித்திருப்பதையே உணர்த்தும். இதற்கு வழிகாட்டியவர்கள், வழிகாட்டி வருபவர்கள் அரசியல்வாதிகளே.

வருமுன் காக்கும் நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு வழக்கம் போல் ஹெலிகாப்டரில் பறந்து சேதத்தைக் கணிப்பது; வேஷ்டி, புடவை, உணவு விநியோகிப்பது என்று காரியங்கள் நடக்கின்றன. பலராம் ஜாக்கர் மனம் வைத்து, டில்லிக்கு சிபாரிசு செய்து, டில்லி நிதி ஒதுக்கி... நிவாரணப் பணிகளாவது ஒழுங்காக நடக்குமா? சந்தேகம்தான்! பாதிக்கு மேல் இடை வழியிலேயே கபளீகரம் ஆகி விடும். உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு 30 முதல் 40 சதம் போய்ச் சேர்ந்தாலே பெரிய காரியம்!

மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைப் பணம் பண்ண ஒரு வாய்ப்பாகக் கட்சிக்காரர்கள் கருதாமல், மெய்யான சேவை புரிந்தால் 'ஜெ' அரசு தற்போது இழந்து வரும் செல்வாக்கை ஓரளவு திரும்பப் பெற வாய்ப்பு உண்டு. தி.மு.க., காங்கிரஸ் தொண்டர்களுக்கும் மக்களுக்கு நேரடியாகப் பணிபுரிய ஒரு வாய்ப்பு. இத்துடன் இவர்கள், 'அரசின் உதவி மக்களைச் சரியானபடி சென்றடைகிறதா?' என்று கண்காணிக்கவும் செய்யலாம். இன்று மக்களிடம் பெறும் நற்பெயர், நாளை தேர்தலில் உதவும்.

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.



அசோக் நகர்



சீனிவாசன்



சிவமாலா

"மழை பெய்தால் எங்கள் நகரில் இடுப்பளவு தண்ணீர் தேங்கி நிற்கிறது. வடிவதற்குப் பல நாட்கள் ஆகின்றன. நீங்கள் ஏதாவது வழிசெய்து தர வேண்டும்" என்று திருச்சிராப்பள்ளி புறநகர்வாசிகள் சங்கமொன்று ஒரு பொறுப்பான அதிகாரியை நேரிடையாகச் சந்தித்துக் கேட்டதாம். உடனே அந்த அதிகாரி "ஏன்யா, பள்ளத்திலே வீடு கட்டிக் கொண்டு, தண்ணீர் தேங்குதுன்னா நாங்க என்ன செய்ய முடியும்?" என்று எரிச்சலுடன் திருப்பிக் கேட்டாராம். அதே வேகத்துடன் சங்கத்தினரும், "டவுன் பிளான் காரங்க



எம்.எம். நகர்



தியாகராச நகர்

புலம்பிக் கொண்டிருக்கும் புறநகர் வாசிகள்!

அப்ரூவ் பண்ணியதாலே தானே நாங்க வீடுகளைக் கட்டினோம்" என்று கடகட பதில் சொல்ல, அந்த அதிகாரி அடங்கிப் போய் விட்டாராம். ஆயினும் அவர்கள் பிரச்னை இன்று வரை அடங்கிப் போகவில்லை.

குறிப்பாக தியாகராச நகர்ப் பகுதி. சுமார் 300 வீடுகள். கல்லூரி ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், கடன்பட்டு, கஷ்டப்பட்டுக் கட்டிய வீடுகள். வருடா வருடம் மழைக் காலம் ஏன்தான் வருகிறதென்று வெறுத்துப் போகும் அளவுக்கு நொந்து போயிருக்கிறார்கள். குடமுருட்டி ஆற்றின் கரைகள் உயரமாக இல்லாததால், வெள்ளம், கரைகளை மீறிக் கொண்டு இந்த நகர்களின் ஊடே செல்கிறது. ஆற்றை ஆழப்படுத்திக் கரைகளை உயர்த்திக் கட்டி

னால் வெள்ளம் கரைக்குள்ளேயே அடங்கிக் கொண்டு போகும். இதை இந்தப் பகுதி மக்களும் எவ்வளவோ முறை சொல்லிப் பார்த்து அலுத்து விட்டார்கள். ஒன்றும் நடக்கக் காணோம்.

''சென்ற முறை எங்கள் சட்டமன்ற உறுப்பினர் மாலாவைக் கூட்டி வந்து காண்பித்தோம். பாவம்! அந்தம்மாவும் முட்டிக்கால் தண்ணியில் வந்தாங்க. வந்துட்டுப் போனவங்க, அங்க இங்கன்னு போன் பேசினாங்க. அவ்வளவுதான்; ஒண்ணும் நடக்கலை...'' என்றார் தியாகராசநகர் வளர்ச்சிக் குழுவின் செயலாளர் வைத்தியலிங்கம்.

கஷ்டமாக இருக்கிறதாம். காரணம் ஆட்டோக்கள், ரிக்ஷாக்கள் தண்ணீரில் வர மறுப்பதுதான். போதாததற்குப் பக்கத்துக் குடிசைப் பகுதியிலிருந்து சாக்கடைத் தண்ணீரும் சேர்ந்துவர கொசுக்கள் ஜாம் ஜாமென்று வளர, மஞ்சள் காமாலை, யானைக்கால் என்று வேறு அவஸ்தைகள்.

வயலூர் சாலையில் இருக்கும் தெற்கு ராமலிங்க நகரின் பிரச்னை கொஞ்சம் வித்தியாசமானது. காந்தான் வாய்க்கால், தொட்டி


...ம். எம். நகருக்கு எதிர்ப்புறமும் இதே கதிதான்


● ராமலிங்க நகர்

தண்ணீர் பல நாட்கள் தேங்கி இருப்பதால், பாம்புப் பயம் மட்டுமன்றிப் புதிதாகக் கட்டிய வீடுகளும் பலவீனப்பட்டுப் போகின்றனவாம். ''மழை பெய்தால் அணைக்கட்டுப் பகுதியில்தான் இன்ஜினியர்கள் நிலைமையைக் கண்காணித்துக் கொண்டிருப்பார்கள் என்றால் எங்கள் நிலையும் அதுதான். நீர் மட்டம் ஏறுகிறதா என்று கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும். கொஞ்சம் ஏமாந்தால் வீட்டிற்குள் வெள்ளம் புகுந்துவிடும்'' என்றார் அவர்.

இவர் நிலையும், எம்.எம். நகர் வாசியான கஸ்தூரி ரங்கனின் நிலையும் ஏறக்குறைய ஒன்றுதான். நகரில் கடைசியாகக் கஸ்தூரி ரங்கனின் வீடு உள்ளதால், மெயின் ரோட்டின் இறக்கத்திலிருந்து சுமார் அரை கி.மீ. முட்டிக்கால் நீரில்தான் போக வேண்டும். (நாங்கள் அப்படித்தான் போனோம்!) வழியில் பள்ளம் இருந்தால் குளிப்பதும் தெருவிலேயே முடிந்து விடும்.

''பேசாமல் வெயில் காலத்தில் இங்கேயும் மழைக் காலத்துக்கு வேறு இடத்திலும் இருக்கலாம்'' என்று சொல்லிச் சிரிக்கிறார் கஸ்தூரி ரங்கன். தண்ணீர் தேங்கியிருப்பதால், நோயாளிகளை ஆஸ்பத்திரிக்கும், டாக்டர்களிடமும் கூட்டிச் செல்ல மிகவும்

வாய்க்கால் என்று இரு வாய்க்கால்கள் நகரின் இருபுறத்திலும் ஒரு காலத்தில் ஓடிக் கொண்டு இருந்தன. இப்போது ஒரு வாய்க்கால் சுத்தமாக ஆக்ரமிக்கப்பட்டு விட்டது. மற்றொரு வாய்க்காலில் ஆக்ரமிப்பு நடந்து கொண்டிருக்கிறது! இந்த ஆக்ரமிப்புகளின் விளைவாக கால்வாய்கள் வடிகால்களாகச் செயல்பட முடியாத நிலையில் இருப்பதால் நகரில் தண்ணீர் தேங்கி நிற்கிறது.

ஆர்.சி. டிவிஷன் இன்ஜினீயரிடம் சொன்னால் உடனே அவர், ''ஸார்... ஒரு காலத்திலே, பயிருக்குத் தண்ணீர் வர உபயோகித்த கால்வாய்கள் இவை. ஆனால் இப்போது இந்தப் பகுதியில் வீடுகள் கட்டப்பட்டதால் கால்வாய்களால் பயனேதும் இல்லை. ஆகையால் நாங்கள் எதுவும் செலவழிக்க முடியாது'' என்று சொல்கிறாராம். ''அது சரி, கால்வாய்களில் ஆக்ரமிப்பை அகற்றுவதற்குக் கூடச் செலவாகுமா? இந்த நிலையில் நாங்கள் என்னதான் செய்வது? தெருக்களில் நடந்து போக வேண்டுமே என்பதால் அவ்வப்போது, எங்கள் செலவில் மண்ணைக் கொண்டு வந்து போட்டுக் கொண்டிருக்கிறோம்'' என்றார் அசோசியேஷனின் செயலாளர் வி. முத்து.

சுருமண்டபம் பகுதியில் உள்ள அசோக் நகரும் மேற்சொன்ன நகர்களின் பட்டியலில் சேர வேண்டியதுதான். பிராட்டியூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த பகுதி இது.

24%

டெப்பாசிட்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

டெப்பாசிட் தொகை
ரூ. 1000/- அதற்கு மேலும்
குறைந்த கால அளவு
12 மாதங்கள்
வட்டி விகிதம்
மாதம் ஒன்றுக்கு
ரூ. 100/-க்கு ரூ. 2/- வீதம்
வட்டி அனுப்புதல்
ஒவ்வொரு மாதமும்

COCK BRAND FILE
TRADE MARK

Your Partner in Progress
Since 1947.

MUTHUVEL INDUSTRIES

Mfrs. OF COCK BRAND FILES
Angappa Chettiar Industrial Complex
20-A, ROUND ROAD, P.B. NO.32,
DINDIGUL 624 001.
☎ : O: 5260 & 7637. R : 5643 & 3726

சாலைகளில் பயிரிட்டால் மூன்று மாதத்தில் விளைச்சலைக் காணலாம். ''அமைச்சர் கு. ப. கிருஷ்ணன் தமது கிராமமான குறுமணிக்கு நல்ல தார் ரோடு போட்டுக் கொண்டிருக்கிறார். கொஞ்சம் எங்களையும் கவனிக்கக் கூடாதா?'' என்று கேட்கிறார் இளைஞர் சீனிவாசன். பக்கத்தில் உள்ள கோரையாற்றில் ஆகாசத் தாமரைச் செடிகள் வளர்ந்து அதனால் உண்டான கொசுப் பண்ணை நகர்வாசிகளுக்குப் பெரிய தொல்லை. நீரன் வேறு தனது பங்குக்குச் சோதனை கொடுக்கிறான். ராம்ஜி நகர்ப் பகுதியிலிருந்து வரும் பஸ்கள் நிரம்பி வழிவதால் இந்தப் பகுதியில் நிற்பதில்லையாம். ''கட் சர்வீஸ் விட்டால் நன்றாக இருக்கும்'' என்கிறார் சீனிவாசன்.

தேவராய நகர் சியாமளாவுக்கோ வீட்டுக்கு வீடு தண்ணீர்க் குழாய் கனெக்ஷன் கொடுக்கவில்லையென்று வருத்தம். கோரையாற்றில் போர் போட்டு தண்ணீர் எடுத்து மேல் நிலைத் தொட்டியில் நிரப்பிக் குடிநீர் கொடுத்தாலும் வீட்டுக்கு கனெக்ஷன் கொடுப்பதில் ஏனோ அபிஷேகபுரம் பஞ்சாயத்து அசிரத்தையாக இருக்கிறது.

தண்ணீர் கொடுப்பதற்குத்தான் அபிஷேகபுரம் பஞ்சாயத்து தயங்குகிறதே தவிர, சுடுகாட்டுப் புகையை வழங்குவதில் வெகு தாராளமாய் இருக்கிறது. ராம்நகர், இரு நகர்ப் பகுதியை ஒட்டின மாதிரி இருக்கிறது ஒரு சுடுகாடு. இதில் ஒரு பாதி, பிராட்டியூர் பஞ்சாயத்தைச் சேர்ந்தது. அந்தப் பகுதியில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் அபிஷேகபுரத்தைச் சேர்ந்த பக்கத்தில் சுற்றுச் சுவர் இல்லாதது மட்டுமல்ல; எரிக்கும் இடத்தில் புகைபோக்கி இல்லாததால் பிணம் எரிக்கப்படும் போது சுற்றிலும் வசிக்கும் மக்கள் மூக்கை மூடிக் கொள்ளும் நிலை. (மாதம் ஒரு தொகுதி வந்த போதே குறிப்பிடப்பட்ட விஷயம் இது)

''எவ்வளவோ சொல்லியாகி விட்டது. ஒன்றும் நடக்கக் காணோம்'' என்று வருத்தப்படுகிறார் அசோசியேஷன் தலைவரான வேம்பு அய்யர். ''சுற்றுச் சுவர் இல்லாததால் வெந்தும், வேகாததுமான எலும்புகளை நாய்கள் கவ்விக் கொண்டு வந்து தெருக்களிலும் (கொஞ்சம் ஏமாந்தால்) வீடுகளிலும் போட்டு விட்டுச் செல்கின்றன'' என்கிறார் குடிசைவாசியான முனிராஜு.

இந்தப் பகுதியில் இயங்கிக் கொண்டிருந்த கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தை அரசு எடுத்துக் கொண்டு, பின்னர் 'செயல்படவில்லை' என்று மூடி விட்டதாம். ''கிட்டத்தட்ட இரண்டு லட்ச ரூபாய் பணம் பள்ளிக்கூடம், மேனிலைத் தொட்டி, கம்யூனிடி ஹால் போன்றவை கட்ட வைத்திருந்தோம். சப்ஜாடா பணமும் அரசாங்க கஜானாவிற்குப் போய்ச் சேர்ந்து விட்டதே!'' என்று வருத்தப்படுகிறார் வேம்பு அய்யர்.

– தில்லப்பா

I love dancing.......
I also love dressing up for it!



GOKULAM
The monthly magazine for children
BUY YOUR CHILD
A COPY TODAY!


96 pages for
just Rs. 3!

Brings out an
Art-Appreciation issue
for December!

GOKULAM,
EKKADUTHANGAL,
MADRAS - 600 097.

6

ம.வே.சிவகுமார்



"ஆமா, இப்படி ஃபுல் ஸ்பீட்லே ஓடி வர்றியே. பச்சை உடம்பு என்னத்துக்காகும்?''

கேட்டுக்கு ஓடி வந்த விஜயலக்ஷ்மியைப் பார்த்து லக்ஷ்மிநாராயணன் இவ்விதமாய்க் கேட்கவும் விஷயம் புரிந்து வீட்டுக்கார நவகோடி அம்மாளின் முகம் சந்தோஷமாகி விடுகிறது. அவள் நெற்றியில் இருக்கிற குங்குமத்துக்கு அடையாளமாக படுத்த படுக்கையாய் விபத்தொன்றின் காரணமாக மாடியிலேயே கோமா நிலையில் இருக்கிற அவளின் கணவனைத் தவிர அவர்களின் தாம்பத்யம் இந்த வீட்டில் இருபது வருடங்களுக்கு மேலாக இனிய விளைவுகள் எதுவும் இல்லாமலேயே கழிந்து விட்டது. இதோ, திருமணமாகி வந்த கருக்கில் அந்த வீட்டு ராசியை மாற்ற விஜயலக்ஷ்மிக்குச் சீக்கிரமே ஒரு குழந்தை பிறக்கப் போகிறது.

''அடீ விஜி, திருட்டுக் கழுதை. சொல்லவே இல்லே பாரு'' என்று மகிழ்ச்சியில் அங்கலாய்த்து ஆன வயதிற்கு அடையாளம் தெரியாதவளாய் நவகோடி அம்மாள் இனிப்பு எடுத்து வர இருட்டில் தன் வீட்டிற்கு ஓடுகிறாள்.

கொல்லைப்புறம். இரவு உணவு முடிந்து, லக்ஷ்மிநாராயணன் சிகரெட் பிடிப்பதற்காகக் கதவு திறந்து வெளியே வருகிறான். ''காசை விடு, உடம்பு என்னத்துக்கு ஆகும்? அடுத்த தடவை அவன் இரண்டாவது சிகரெட் பற்ற வைக்க முயன்றால் பிடுங்கியெறி. நான் இருக்கிறேன்'' என்று சற்றுமுன் கையில் டார்ச் லைட்டுடன் வாசல் இருட்டில் வீட்டுக்கார நவகோடி அம்மாள் சொன்ன வார்த்தைகள் மனத்தில் எதிரொலிக்க, விஜயக்ஷ்மி விரல்கள் நடுங்கக் காத்திருக்கிறாள்.

அன்றைக்கு அலுவலகத்திற்குப் பிரபல சினிமா டைரக்டர் விஸ்வநாத ரெட்டி வந்திருந்ததையும், தனக்குள் வெகுநாட்களாய் இருக்கிற தன் சினிமா கனவுகளையும் பற்றிச் சொல்லிக் கொண்டே, பேச்சுவாக்கில் இன்னொரு சிகரெட் எடுத்து



லக்ஷ்மிநாராயணன் பற்ற வைக்கக் குனிகிறான். கசங்கிய சிகரெட் தொலைவில் விழுகிறது. விஜயலக்ஷ்மியின் கன்னத்தில் லக்ஷ்மிநாராயணனின் தடித்த விரல்கள் எதிர்பாராத கோபத்தில் ஆழமாய்ப் பதிகின்றன. அதே வேகத்தில் முளைத்த நீர் முத்து, அவள் விழியோரம் தளும்பி நிற்கிறது.

"மேலே மின்விசிறி சுழல்கிறது. வெறும் தரையில் லக்ஷ்மிநாராயணன் தலைக்குக் கை வைத்துப் படுத்திருக்கிறான். வேறு அறையில் படுக்கை விரித்த, விஜயலக்ஷ்மி, சமாதானத்துக்கு மெல்லத் தலைநீட்டுகிறாள்.

"என்ன?"

"பால்."

"வேண்டாம்!"

லக்ஷ்மிநாராயணன் வேறுபக்கம் திரும்பிக் கொள்கிறான்.

"படுக்கை விரிச்சாச்சு."

"விளக்கை அணை. போய்த் தூங்கு."

இருளில் தயங்கி நெடுநேரம் நின்று விஜயலக்ஷ்மியும் ஓர் ஓரமாய்ச் சுருண்டு கொள்கிறாள். லொட லொட என்று மின்விசிறியின் சப்தம் மட்டும் அப்புறமும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

மறுநாள் காலையில் எழுந்ததுமே கொல்லைப்புறத்தில் லக்ஷ்மிநாராயணன் குரல் அதிர்கிறது. போட்டது போட்டபடி பயந்து ஓடி வந்து விஜயலக்ஷ்மி அவன் முன் மிரண்டு நிற்கிறாள்.

"மணி என்ன?"

"ஏழு."

"போ, அந்த ரூம் கடிகாரத்துலே பார்த்துச் சரியாச் சொல்லு."

பயத்தில் கால்கள் இடற, விஜயலக்ஷ்மி விரைவில் திரும்புகிறாள்.

"என்ன?"

"கடிகாரம் நின்னு போச்சு."

"உம். ஏழு பத்து. படுக்கையை உன் அப்பன்காரன் வந்து சுத்தி வைப்பானா?"

கோபத்தில் லக்ஷ்மிநாராயணன் பல்லைக் கடிக்கிறான். விஜயலக்ஷ்மியின் கண்கள் இப்போதும் தளும்பி விடுகின்றன.

படுக்கையின் முதல் மடிப்பில் வாழ்த்து அட்டை. அன்புள்ள மனைவிக்கு, ஆசைக் கணவனின் பிறந்த நாள் வாழ்த்துக்கள். போர்வையின் அடியில் புதுப்புடவை. மேலும் மடித்ததில் பலவித மேக்அப் சாதனங்கள். தலையணை உறைக்குள் அவள் தூங்கும் போது அளவெடுத்த அழகிய மோதிரம் கொண்ட, அதனினும் அழகான நகைப் பெட்டி. லக்ஷ்மிநாராயணன், விஜயலக்ஷ்மியைத் தலையில் செல்லமாய்க் குட்டுகிறான். படுக்கையைச் சுற்றி வைக்காமல் அவள் இன்னும் என்ன செய்து



கொண்டிருக்கிறான்? இடுப்பை வளைத்துச் சிரித்துக் கொண்டே வந்த கேள்விக்கு, அவளின் பதில் பார்வையில், காதல் கூடியிருக்கிறது.

அவனே மறந்து விட்ட அவனின் பிறந்த நாளை முன்னிட்டு இன்றைக்கு அலுவலகம் விடுமுறை. சமையல் வேண்டாம். சாப்பாடு வெளியே. அப்புறம் சினிமா. அடையாறில் அவள் அத்தை வீடு. அனைத்துக்கும் மேலாக, பொது மக்களுக்கோர் நற்செய்தி. முதல் நாள் இரவு விஜயலக்ஷ்மியின் கன்னத்தில் விரல்கள் பதிந்து விட்ட தவறுக்குப் பிராயச் சித்தமாக, இனிமேல் அவன் சிகரெட்டே பிடிக்கப் போவதில்லை. பிறந்த நாளின் பெரிய பரிசை உள்ளங்கையில் சத்தியம் செய்து கொடுத்து, உளம் மகிழ்ந்து உதடுகளில் அவள் ஒற்றிய உற்சாகத்தில் தூக்கி லக்ஷ்மிநாராயணன் அவளை மூச்சிரைக்க இறக்கி விடுகிறான்.

''யப்பாடி, எப்படித்தான் சினிமாவில் ஹீரோயினைத் தூக்கறாங்களோ?''

மின்சார ரயில் கடந்து போகிறது. தம்பதிகள் சற்று தூரம் தண்டவாளத்தில் சேர்ந்து நடந்து சரிவில் இறங்குகிறார்கள். மீன் மார்க்கெட்டைக் கடக்கும் போது, மூக்கைப் பிடித்துப் பிராணாயாமம். சேற்றுக்குக் குறுக்கே போட்டிருக்கிற கற்களில் விஜயலக்ஷ்மி நடக்கிறாள். அவள் விழுந்து விடாமல் பார்த்துக் கொண்டு லக்ஷ்மிநாராயணன் பின்தொடர்கிறான். அருகருகே அமர்ந்து தம்பதிகள் பஸ்ஸில் அயனாவரம் தாண்டுகிறார்கள். அப்படியே சேர்ந்து அமர்ந்து, குடைராட்டினம் இறங்குகிறது. பீச்சில் லக்ஷ்மிநாராயணன் ஏறிய குதிரை தறிகெட்டு ஓடுகிறது. தெருவோரம் நின்று கோன் ஐஸ் சாப்பிடுகிற மத்தியதர சந்தோஷங்கள். குறும்பு மேவுகிற முகத்துடன் லக்ஷ்மிநாராயணன் இரவில் மனைவியை நெருங்குகிறான். வீட்டுக்கார நவகோடி அம்மாள் இட்டு விட்ட மருதாணிக் கைகளை மேற்படி முகத்தின் முன்னே விஜயலக்ஷ்மி பரிகாசமாய் நீட்டுகிறாள்.

அறைக்கதவு தாளிட்டிருக்கிறது. தனிமையில் ஆளுயரக் கண்ணாடி முன் லக்ஷ்மி நாராயணன் நிற்கிறான். முகத்தில் பெரிய தாய் மீசை எழுதியிருக்கிறான். தலையில் பாரதி போல் முண்டாசு. மனைவி விழித்து எழாமல் பீரோவைத் திறந்து கல்யாணக் கோட்டை எடுத்து, அணிந்து கொள்கிறான். நெற்றியில் வட்டமாய்க் குங்குமப் பொட்டு.

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே....

அசப்பில் பாரதி வந்து மீண்டும் குதித்தாற் போல் கம்பீரம். லக்ஷ்மிநாராயணன் மனைவியின் பாராட்டு வேண்டி அவளை உறக்கத்திலிருந்து எழுப்புகிறான். இருட்டில் எதிரே பாரதியைக் கண்டதும் விஜயலக்ஷ்மி பயத்தில் அலறிவிடுகிறாள்.

விஜயலக்ஷ்மியின் தகப்பனாரிடமிருந்து மறுநாள் கடிதம் வருகிறது. டில்லியில் யாவரும் சௌக்கியம். அவன் ஏன் கடிதமே போடுகிறதில்லை? சதா சர்வ காலமும் அவர்கள் டில்லியில் அவன் நினைவிலேயே இருக்கிறார்கள். வெகு தொலைவில் இருக்கும்போது பெற்றவர்கள் மனம் என்ன பாடுபடும்? அதையெல்லாம் யோசித்து வாரம் ஒரு கடிதமாவது அவன் போட வேண்டும். அவள் குளித்துக் கொண்டிருக்கிறாளா என்று அவர் மனைவி கேட்டு எழுதச் சொன்னாள். மாப்பிள்ளையை விசாரித்ததாய்ச் சொல்லவும். அவர் ஆபீஸ் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருப்பார் என நினைக்கிறேன். கட்டாயம் பரீட்சை எழுதச் சொல்லி நான் சொன்னதாக அவரிடம் சொல்லவும். மற்றவை உன் கடிதம் கண்டு. உன் பிரியமுள்ள அப்பா.

வரவேற்பறையில் கடிதத்தைப் படித்து விட்டுக் கூண்டுப்புலி போல் குறுக்கேயும், நெடுக்கேயும் நடந்து, அவ்வப்போது நின்று 'ங்கொப்பன்' கடிதத்தைக் கோபமாய் விமர்சித்துத் தன்னை அவர் ஆபீஸ் பரீட்சை எழுதச் சொன்னது அத்து மீறல் என்றும், அவ்வாறு முன்பின் யோசியாமல் கடிதம் எழுதியதற்கு இந்து திருமணச் சட்டத்தின் கீழ் மாமனாரை மட்டும் தனியே விவாகரத்து செய்ய வழி இருக்கிறதா? என்று நல்ல வக்கீலைப் பார்க்கப் போவதாகச் சொல்லிக் கொண்டே சட்டையணிந்து லக்ஷ்மிநாராயணன் கோபமாய்ப் புறப்படுகிறான்.

வீட்டுக்கார நவகோடி அம்மாள் சொற்படி, அன்று மாலை விஜயலக்ஷ்மி தடபுடலாய் அலங்காரம் செய்து கொள்கிறாள். வாசலில் ஆட்டோ வந்து நிற்கிறது. சப்தத்தில் விஜயலக்ஷ்மி ஆவலுடன் வாசலுக்கு ஓடி வருகிறாள். மதுரையிலிருந்து வந்திருக்கிற அவள் மாமனாரை இறக்கி விட்டு, செம்மண் மேடு ஏறி ஆட்டோ மறைகிறது.

மூந்தெரு யூனியன் அலுவலகம். மாமனாருக்குக் காட்டமான பதில் கடிதம் ஒன்றை நண்பர்களுடன் கலந்து தயார் செய்து, ஒரு யூனியன் கடிதம் போலவே டைப் அடித்துப் பிரதிகள் எடுத்து அவற்றில் ஒன்றை இதர யூனியன் கவர்களுடன் டில்லிக்கு ஜி.பி.ஓவில் கடைசித் தபாலில்



சத்தியம் அது நிச்சயம்

'உண்மையைத் தவிர வேறு எதையும் பேச மாட்டேன், நேர்மையைத் தவிர வேறு எந்தப் பாதையிலும் நடக்கமாட்டேன்' என்று உறுதியாகத் தலை நிமிர்ந்து நிற்கும் பள்ளி ஆசிரியர் சிவகுமார் சந்திக்கும் பிரச்னைகள் இன்றைய நடைமுறை வாழ்க்கையின் பிரதிபலிப்புகள்.

தமக்கு நியாயமாக வந்து சேர வேண்டிய ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டு விட்டதைப் பற்றிக் கலெக்டரிடம் முறையிட வரும் சிவகுமாரை, அவரது அறை வாசலில் நிற்கும் பியூன் உள்ளங்கையை நீட்டித் தடுத்து நிறுத்த -

'ஊதிய உயர்வு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, மாமூல் தந்து உள்ளே நுழைய அனுமதி பெறமாட்டேன்' என அவர் வெகுண்டு திரும்புவதும்,

அவரது மகளைத் திருமணம் பேச வரும் மாப்பிள்ளை வீட்டார், 'பெண் மிகவும் பிடித்துவிட்டது. கட்டியிருக்கும் சேலையுடனும் அணிந்திருக்கும் நகையுடனும் அனுப்பி வைத்தால் போதும்' என்று கூற -

'அப்படிச் செய்ய முடியாது. காரணம், அவை இரண்டுமே இரவலாகப் பெற்றவை' என்று உண்மையைக் கூறிவிட, அதன் விளைவாக அவர்கள் திருமணப் பேச்சை முறித்துக் கொண்டு போய் விடுவதும் -

இவருடைய அந்த நேர்மைக்கு உதாரணங்கள்.

சிரிக்கவைப்பதோடு சிந்திக்கவும் தூண்டும் சின்னச் சின்ன நிகழ்ச்சிகள் - இடைவேளை வரை.

இந்தக் கதாபாத்திரத்தின் தன்மையை ரத்தினச் சுருக்கமாக வர்ணிப்பது ஓரஸ் மோகனின் ஒரு வசனம்.

செல்வமும் செல்வாக்கும் நிறைந்த எம்.எல்.ஏ. ஒருவருடன் சிவகுமாருக்குத் தெருவில் நேரும் ஒரு மோதலில், மத்தியஸ்தத்துக்கு வரும் காவலர் ஓரஸ் மோகன் எம்.எல்.ஏ. வின் பக்கம் சாய்ந்து சிவகுமாரிடம் கூறுகிறார் : ''நீங்க ஏட்டுச் சட்டம்தான் படிச்சிருக்கீங்க. நடைமுறைச் சட்டம் என்னன்னு உங்களுக்குத் தெரியலை.''

இடை வேளைக்குப்பின் இதற்கு நேர் மாறான கதை.

நேர்மை அவரைக் குடும்பத்தோடு பிளாட்பாரத்துக்குக் கொண்டு வந்து விட, அதைத் தொடர்ந்த அவலத்தின் உச்சத்தில் (ரொம்ப ரொம்ப நம்ப முடியாத சம்பவங்கள்) 'இனி பொய்யைத் தவிர வேறு எதையுமே பேசுவதில்லை' என்கிற முடிவுக்கு அவர் வர, விரைவில் அவர் செல்வச் சீமான். அமர்க்களமான பேச்சும் அலட்டலான நடையுடை பாவனைகளும்... அடேயப்பா!

செய்யும் தவறுகள் விசுவரூபம் எடுத்து அவரை அழுத்த, அவமானத்துக்குப் பயந்து அவர் மனைவி தற்கொலை செய்து கொண்டு விட, நேர்மைக்குத் திரும்பும் அவர் மீண்டும் தெருவில்....

பரிமளிப்பவர் சிவகுமார்.

அதற்குப் பாதை வகுத்திருப்பவர் இயக்குனர்.

நேர்மையான ஒருவரின் கதி தெருவுக்கு வருவதுதான் என்கிற கதையின் முடிவு இன்றைய சமூகத்தில் ஓரளவு யதார்த்தம்தான் என்றாலும் ஏதோ கொஞ்சம் கொஞ்சம் தென்படுகிற நேர்மையாளர்களையும் பயமுறுத்துவது போல் அல்லவா இருக்கிறது!

– சி.ஆர்.கே.

சேர்த்து விட்டு, நண்பர்களிடம் விடைபெற்று லக்ஷ்மிநாராயணன் கரங்கப் பாதையில் இறங்குகிறான்.

இருட்டில் ரிக்ஷா வந்து நிற்கிற சப்தம். விஜயலக்ஷ்மி ஓடிப்போய் வாசல் விளக்கைப் போடுகிறாள். கையில் டார்ச் லைட்டுடன் நவகோடி அம்மாள் அவள் அருகே நிற்கிறாள். வெளிச்சத்தில் யூனியனை மறக்கச் செய்கிற விஜயலக்ஷ்மியின் அதிரடி அலங்காரங்களை லக்ஷ்மிநாராயணன் ஆச்சர்யமாய்ப் பார்க்கிறான்.

''ஹை, சிவப்புப் புடைவை. எங்க யூனியன் கலர்.''

நுனிவிரலில் வட்டமடித்து நவகோடி அம்மாளிடம் விஜயலக்ஷ்மியைக் காட்டித் தொடர்கிறான்.

''காஸ்காரர் வந்தா பார்த்துக்கங்க மாமி. சிலிண்டர்னு நினைச்சு மாத்தி எடுத்துக்கிட்டுப் போயிடப் போறாரு.''

கண் சிமிட்டி சிரித்துக் கொண்டே வட்டம் தொடர்கிறது. வரவேற்பறையில் விளக்கு இல்லை. ஒலித்த குரலில் தூக்கம் கெட்டு, அப்பா வெளியே வருகிறார். வெட்கத்தில் வாயடைத்து லக்ஷ்மிநாராயணன் அசடு வழிகிறான்.

(தொடரும்)

திருச்சி - 2 தொகுதியின் எம்.எல்.ஏ. (அ.இ.அ.தி.மு.க.) வான செல்வி டாக்டர் ஜி.ஆர் மாலா பற்றி அவ்வப்போது பரபரப்பாகப் பத்திரிகைகளில் எழுதப்படுவதுண்டு. அவர் தமது ஆட்களைக் கொண்டு, பத்திரிகையாளர்களைத் தாக்கியதாகவும் அண்மையில் ஒரு செய்தி. இவற்றுக்கெல்லாம் அவர் பதில் என்ன? அவரையே நேரடியாகச் சந்தித்துக் கேட்டோம்.

''தேர்தலின் போது நீங்கள் தொகுதி மக்களுக்கு என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்தீர்கள்?''

''குடிநீர், சாலை வசதி போன்ற அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதி கொடுத்தேன். அவற்றையும் முடிந்தவரை நான் நிறைவேற்றிக் கொண்டு தான் இருக்கிறேன். மெட்டல் ரோடு உள்ள இடங்களில் தார் ரோடும், ரோடே போடப் படாத இடங்களில் மெட்டல் ரோடும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் பகுதி பகுதியாக வேலை நடந்து கொண்டு தான் இருக்கிறது.''

''அதிகாரிகள் உங்களுக்கு ஒத்துழைப்புத் தருகிறார்களா?''

''தருகிறார்கள். ஆயினும் அவர்கள் சில நேரங்களில் சில வேலைகளை அவசர அவசரமாகச் செய்வதால் அதே வேலைகளை மீண்டும் செய்ய வேண்டியதாகி விடுகிறது. உதாரணமாக ஆர்.வி. அவர்கள் குடியரசுத் தலைவராக இருந்தபோது ஒரு விழாவில் கலந்து கொள்வதற்காகத் திருச்சிக்கு வந்திருந்தார். அப்போது சத்திரம் பஸ் நிலையம் அருகில் உள்ள ஒரு சாலையைப் புதுப்பித்தார்கள். சில மாதங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் அந்தச் சாலை பழைய நிலைக்கே வந்து விட்டது. அதிகாரிகள் செய்யும் இதுமாதிரி வேலைகள் பற்றித்தான் எனக்குப் புரியவில்லை.''

''அதிகாரிகளைக் கேட்டால் நிதி வசதி போதவில்லை என்கிறார்களே?''

''தமது நாட்டின் பொருளாதார நிலை பற்றி அனைவருக்கும் தெரியும். நாம் பணக்கார நாடு அல்ல. இந்தச் சூழ்நிலையில் இருப்பதைக் கொண்டு கொஞ்சமாகச் செய்தாலும் அதைச் சிறப்பாகச் செய்ய முடியாதா என்ன? நிச்சயம் முடியும். இந்த விஷயத்தில் அதிகாரிகள் இன்னும் போதிய கவனம் செலுத்த வேண்டும்.''

''உங்கள் தொகுதிக்குள் வரும் புறநகர்ப் பகுதிகளெல்லாம் சிறிதளவு மழை பெய்தால் கூட தண்ணீரில் மூழ்கிவிடுகின்றன. நாங்களே பல இடங்களுக்கு முழங்கால் அளவுத் தண்ணீரில்தான் நடந்து செல்ல வேண்டியிருந்தது.''

''உண்மை. அந்தப் பகுதிகள் இயற்கையாகவே தாழ்வான பகுதிகள் என்பதால்

''சமூக விரோதிகள்தான் என்னை ரவுடிபோலச் சித்திரிக்கிறார்கள்!''



மழைக் காலத்தில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க முடியாது. அங்கே வீடுகட்டிக் கொண்டிருக்கும் நடுத்தர மக்களில் பலர் இந்த விஷயம் புரியாமல் - விற்பனையாளர் களின் வார்த்தை ஜாலங்களில் ஏமாந்து - பிளாட்டுகள் வாங்கி வீடுகளையும் கட்டிக் கொண்டு விட்டார்கள். இன்னும் சொல்லப் போனால் கழிவு நீர் செல்லும் கால்வாய் களையும் வடிகால்களையும் ஆக்ரமித்துப் பிளாட் போட்டுக் கூட விற்றிருக்கிறார்கள். உதாரணத்திற்கு வயலூர் ரோட்டிலுள்ள குமரன் நகர் பஸ் ஸ்டாப் அருகில் வடிகால் களின் மேலேயே கடைகள் கட்டப்பட் டிருப்பதை நீங்களே பார்த்திருப்பீர்கள். இந்த நிலையில் தண்ணீர் தேங்காமல் என்ன செய்யும்?''

''ஆக்ரமிப்புகளை அகற்ற வேண்டியது தானே?''

''எந்த ஆக்ரமிப்பையும் இப்போது சுலபமாக அகற்ற முடிவதில்லை. உடனே நீதி மன்றங்களுக்குச் சென்று தடையுத்தரவு களை வாங்கி விடுகிறார்கள். இந்த நிலை யில் என்னதான் செய்வது? இருக்கிற வடி கால்களை ஆழப்படுத்தி முடிந்த வரை தேங்குகிற தண்ணீரின் அளவைத்தான் குறைக்க முடியும். அதற்கான திட்டங் களைத்தான் தீட்டிக் கொண்டிருக்கிறோம்; முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கி றோம்!''

''கருமண்டபம் அருகில் ஒரு சுடுகாடு. அதில் பிணங்களை எரிக்கும் போது வரும் துர்நாற்றம் அருகில் குடியிருக்கும் மக்க ளுக்கு மிகுந்த தொல்லையாக இருக்கிறது. அதனால் புகை போக்கியுள்ள ஓர் அமைப்பை ஏற்படுத்திப் பிணங்களை எரியூட்டினால் புகை உயரத்தில் சென்று விடும். அதனால் பாதிப்பும் குறையும். இதை யாரும் கண்டு கொள்ளவில்லை என்கிறார்களே?''

''இந்தப் பிரச்னையே இப்போது நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரிய வருகிறது. அவர்களில் யாரும் என்னிடம் வந்து சொல்லவேயில்லை. சொல்லியிருந் தால் ஏற்பாடு செய்திருக்கலாம். சாதாரண மாக நடுத்தர மக்கள் தங்கள் குறைகளை நேரில் வந்து சொல்லுவதே இல்லை. அதனாலேயே பல பிரச்னைகள் தீர்க்கப் படாமல் போய்விடுகின்றன. இந்த நிலை யும் மாற வேண்டும்.''

''உண்மைதான். ஆயினும் உங்களைப் பற்றிச் சில பத்திரிகைகளில் அவ்வப்போது வரும் சில செய்திகள் - நீங்கள் பத்திரிகை யாளர்களையே ஆள் வைத்து அடிக்கிறீர்கள் என்கிற செய்திகள் - மக்களிடம் ஒருவித பய உணர்ச்சியைத் தோற்றுவிக்கலாமே? உதார ணத்திற்கு அண்மையில் நடந்த ஸ்ரீரங்கம் நிகழ்ச்சி....?''

''அந்த நிகழ்ச்சியில் உண்மையை மறைத்து விட்டுத் தங்களுக்குச் சாதகமான பகுதிகளை மட்டும் மிகைப்படுத்தி எழுதி விட்டார்கள். உண்மையை நான் சொல்லுகி றேன். ஸ்ரீரங்கம் ஜீயர் சுவாமிகள் மறைந்த போது ஒரு பக்தை என்கிற முறையில் நானும் சென்றிருந்தேன். அந்த நிலையில் - அந்த இடத்தில் - ஜீயர் சுவாமிகளின் இறுதிச் சடங்குகளுக்குத்தான் முக்கியத்துவம் தர வேண்டும். ஆனால் சில பத்திரிகை யாளர்கள் அவற்றுக்கு முக்கியத்துவம் தராமல் என்னைப் படமெடுப்பதிலேயே குறியாக இருந்தார்கள். அதை நான் தடுத் தேன்; கேட்க வில்லை. அதனால் கட்சிக் காரர்கள் அவர்களிடமிருந்து கேமராவை வாங்கிக் கொண்டார்கள்; ஏன் கட்டாய மாய்ப் பறித்துக் கொண்டார்கள் என்றும் சொல்லலாம். இந்தச் சூழ்நிலையில் அவர்கள் தங்களின் குற்ற உணர்வு உறுத்த ஓடவும் ஆரம்பித்தார்கள். அதனால் சந்தேகப்பட்ட கட்சிக்காரர்களில் சிலர் அவர்களைத் துரத்தவும் செய்தார்கள் என்பதும் உண்மைதான். ஆனால் யாரும் யாரையும் அடிக்கவில்லை. ஒரு பத்திரிகை யாளரின் கண்ணாடி பறிக்கப்பட்ட போது, நானே கட்சிக்காரர்களைக் கண்டித்துத் திருப்பித் தரச் சொன்னேன். இதுதான் அன்று நடந்த உண்மை.''

''இந்த நிலையில் அவர்கள் தாக்கப் பட்டதாக எழுதுவதற்கு என்ன காரணம்?''

''பரபரப்பான செய்தி வேண்டும் என்பதற்காக இருக்கலாம். அல்லது மற்ற அரசியல்வாதிகள் சிலரைப் போல், நான் திருடர்களுக்கு அவ்வப்போது பணம் தர மறுத்ததும் காரணமாக இருக்கலாம்.''

''திருடர்கள் உங்களிடம் பணம் கேட் டார்களா என்ன?''

''ஆமாம். சில மஞ்சள் பத்திரிகை யாளர்கள், தங்களைப் பற்றி எழுதா மலிருக்க வேண்டுமே என்பதற்காகச் சில அரசியல்வாதிகள் பணம் தந்து கொண்டு தான் இருக்கிறார்கள். நான் அப்படியெல் லாம் யாருக்கும் தருவதில்லை. இதனா லேயே அவர்களுக்கு என் மேல் கோபம்.''

''முன்பு கூட உங்களை ஒரு சாராய வழக்கில் சம்பந்தப்படுத்திச் செய்திகள் வந்தனவே?''

''அதுவும் பொய்ச் செய்திதான். கள்ளச் சாராயத்தைப் போலீஸார் பிடித்ததாக ஒரு மாலைப் பத்திரிகையில் போட்டோவுடன் செய்தி வெளியானது.. அதே போட் டோவைப் பிரசுரித்து என் வீட்டில் பிடித்த தாக ஒரு வாரப் பத்திரிகையில் எழுதி


வார்கள்! இப்படியொரு பொய்யை எப்படி அவர்கள் மனம் கூசாமல் எழுதுகிறார்கள் என்பது எனக்கு இன்னமும் ஆச்சரிய மாகவே இருக்கிறது! உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். ஒரு பெண் எங்கள் பகுதி யில் கள்ளச் சாராயம் விற்றார். மக்கள் வந்து என்னிடம் சொன்னார்கள். நான் எப்படி சும்மா இருக்க முடியும்? அந்தப் பெண்ணின் கள்ளச் சாராய வியாபாரத்திற்கு எதிராகத்தானே செயல்பட முடியும்? உடனே அந்தப் பெண் என்மேல் புகார் சொல்ல ஆரம்பித்துவிட்டார். இது போன்ற சமூகவிரோதிகள்தான் என்னை ஏதோ வொரு ரவுடிபோல் சித்திரிக்கிறார்கள். மஞ்சள் பத்திரிகையாளர்களும் அவர்கள் சொல்லுவதைப் பெரிதுபடுத்திப் போட்டு என்னை மிரட்டிப் பார்க்கிறார்கள். என்றைக்கு இருந்தாலும் உண்மைதான் ஜெயிக்கும் என்பதால் நான் எல்லா வற்றையும் பொறுத்துக் கொள்ளப் பழகி விட்டேன்!''

இப்படி ஒவ்வொரு கேள்வியையும் சகஜமாக எடுத்துக் கொண்டு பதிலளித்த மாலா, எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர். தந்தை ஒரு ஹோமியோபதி டாக்டர். தந்தை முதலில் தி.க. விலிருந்தாலும் எம்.ஜி.ஆர் புதிய கட்சியைத் துவங்கியபோது அதில் வந்து சேர்ந்துவிட்டார். அ.இ.அ.தி.மு.க. வில் மாலா உறுப்பினரானது 86 - ல் தான் என்றாலும் சிறு வயது முதற்கொண்டே எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகை. அரசு மருத் துவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த மாலா, முழு நேரமும் அரசியலில் இறங்கி யதற்குக் காரணம், கட்சியின் தலைமைப் பொறுப்புக்கு ஒரு பெண்ணான ஜெய லலிதா வந்ததுதானாம். திருச்சிக்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று பேசியதுதான் இவர் சட்டசபையில் பேசிய கன்னிப் பேச்சு. அது வெற்றியடைந்தது குறித்து ஏக சந்தோஷத்தில் இருந்தாலும் அரசியல் பணிகள் காரணமாகத் தமது மருத்துவத் தொழிலைத் தொடர முடி யாமல் போவது குறித்து வருத்தப்படவே செய்கிறார். ஏன் இன்னமும் திருமணம் செய்து கொள்ளவில்லை? நல்ல மாப் பிள்ளையின் வருகைக்காகக் காத்திருப் பதாகச் சொல்கிறார்.


- இளங்கோவன்

அட்டை வண்ணப்படங்களும் திருச்சி நகரம் தொடர்பான மற்ற படங்களும் : **யோகா.**





● ஏ.கே. அந்தோணி



● கருணாகரன்

கேரள காங்கிரஸ்: பிரதமரின் தலைவலி நெ.4!

எல்லா மாநிலங்களிலும் இருப்பது போல், கேரள காங்கிரஸ் கட்சியிலும் இரண்டு கோஷ்டிகள் உண்டு. முதல்வர் கருணாகரனை எதிர்க்கும் கோஷ்டியின் தலைவர் ஏ.கே. அந்தோணி என்பது ஊரறிந்த ரகசியம். இருப்பினும் கட்சியிலும் ஆட்சியிலும் கருணாகரனுக்குத் தனிப்பட்ட முறையில் நல்ல செல்வாக்கு இருப்பதால் அவர் ஆட்சியைக் கட்டிக்காத்து வருகிறார்.

இந்த நிலையில் கருணா கரனது மகன் முரளீதரன் மெதுவாக அரசியலில் தமது மூக்கை நுழைத்தார். கோழிக்கோடு எம்.பி. தொகுதியில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றுவிட்டார். அப்படியே அவர் டெல்லி பக்கம் போயிருந்தால் பிரச்னையே ஏற்பட்டிருக்காது. ஆனால் அவர் அப்படிச் செய்ய வில்லை.

எம்.பியாக இருந்து கொண்டு கேரள அரசியலில் தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கினார். முதல்வர் கருணாகரனிடம் போலீஸ் இலாகா இருப்பதால் அதனையும் ''தாராளமாக'' முரளி பயன்படுத்தத் தொடங்கினார். இதனால் கருணாகரன் கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கே கொஞ்சம் பயம் ஏற்படத் தொடங்கியது. எங்கே முரளியின் இந்தப் போக்கு தங்களுக்கு மக்களிடையே அவப் பெயரை உண்டாக்கி விடுமோ என பயப்படத் தொடங்கினார்கள்.

இந்த நிலையில் எம்.எல்.ஏ. கார்த்திகேயன், கருணாகரன் ஆதரவு கோஷ்டியிலேயே இன்னொரு கோஷ்டியை உருவாக்கி கருணாகரனைத் திருத்தப் போவதாகக் கூறி, அவர் மீது பல குற்றச்சாட்டுகளை அடுக்கத் தொடங்கி உள்ளார். அரசியலில் ஒரு ''சீர்திருத்தவாதி''யாகக் கார்த்திகேயனைக் கேரளப் பத்திரிகைகள் வர்ணித்துக் கொண் டிருக்கின்றன. இவரை ஏ.கே. அந்தோணிதான் உடன் இருந்து தூண்டி விட்டுக் கொண்டிருப்பதாகக் கருணாகரன் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்தப் பிரச்னையில் ஏ.கே. அந்தோணி இதுவரையிலும் வாயையே திறக்கவில்லை.

கார்த்திகேயன் வெறும் எம்.எல்.ஏ. மட்டுமல்ல, கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டியில் உதவித் தலைவராகவும் இருக்கிறார். தலைவராக இருப்பவர் வயலார் ரவி. இவர் முன்னாள் மந்திரி, முன்னாள் சபாநாயகர் என்பதுடன் கருணாகரனது ஆதரவாளரும் கூட. கருணாகரன் போலீஸ் இலாகாவை விட்டு விட வேண்டும் என இப்போது கார்த்திகேயன் கூறத் தொடங்கி உள்ளார். போலீஸ் இலாகாவின் துணை இல்லாவிட்டால் முரளியால் செயல்பட முடியாது என்பது இவரது நம்பிக்கை. அத்துடன் இவர் டெல்லி சென்று காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் கருணாகரன் ஆட்சி பற்றி புகார் கூறப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

இது பற்றி கருணாகரன் என்ன கூறுகிறார் தெரியுமா? '' எனது அரசியல் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். அதில் தவறுகள் இருந்தால் சொல்லுங்கள், நான் திருத்திக் கொள்கிறேன். அதே சமயம் என்னைக் கவிழ்க்கலாம் என்று நினைத்தால் அது நடக்காது''

தமது ஆதரவு கோஷ்டியில் இருந்த கார்த்திகேயன் தம்மை எதிர்க்கத் தொடங்கி இருக்கும் இந்தச் சூழ்நிலையில் தமது எதிர் கோஷ்டியின் தலைவர் ஏ.கே. அந்தோனையைத் தம் பக்கம் இழுத்தால் என்ன என்பது பற்றியும் கருணாகரன் சிந்தித்து வருவதாகத் தோன்றுகிறது. அந்தக் கோணத்திலும் அவர் காய்களை நகர்த்திக் கொண்டுதான் இருக்கிறார்.

காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள இந்தக் கோஷ்டிச் சண்டைகளால் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவன எதிர்க் கட்சிகள்தாம். குறிப்பாக இடது கம்யூனிஸ்ட் கட்சி. கருணாகரன் ஆட்சியைக் கவிழ்க்கும் வேலையைத் தங்களுக்கு விட்டு வைக்காமல், காங்கிரஸ்காரர்களே எடுத்துக் கொண்டிருப்பதில் இடது கம்யூனிஸ்டுகளுக்குப் பரம திருப்தி.

– எஸ்.எஸ். மணி.

ரிப்பன்

முதல் நாள் மாலையிலிருந்தே மீனா, நச்சரித்துக் கொண்டிருந்தாள்....

''ஆத்தா! எனக்கு ரெண்டு புளு ரிப்பன் வேணும்... நாளன்னிக்கு ஸ்கூலுக்குக் கட்டிக்கிட்டுப் போகணும்... இல்லேன்னா, டீச்சர் அடிப்பாக....''

நாளை மறுநாள், யாரோ ஒரு மாண்புமிகு அமைச்சர், அந்தக் கிராமத்தின் வழியாகப் பக்கத்து ஊருக்குப் போகிறாராம்! அவரை வரவேற்க வழியிலே மலர் தூவி மரியாதை செய்ய, பள்ளிக் குழந்தைகளை நிற்க வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். காலையில், எல்லாப் பள்ளி மாணவ மாணவிகளும் சீருடை அணிந்து, சாலையின் இரு புறங்களிலும் அணிவகுத்து நின்று, அமைச்சர் தன் ரத கஜ துரக பதாதிகளுடன் விஜயம் செய்யும் வரை காத்திருந்து, பூக்களைத் தூவ வேண்டுமாம். சீருடையோடு, பெண்குழந்தைகள் இரட்டை ஜடை பின்னி, புளு ரிப்பன் கட்டி வர வேண்டுமாம்....

மீனாவிடம் ஏற்கெனவே இருந்த இரண்டு ரிப்பன்களில் ஒன்று, எண்ணெய்ப் பிசுக்கு ஏறி எலி வாய்க்குள் போய்விட்டது. இன்னொன்று வெளுத்துப் போய் நீலம் என்று சொல்வதற்கே தகுதியிழந்துவிட்டது. ஆகையால், புதிதாக இரண்டு ரிப்பன்கள் வாங்கித் தரும்படி நச்சரித்துக் கொண்டிருந்தாள் மீனா....

ஆத்தா பேச்சி, செய்வதறியாது கையைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

முதல் நாள் காலையில்தான், தான் பால் ஊற்றும் வாடிக்கையாளர் டீச்சர் பார்வதியின் வீட்டில், பால் கணக்குப் பண்ணிப் பணம் வாங்கி, மாட்டுக்குப் புண்ணாக்கும் வைக்கோலும் வாங்கிப் போட்டிருந்தாள்.

கையில் ஒரு காசு கூட இல்லாமல் இருக்கும் நிலையில், திடீரென்று இரண்டு ரிப்பன் வாங்க, ரூபாய்க்கு எங்கே போவாள் பேச்சி?....

இந்நேரம் ஆண்டியப்பன் உயிரோடிருந்திருந்தால் - தன் ஒரே செல்ல மகள் மீனாவுக்காக, எப்படியாவது, யாரிடமாவது போய்க் கெஞ்சிக் கூத்தாடி இரண்டு ரூபாய் வாங்கி, ரிப்பன்களுடன் வீடு திரும்பியிருப்பான்....

அவன் மகளிடம் வைத்திருந்த அளவுக்கு, மதுவின் மேலும் ஆசை வைத்திருந்ததே எமனாக முடிந்தது.... ஒரு நாள் அவன், கண்மண் தெரியாமல் 'ஏற்றிக் கொண்டு' சாலையில் வர, அதே மாதிரி கண்மண் தெரியாமல் குடித்துவிட்டு வந்த லாரி, அவன் மேல் ஏறிவிட்டது...

அந்தக் காலத்தில் பேச்சியின் வீட்டு மாட்டுக் கொட்டகையில், ஏழெட்டுப் பால் மாடுகள் நிற்கும். ஆண்டியப்பன், தன் வருமானம் போதாத போதெல்லாம், ஒவ்வொரு மாடாக விற்றுக் குடித்துக் கடைசியில் ஒரே ஒரு மாடுதான், மாட்டுக் கொட்டகை என்ற பெயரைக் காப்பாற்ற, மீந்திருந்தது....

ஏழெட்டு மாடுகள் இருந்தபோது, வாடிக்கைக்காரர்களுக்கு ஊற்றியது போக, மீதியிருக்கும் பாலை, யாராவது குழந்தைக்கு என்று கேட்டால், காசு வாங்காமல் கொடுப்பார்கள் பேச்சியும் ஆண்டியப்பனும்... இருவருக்கும் திருமணமாகிப் பல



வருடங்கள் வரை, அவள் 'வயிற்றிலே பூச்சியோ புழுவோ' வைக்காததால், குழந்தைகளுக்குப் பால் இலவசமாகக் கொடுத்துப் புண்ணியத்தைச் சேர்க்க ஆரம்பித்தார்கள்....

அந்தப் புண்ணியத்தாலோ என்னவோ, எட்டு ஆண்டுகள் கழித்து, மீனா அந்தக் குடிசையிலே அவதரித்தாள்....

கணவன் இறந்த பிறகு, ஒரு மாட்டுப் பாலைக் கறந்து டீச்சர் வீட்டுக்கு ஊற்றும் வருமானத்தோடு, அவ்வப்போது வயலில் நாற்று நடவு, களையெடுப்பு, கதிர் அறுப்பு, புஞ்சையில் கடலை வெட்டு என்று கூலி வேலைக்குப் போவாள் பேச்சி. யாரிடமும் கடன் வாங்காமல், கட்டு செட்டாய்க் குடும்பத்தை நடத்திக் கொண்டு, மீனாவைப் படிக்கவைத்துக் கொண்டிருந்தாள்....

அவள் பால் ஊற்றும் டீச்சர் வீட்டார், காலையில் திடீரென்று பக்கத்து நகரத்துக்கு ஏதோ வேலையாகப் போயிருந்தார்கள். நாளை மறுநாள், அமைச்சரைத் தரிசிக்கத் தான் வருவார்கள். ஆகையால், இப்போது அவர்களிடம் பணம் கேட்டு வாங்க முடியாது.... கிராமத்தில் வேறு யாரிடமும் கடன் கேட்டு அவளுக்குப் பழக்கமில்லை.

பேச்சிக்கு உள்ள ஒரே வழி - டீச்சர் வீட்டுக்குக் கொடுக்காமலிருக்கும் பாலை, வேறு யாருக்காவது விற்பதுதான்... விற்று இரண்டு ரூபாய் கிடைத்துவிட்டால், சாயந்திரம் சைக்கிளில் டவுனுக்கு, சினிமாவுக்கோ, கடைத் தெருவுக்கோ போகும் ஒருவரிடம் பணத்தைக் கொடுத்து டவுனில் புளூ ரிப்பன் இரண்டு வாங்கி வரச் சொல்லி விடலாம்...

ஆனால், இந்தக் கிராமத்தில் யார் இரண்டு ஆழாக்குப் பாலைக் காக கொடுத்து வாங்கப் போகிறார்கள்?....

காலைப் பாலை அப்படியே அடுப்பில் வைத்துக் காய்ச்சினாள் பேச்சி. அந்தப் பாலின் மேலிருந்து ஆவி வெளியேறி மறைந்த போது, மகளின் ரிப்பன் ஆசையும் ஆவியாகி மறைவது போல், பேச்சியின் கண்களுக்குள் ஒரு காட்சி தோன்றி நீரில் கரைந்தது....

மாலையில் சீக்கிரமே பாலைக் கறந்து தயாராக வைத்துக் கொண்டிருந்தாள் பேச்சி.... யாராவது, ஆத்திரம் அவசரமாகப் பால் வேண்டும் என்று வரமாட்டார்களா என்ற ஓர் நப்பாசை அவள் மனத்திற்குள் எழும்பிக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில், கையில் ஒரு செம்புடன், அடுத்த தெரு கருப்பாயி வேகமாக அங்கே வந்தாள் :

''பேச்சி! பாலிருக்கா!'' என்று அவள் கேட்டதும், பேச்சியின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றவில்லை; மிகவும் ஜாக்கிரதை உணர்வுடன் அவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

கருப்பாயியைப் பற்றி அந்தக் கிராமத்தில் வெகு பிரசித்தம்! 'விதை நெல் வாங்கியதற்கான பணத்தைக் கதிர் அறுவடைக்குப் பிறகு கூட கொடுக்க மாட்டாள்' என்று எல்லோருக்கும் தெரியும்.

''பாலா?... எதுக்கு, கருப்பாயி?'' என்று சாதாரணமாகக் கேட்டாள் பேச்சி.

''அதை ஏன் கேக்கிறே?... காரைக்குடியிலேருந்து என் கொழுந்தன் வந்திருக்காக... பக்கத்து வீட்டிலே காப்பித் தூளும் கருப்பட்டியும் வாங்கிட்டேன்... பால்தான் வேணும்...'' என்று பரபரப்புடன் கூறிச் செம்பை நீட்டினாள் கருப்பாயி.

பேச்சி, சுதாரித்துக் கொண்டு விட்டாள்.

''இல்லே, கருப்பாயி! நான் வழக்கமா ஊத்துற டீச்சர் ஊருக்குப் போயிட்டாகளா? அதனாலே, இப்பத்தான் பாலைக் கறந்து



அய்க்கண்



- ராஜி ராதா

காய்ச்சித் தயிருக்கு ஒரை ஊத்திட்டேன்....''

''அடடே, இப்ப என்ன செய்யிறது?'' என்று நெற்றியைச் சுருக்கிக் கவலைப் பட்டாள் கருப்பாயி.

''கிராமத்து வீடுகளிலே யாரும் காப்பி குடிக்கிறதில்லேன்னு கொழுந்தன் கிட்டே சொல்லிடு... கொழுந்தன் தானே?... கேட்டுக்கிடுவாக...'' என்று சிரித்துக் கொண்டே, அவளைக் காலிச் செம்புடன் அனுப்பி வைத்தாள் பேச்சி.

சிறிது நேரம் கழித்து ஒரு கையில் குவளையுடனும் மறுகையில் இரண்டு ரூபாய் நோட்டுடனும் வந்த சோலைச் சியைப் பார்த்ததும் சட்டென்று எழுந்தே விட்டாள் பேச்சி.

''வாங்கக்கா!... வாங்க....'' என்று ஆத்தா வரவேற்கும் உற்சாகக் குரலைக் கேட்டு, உள்ளேயிருந்த மீனாவே வெளியே வந்து நின்றாள்....

''ஏன் பேச்சி! பால் வச்சிருக்கியா?'' என்று கேட்டபடியே குடிசை முன்னால் வந்து நின்றாள் சோலைச்சி.

''இருக்குக்கா!... எங்கிட்டே வழக்க மாய்ப் பால் வாங்கற டீச்சர், இன்னிக்கு டவுனுக்குப் போயிட்டாங்க... அவுகளுக்கு ஊத்துற பால் இருக்கு...'' என்று உள்ளே போய், செம்பிலிருந்த பாலை எடுத்துவந்து, சோலைச்சியின் குவளையில் ஊற்றினாள் பேச்சி.

''என்னக்கா, திடுதிப்புனு விருந்தாடிக வந்திருக்காகளா?... காப்பி போடப் போறீ களா?'' என்று இயல்பாகக் கேட்டபடியே, சோலைச்சி நீட்டிய இரண்டு ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டாள் அவள்.

''இல்லே, பேச்சி! நம்ம பங்காளி வீட்டுப் பொண்ணு ஒண்ணு, புள்ளைத் தாய்ச்சி, திருப்பத்தூருலிருந்து வந்திருக்கு. பாவம், அந்தப் பொண்ணு ஒடம்பிலே எலும்புதான் இருக்கு... வெறும் எலும் பிலே தாய்ப்பால் எப்படி ஊறும்?... காலை யிலே ஒரு தடவை, ராத்திரி ஒரு தடவை தான் தாய்ப்பாலாம்! மத்த நேரங்களிலே புட்டிப் பால்தானாம்... இன்னிக்கி, ஒடனே திரும்பறதுதானேனு நெனச்சு, பால் பவுடர் டப்பா எடுத்திட்டு வராம, ஒரு பாட்டிலிலே பால் கரைச்சுக் கொண்டாந்திருக்கு... ஆனா, வண்டியிலேருந்து எறங்கிறப்போ, கை தவறிக் கூடையைக் கீழே போட்டு, பால் பாட்டில் ஒடைஞ்சி போயிட்டுது... பாவம்!.... இப்ப கொழந்தை பசிக்க அழு வுது... அதுக்குக் குடுக்கத்தான் உன்கிட்டே பால் கேக்க வந்தேன்...'' என்று 'பாவ'ப் பட்டு உருக்கமாகச் சொல்லிவிட்டுப் புறப் பட்டாள் சோலைச்சி...

சட்டென்று தலையில் ஏதோ தட்டுவது போல் உணர்ந்து நிமிர்ந்தாள் பேச்சி.

''அக்கா!.... கொஞ்சம் நில்லுங்க... இந்தப் பணத்தை வாங்கிக்கங்க...'' என்று இரண்டு ரூபாய் நோட்டைத் திருப்பி நீட்டி னாள் அவள்.

அந்த இரண்டு ரூபாய் வண்ணக் காகி தத்தை இரு பிரிவாக்கி, இரண்டு சடைப் பின்னலின் நுனியில் ரிப்பன்களாகக் கட்டிக் கொண்டிருந்த மீனா, திடுக்கிட்டவளாய் ஆத்தாளை ஏறிட்டுப் பார்த்தாள்....

''அக்கா! கொழந்தைகளுக்குக் குடுக் கிற பாலுக்கு நான் பணம் வாங்கறதில்லை. இலவசமாய்க் குடுக்கிறதுதான் எங்க வீட்டுப் பழக்கம்.....'' என்று நிச்சலனமாகச் சொல்லியபடி, ரூபாய் நோட்டை சோலைச் சியின் கையில் திணித்தாள் பேச்சி.

''புண்ணியவதி!... நீயும் கொழந் தையும் நல்லாயிருக்கணும்... ஆத்தா!'' என்று பேச்சியை மனப்பூர்வமாக வாழ்த்தி விட்டுப் பாலுடன் திரும்பி நடந்தாள் சோலைச்சியக்கா.....



''காலத்துக்கு ஏத்தபடி பட்டி-மன்ற விவாதத்துக்கு ஒரு தலைப்புச் சொல் லுங்களேன்...!''

''ஒரு கட்சிக்கு நிறைய வாக்குகள் கிடைக்கச் செய்பவர்கள் தொண்டர் படையா....? குண்டர் படையா?''

- பெ. கலாசாமி.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகைகளை அனுசரித்து காலை, முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாக நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

★★★★★இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு★★★★★

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் - ரூ. 365/-
2. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 165/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
3. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 65/-)
4. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப ஸித்தாவளி - ரூ. 55/-

III
1. மனாசே ச்லோக - ராமதாஸரின் ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருத மூலம் - தமிழ் பதவுரை)
3. தர்மோத்தரம் - வைதிககர்மாக்களின் கருத்துக்கள் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வடமொழிச் சொற்கடல் - ஸம்ஸ்க்ருதம் தமிழ் Dictionary 2 முதல் 6 தரங்கங்கள் வரை, (முதல் தரங்கம் தீர்ந்தவை - ரூ. 70/-)
5. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-

V.P.P. யில் அனுப்ப இயலவில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் இதே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. ஸமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும். ராஜா வேதகாவ்ய பாடசாலை, பாகசாலை தெரு, (சக்கர படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001.

சிவகாமியின் சபதம்

நாற்பத்தோராம் அத்தியாயம்

''இதோ உன் காதலன்''

நல்ல சமயத்தில் வந்து சிவகாமியின் உயிரைக் காப்பாற்றியவர் புலிகேசி சக்கரவர்த்தி அல்ல - புலிகேசி வேஷம் பூண்ட நாக நந்தி அடிகள் என்பது நேயர்கள் அறிந்த விஷயமே!

வாசலில் நின்ற கோபங்கொண்ட கூட்டத்தைப் பார்த்து விட்டுச் சிவகாமி கதவை அடைத்துக் கொண்டு உள்ளே சென்ற அடுத்த நிமிஷமே குதிரைகள் விரைந்து வரும் சப்தம் கேட்டது. வருகிறவர்கள் பல்லவ வீரர்கள்தான் என்று நினைத்துக் கொண்டு ஜனக் கூட்டத்தில் பெரும்பாலோர் ஓட்டம் பிடித்தார்கள். எஞ்சி நின்ற ஜனங்களும் வீட்டைக் காவல் புரிந்த சளுக்க வீரர்களும் வருகிறவர் புலிகேசிச் சக்கரவர்த்தி என்பதைக் கண்டதும் வியப்பினால் ஸ்தம்பித்து நின்றார்கள். நர்மதையிலிருந்து துங்கபத்திரை வரையில் பரவிக் கிடந்த மகத்தான சாம்ராஜ்யத்தைப் பத்து நாளைக்கு முன்பு வரையில் ஏக சக்ராதிபதியாக இணையற்ற மகிமையுடன் ஆட்சி செலுத்திய தங்களுடைய மன்னருக்கு இவ்வளவு சீக்கிரத்தில் இத்தனை பெரிய துர்க்கதி நேர்ந்ததையெண்ணி வாதாபி மக்கள் கலங்கிப் போயிருந்தார்கள். சக்கரவர்த்தியைப் பார்த்ததும் அங்கு எஞ்சி நின்ற ஜனங்கள் ஓவென்று கதறிப் புலம்பத் தொடங்கினார்கள். அதைப் பார்த்த சக்கரவர்த்தி தம் அருகில் நின்ற வீரனிடம் ஏதோ சொல்ல, அவன் கையமர்த்திக் கூட்டத்தில் அமைதியை உண்டாக்கிய பிறகு உரத்த குரலில் கூறினான் : ''மகா ஜனங்களே! இந்த ஆபத்துக் காலத்தில் நீங்கள் எல்லாரும் காட்டும் இராஜ விசுவாசத்தைக் கண்டு சக்கரவர்த்தி ஆறுதல் பெற்று உங்களுக்கெல்லாம் நன்றி செலுத்துகிறார். எதிர்பாராத வஞ்சகச் செயலினால் இத்தகைய துரதிர்ஷ்டம் நமக்கு நேர்ந்து விட்டது. இதற்கெல்லாம் தக்க சமயத்தில் பழிவாங்கியே தீர்வதென்று சக்கரவர்த்தி உறுதிகொண்டிருக்கிறார். இந்த வீட்டிலுள்ள பல்லவ நாட்டு மங்கை வாதாபிக்கு நேர்ந்த விபரீதத்துக்கு ஒரு காரணம் என்பதை அறிந்து அவளைத் தக்கபடி தண்டிப்பதற்காகவே இங்கு வந்திருக்கிறார். அந்த வேலையை அவருக்கு விட்டு விட்டு நீங்கள் எல்லாரும் அவரவர் உயிர் பிழைப்பதற்குரிய மார்க்கத்தைத் தேடும்படி கேட்டுக் கொள்கிறார். ஈவு இரக்கமற்ற பல்லவ அரக்கர்கள் அதர்ம யுத்தத்தில் இறங்கி உங்கள் வீடுகளைக் கொளுத்துகிறார்கள். அவரவருடைய பெண்டு பிள்ளைகளையும் உடைமைகளையும் கூடிய வரையில் காப்பாற்றிக் கொள்ள முயலுங்கள். உடனே அவரவருடைய வீட்டுக்குப் போங்கள்!''

இதைக் கேட்டதும் ஜனங்கள் இன்னும் உரத்த சப்தத்தில் அழுது கொண்டும் புலம்பிக் கொண்டும் சாபமிட்டுக் கொண்டும் அங்கிருந்து கலைந்து போகத் தொடங்கினார்கள்.

பிறகு, சக்கரவர்த்தி அந்த வீட்டு வாசலில் காவல் புரிந்தவர்களைப் பார்த்து, ''உங்களுடைய கடமையை நன்றாக நிறைவேற்றினீர்கள். மிகவும் சந்தோஷம். இனி மேல் நீங்கள் உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பாருங்கள். உயிர் தப்பியவர்கள் எல்லாரும் நாசிகாபுரிக்கு வந்து சேருங்கள்! அங்கு நான் கூடிய சீக்கிரத்தில் வந்து உங்களைச் சந்திக்கிறேன்!'' என்றதும், அந்த வீரர்கள் கண்ணில் நீர் ததும்பச் சக்கரவர்த்திக்கு வணக்கம் செலுத்தி விட்டு

அவ்விடமிருந்து சென்றார்கள். பிறகு சக்கரவர்த்தி தம்முடன் வந்த குதிரை வீரர்களின் தலைவனைப் பார்த்து, ''தனஞ்செயா! நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதல்லவா?'' என்று கேட்க, ''ஆம் பிரபு! நினைவிருக்கிறது'' என்றான் தனஞ்செயன்.

''இன்னொரு தடவை சொல்லுகிறேன். இங்கிருந்து உடனே செல்லுங்கள், 'மாமல்ல சக்கரவர்த்திக்கு ஜே!' என்று கோஷம் போட்டுக் கொண்டு நகரை விட்டு வெளியேறுங்கள். காபாலிகர் பலிபீடத்துக்கு அருகில் உள்ள காட்டுக்கு வந்து சேருங்கள். உங்களுக்கு முன்னால் நான் அங்கு வந்து சேர்ந்து விடுவேன்!'' என்று கூறி விட்டு, மறுபடியும் அந்த வீரன் காதோடு, ''பலிபீடத்துக்கருகிலுள்ள குகையில் பைத்தியம் கொண்ட காபாலிகை ஒருத்தி இருப்பாள். தாட்சண்யம் பாராமல் அவளைக் கொன்று விடு!'' என்றார் சக்கரவர்த்தி.

தனஞ்செயனும் மற்ற வீரர்களும் அங்கிருந்து மறுகணமே புறப்பட்டுச் சென்று மறைந்தார்கள்.

பிறகு அந்த வீதி சூனியமாகக் காட்சியளித்தது.

புலிகேசி வேஷம் தரித்த நாகநந்தி, சிவகாமியின் வீட்டுக் கதவண்டை வந்து மெதுவாகத் தட்டிப் பார்த்தார். பிறகு திட்டிவாசல் கதவைத் தொட்டுத் தள்ளியதும் அது திறந்து கொண்டது. உடனே அதன் வழியாக உள்ளே சென்று கதவைத் தாழிட்டார்.

வீட்டில் முன்கட்டை நன்றாய்ப் பார்த்து விட்டு அங்கு யாரும் இல்லையென்று தெரிந்து கொண்டு பின்கட்டை அடைந்தார். கத்தி ஓங்கிய காபாலிகையின் கையைக் கெட்டியாகப் பிடித்துச் சிவகாமியின் உயிரைத் தக்க சமயத்தில் காப்பாற்றினார்.

''அட பாவி, வந்து விட்டாயா?'' என்று காபாலிகை சொன்னதும், புத்த பிக்ஷு அவளைத் தமது காந்தக் கண்களால் உற்றுப் பார்த்து, ''ரஞ்சனி! சற்று இங்கே வா!'' என்று கூறி விட்டு அப்பால் சென்றார். அந்த மூர்க்க ராட்சஸி அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவர் பின்னோடு சென்றது சிவகாமிக்கு மிக்க வியப்பையளித்தது.

பிக்ஷு ரஞ்சனியை ஒரு தூணின் மறைவுக்கு அழைத்துக் கொண்டு போனார். சிவகாமியின் காதில் விழாத குரலில், ''ரஞ்சனி! இது என்ன காரியம் செய்தாய்?'' என்றார்.

''பிக்ஷு! தவறு ஒன்றும் நான் செய்யவில்லையே? நகரம் எரிவதைக் கண்டதும் தங்களைப் பற்றிக் கவலை ஏற்பட்டது. தங்களைத் தப்புவித்து அழைத்துப் போவதற்காக வந்தேன்!''

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். ஆனால், அந்தப் பல்லவ நாட்டுப் பெண்ணை எதற்காகக் கொல்லப் போனாய்?''

''அதுவும் தங்களைத் தப்புவிப்பதற்காகத்தான். அவளால் தங்களுக்கு அபாயம் நேராதென்பது என்ன நிச்சயம்? அவள் விரோதி நாட்டுப் பெண்தானே?''

''மூடமே! அவளால் எனக்கு என்ன அபாயம் நேர்ந்து விடும்?''

''பிக்ஷு! காதல் என்கிற அபாயம் மற்ற அபாயங்களை விட மிகப் பொல்லாதது அல்லவா?'' என்றாள் காபாலிகை.

''உன் மூடத்தனம் இன்னும் உன்னை விட்டுப் போகவில்லை. நீ இருக்கும் போது நான் இன்னொரு பெண்ணை...''

''அப்படியானால் அவளைப் பற்றி ஏன் இவ்வளவு கவலை உங்களுக்கு? அவளை நான் கொன்று பழிதீர்த்துக் கொண்டால் உங்களுக்கு என்ன?''

''அசடே! சிவகாமியைப் பழிவாங்குவதற்கு உனக்கு என்ன காரணம் இருக்கிறது? எனக்கல்லவா இருக்கிறது? பல்லவன் பேரில் என்னுடைய பெரும் பழியைத் தீர்த்துக் கொள்வதற்காகவே அவளை நான் பத்திரமாய்ப் பாதுகாத்து வருகிறேன் என்று எத்தனை தடவை உனக்குச் சொல்லியிருக்கிறேன்?''

''பிக்ஷு! இப்போது ஒன்றும் மோசம் போய் விடவில்லையே?''

''மோசம் போய் விடவில்லை. ஒரு விதத்தில் நீ இங்கு அவசரமாய்ப் புறப்பட்டு வந்ததே நல்லதாய்ப் போயிற்று. ரஞ்சனி! நீ எனக்கு இச்சமயம் உதவி செய்ய வேண்டும். இப்போது நான் சொல்லுகிறதைக் கேட்டால், அப்புறம் ஆயுள் முழுவதும் உன் இஷ்டப்படி நான் நடப்பேன்...!''

''பிக்ஷு! இது சத்தியமா?''

''எத்தனை தடவை உனக்குச் சத்தியம் செய்து கொடுப்பது? இப்போது சத்தியம் செய்து விட்டு அப்புறம் அதை மீறி நடந்தால் என்ன செய்வாய்?''

''என்ன செய்வதென்று எனக்குத் தெரியும்.''

''அதைச் செய்து கொள். இப்போது நான் சொல்கிறபடி செய்!''

''சொல்லுங்கள், அடிகளே!''

பிக்ஷு தன் குரலை இன்னும் தாழ்த்திக் கொண்டு காபாலிகையிடம் அவள் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிச் சொன்னார்.

அமரர் கல்கி



''நன்றாகத் தெரிந்து கொண்டாயல்லவா? அந்தப் படி செய்வாயா?'' என்று கேட்டார்.

''கட்டாயம் செய்கிறேன்!'' என்றாள் காபாலிகை. பிறகு, கோரப் புன்னகையுடன், ''பிக்ஷு! தாங்கள் தங்களுடைய பழியைத் தீர்த்துக் கொண்ட பிறகு நான் என் பழியைத் தீர்த்துக் கொள்ளலாம் அல்லவா?'' என்றாள்.

பிக்ஷுவின் முகம் கருங்கிற்று. ''ஆ! உன் சந்தேகம் உன்னை விட்டு அகலாது போல் இருக்கிறது. எத்தனை தடவை 'ஆகட்டும்' என்று சொல்லியிருக்கிறேன்! போ, சீக்கிரம்! அதோ ரதமும் குதிரைகளும் வரும் சப்தம் கேட்கிறது!'' என்றார்.

காபாலிகை அந்த வீட்டின் முன்கட்டில் பிரவேசித்து வாசல் கதவின் சமீபம் வந்தாள். இட்டி வாசற் கதவின் தாழைத் திறந்து விட்டுப் பக்கத்தில் ஒதுங்கி நின்றாள். கத்தி பிடித்த அவளுடைய வலது கையை முதுகின் பின்னால் மறைத்து வைத்துக் கொண்டு அபாயத்தை எதிர்பாராத ஆட்டின் மேல் பாய யத்தனிக்கும் பெண் புலியைப் போல காத்திருந்தாள். அந்தப் பெண் பேயின் முகத்திலும் கண்களிலும் கொலை வெறி கூத்தாடிற்று.

காபாலிகையை வாசற் பக்கத்துக்கு அனுப்பி விட்டு நாகநந்தி பிக்ஷு சிவகாமியின் அருகில் வந்தார்.

''சிவகாமி! இன்னமும் என் பேரில் சந்தேகம் தீரவில்லையா? இன்னமும் என்னிடம் நம்பிக்கை வரவில்லையா?'' என்று கூறிய பிக்ஷுவின் கனிந்த குரல் சிவகாமிக்கு மனக்குழப்பத்தை இன்னும் அதிகமாக்கிற்று.

''சக்கரவர்த்தி...!'' என்று ஆரம்பித்தவள் தயங்கி நிறுத்தினாள்.

''ஓ! என் தவறுதான்!'' என்று சொல்லி நாகநந்தி தம் தலையிலிருந்த கிரீடத்தை எடுத்தார்.

சிவகாமியின் குழப்பம் நீங்கியது.

''சுவாமி! தாங்களா! இந்த வேடத்தில்...'' என்றாள்.

''ஆம்; சிவகாமி! ஒரு சமயம் இந்த வேடம் பூண்டு உன் தந்தையின் உயிரைக் காப்பாற்றினேன்... இன்னும் ஒரு கணம் சென்று வந்திருந்தால் அந்த ராட்சஸி உன்னைக் கொலை செய்திருப்பாள்! உன்னை மட்டுமா? வானமும் பூமியும் கண்டு வியக்கும்படியான அற்புத நடனக் கலையையும் உன்னோடு சேர்த்துக் கொன்றிருப்பாள்...''

''ஆனால்...'' என்று சிவகாமி தயங்கினாள்.

''ஏன் தயங்குகிறாய், சிவகாமி! என்ன வேண்டுமோ, சீக்கிரம் கேள்!'' என்றார்

பிக்ஷு.

''ஒன்றுமில்லை, அந்தக் காபாலிகனை விஷ பேரில் தங்களுக்குள்ள சக்தியை நினைத்து வியந்தேன்!''

''அது காதலின் சக்தி சிவகாமி! அந்தப் பெண் பேய் என்னிடம் காதல் கொண்டிருக்கிறது! அதனால்தான் அவள் என் கட்டளைக்கு அவ்வளவு சீக்கிரம் கீழ்ப்படிகிறாள்!''

சிவகாமியின் முகத்தில் புன்னகையைக் கண்ட பிக்ஷு மேலும் கூறினார் : ''ஆனால், இவள் எப்போதும் இந்தக் கோரரூபத்துடன் இருந்ததாக நினைக்காதே! முன்னமே சொன்னேனே, நினைவில்லையா? ஒரு காலத்தில் வாதாபி அரண்மனைக்குள்ளேயே இவள் நான் சிறந்த அறிஞளாக இருந்தாள். ஒருநாள் உன்னைப் பற்றி இழிவாகப் பேசினாள். அதன் காரணமாக இந்தக் கதியை அடைந்தாள்!''

''ஐயோ! என்ன கோர தண்டனை!''

''அவள் இந்த மட்டோடு நிற்கவில்லை. ஆனால் அஜந்தா குகை சுவரில் நீ புலிகேசியின் அடி பணிந்ததாகச் சித்திரம் எழுதியவன் என்ன கதி அடைந்தான் தெரியுமா? அவனுடைய கழுத்தைத் தொட்டு ஆசீர்வதித்தேன். அவ்வளவுதான்! உடனே அவனுடைய தேகம் பற்றி எரிய ஆரம்பித்தது. பற்று தேகத்துக்கெல்லாம் அந்தச் சித்திரக் கூடம் ஓட்டமாய் ஓடி நதியில் வெள்ளத்தில் குதித்தான். அப்புறம் அவன் வெளிவரவே இல்லை!''

''ஐயோ என்ன கொடுமை!... எதற்காக இப்படியெல்லாம் செய்கிறீர்கள்?'' என்று இருதயம் பதைபதைக்கச் சிவகாமி கேட்டாள்.

''ஆஹா! இது மட்டுந்தானா உனக்காகச் செய்தேன்? சிவகாமி! இன்றைக்கு இந்தப் பெரிய வாதாபி நகரம் தீப்பற்றி 'எரிகிறதே' இதற்குக் காரணம் யார் தெரியுமா? இன்று இந்த மாநகரத்தில் பல்லவ வீரர்கள் புகுந்து அட்டகாசம் செய்வதற்கும், இந்த நகரத்தில் வாழும் இலட்சோப இலட்சம் ஜனங்கள் பித்துப்பிடித்தவர்கள் போல் அங்குமிங்கும் சிதறி ஓடுவதற்கும் காரணம் யார் தெரியுமா? தேசத்துரோகியும் குலத்துரோகியுமான இந்தப் பாதகன்தான்!'' என்று சொல்லிப் பிக்ஷு பளீர் பளீர் என்று தமது மார்பில் குத்திக் கொண்டார்.

இதனால் பிரமை பிடித்து நின்ற சிவகாமியைப் பார்த்துச் சொன்னார் : ''சிவகாமி! இந்த நகரை விட்டு அஜந்தா கலை விழாவுக்காக நாம் போனபோதே பல்லவர் படையெடுத்து வருகிறார்கள் என்பதை அறிந்தேன். ஆயினும், என் சகோதரன் புலிகேசியிடம் அதைச் சொல்லாமல் மறைத்து அஜந்தாவுக்கு அவனை அழைத்துச் சென்றேன். ஏன் தெரியுமா? உன் ஒருத்தியின் சந்தோஷத்துக்காகத்தான்; உன்னுடைய சபதம் நிறைவேறுவதைப் பார்த்து விட்டு நீ இந்த நகரத்தை விட்டுக் கிளம்பி வருவதற்காகத்தான். அதற்காகவே, என் உயிருக்குயிரான உடன்பிறந்த தம்பியையும் பலி கொடுத்தேன். வாதாபிச் சக்கரவர்த்தியின் மரணத்துக்கு இந்தப் பாதகனே காரணம்!'' என்று சொல்லிப் பிக்ஷு மறுபடியும் தம் மார்பில் அடித்துக் கொண்டார்.

சிவகாமியின் உடம்பெல்லாம் பதறியது. பிக்ஷுவின் கையைக் கெட்டியாகப் பிடித்து அவர் அடித்துக் கொள்வதைத் தடுத்தாள்.

சிவகாமி தன்னுடைய தளிர்க்கரத்தினால் தொட்ட உடனேயே நாகநந்தியடிகள் சாந்தமடைந்தார்.

''சிவகாமி! உன்னைப் பதறும்படி செய்து விட்டேன். மன்னித்து விடு!'' என்றார்.

''மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது, சுவாமி! அன்று என் தந்தையின் உயிரைக் காப்பாற்றினீர்கள். இன்று என் உயிரைக் காப்பாற்றினீர்கள். இதற்கெல்லாம் தங்களுக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இந்தப் பேறுக்காகத் தாங்கள் இவ்வளவு சிரமம் எடுத்திருக்க வேண்டாம்...''

''சிவகாமி! உன்னை இன்னும் நான் காப்பாற்றி விடவில்லை. உன் தந்தைக்காகவும் உனக்காகவும் நான் செய்திருக்கும் காரியங்களுக்கு நீ சிறிதேனும் நன்றியுள்ளவளாயிருந்தால், இப்போது எனக்கு ஓர் உதவி செய்!''

''என்ன செய்ய வேண்டும், சுவாமி?''

''என்னிடம் நம்பிக்கை வைத்து என்னுடன் புறப்பட்டு வா!''

சிவகாமி திடீரென்று சந்தேகமும் தயக்கமும் கொண்டு, ''எங்கே வரச் சொல்லுகிறீர்கள்? எதற்காக?'' என்று கேட்டாள்.

''சிவகாமி! இந்தப் பெண் பேய் உன்னைக் கொல்ல வந்ததோடு உனக்கு வந்த அபாயம் தீர்ந்து விடவில்லை. பல்லவர்கள் வைத்த தீ அடுத்த வீதி வரையில் வந்து விட்டது. இன்னும் அரை நாழிகையில் இந்த வீட்டுக்கும் வந்து விடும். அது மட்டுமல்ல; இந்த வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த மூர்க்க ஜனங்களின் கூட்டத்தைப் பார்த்தாயல்லவா! அவர்கள் உன்னைத் துண்டு துண்டாக வெட்டிப் போட வெறி கொண்டிருக்கிறார்கள். இந்த நகரத்துக்கு நேர்ந்த விபத்துக்கு நீதான் காரணம் என்று நினைக்கிறார்கள்...!''

இந்தச் சமயம் வீட்டு வாசலில் ஏதோ பெரிய ரகளை நடக்கும் சப்தம் கேட்டது.

அருள்வாக்கு



'எல்லாரையும் வைதிகமாயிரு என்றால் இந்தக் காலத்தின் போக்கில் நடக்கிற காரியமா? நடக்காததைச் சொல்லிப் பிரயோஜனம் என்ன?' என்று கேட்டால் நடக்கிற அளவுக்கு ஒன்று சொல்கிறேன். இதையாவது உடனேயே செய்ய ஆரம்பித்து விட வேண்டும்.

ஸமூஹத்தில் ஒட்டாமல் தனியாக வைதிகர்கள் ஒரு சின்ன கோஷ்டி விருப்பதாகவும், அவர்களும் இன்ஃபீரி யாரிடி காம்ப்ளெக்ஸோடு அப்படி யிருப்பதாகவும் இருக்கிற ஸ்திதி மாறு வதற்கு இந்த ஒன்றைச் சொல்கிறேன். அதாவது மற்றவர்கள் முழுக்க வைதிக மாகப் போகாமல் லௌகிகமான ஸ்கூல், காலேஜ் என்றே பசங்களை விடட்டும். தாங்களும் ஆஃபீஸோ, கம்பெனியோ, சொந்த பிஸினெஸ்ஸோ (அது ரொம்ப வும் துராசாரமாக இல்லாதவரையில்) என்ன தொழில் பண்ணுகிறார்களோ அப்படியே பண்ணட்டும். ஆனாலும் பசங்களை தினம் ஸாயந்திரம் ஒரு மணி, ஸ்நானம் பண்ணி மடிகட்டிக் கொண்டு, நெற்றிக்கு இட்டுக் கொண்டு ஒரு பொது இடத்தில் ஒன்றாகக் கூடி கொஞ்சமாவது வேதாப்யாஸம் பண்ணு வதற்கும் ஸ்தோத்திரங்கள் கற்றுக் கொள்வதற்கும் ஒவ்வொரு பேட்டை யிலும் ஏற்பாடு செய்ய வேண்டும். பிராம்மணரல்லாதாருக்கும் வேதாப் யாஸம் தவிர மற்ற தினுஸில் மதாபி மானம், தெய்வ பக்தி உண்டாகும்படி யான ஏற்பாடுகளைப் பண்ண வேண் டும். நீராடுவது, நீறுபூசுவது (அல்லது திருமண் இடுவது), தேவார திருவாசக திவ்ய பிரபந்தங்களை ஓதுவது என்று வைத்துக் கொள்ளலாம். சின்ன வயஸி லிருந்தே இப்படி நம் மதாநுஷ்டா னங்களில் பிடிப்பை உண்டாக்கி விட வேண்டியது அவசியம். ஸகல ஜாதிக் குழந்தைகளுக்கும் ஸம்ஸ்கிருதமும் கற்றுக் கொடுத்து விட வேண்டும். அநேக சாஸ்திரங்கள் அந்த பாஷையில் தானே இருக்கின்றன? ஆனபடியால், நம் சாஸ்திரங்களைப் பார்த்து அதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ளக் கூடிய பாஷாஞானத்தை நம் மதத்துக் குழந்தைகள் எல்லாருக்கும் உண்டாக்கி விட வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்க ராச்சார்ய சுவாமிகள்.

கதவு திறந்து மூடும் சப்தமும், அதைத் தொடர்ந்து ஓர் அலறலும் கீழே ஏதோ தொப்பென்று விழும் ஓசையும் விரைவாக அடுத்தடுத்துக் கேட்டன.

சிவகாமியின் உடம்பு நடுங்கிற்று.

''மூர்க்க ஜனங்களின் அட்டகாசத்தைக் கேட்டாயல்லவா, சிவகாமி? இங்கே யிருந்து இந்த மூர்க்க ஜனங்களால் நீ கொல் லப்பட வேண்டுமா? என்னுடன் வர மாட் டாயா?'' என்றார் நாகநந்தி.

நாகநந்தி கூறுவது உண்மைதான் என்ற நம்பிக்கை சிவகாமிக்கு உண்டாயிற்று. ''அடிகளே! என்னை எங்கே எப்படி அழைத் துச் செல்வீர்கள்?'' என்று கேட்டாள்.

''இத்தகைய அபாய காலத்தை எதிர் பார்த்து இந்த வீட்டிலிருந்து சுரங்க வழி ஏற்படுத்தியிருக்கிறேன். என்னை நம்பி நீ புறப்பட்டு வந்தால் அரை நாழிகை நேரத் தில் உன்னை இந்தக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்ப்பேன்!''

''சுவாமி! அது மட்டும் என்னால் முடி யாது. தங்களை ரொம்பவும் வேண்டிக் கொள்கிறேன். இந்த வீட்டிலிருந்து நான் வெளிக் கிளம்ப மாட்டேன். தாங்கள் செல்லுங்கள்.''

''சிவகாமி! நான் சொல்ல வந்ததை நீ முழுவதும் கேட்கவில்லை. உன்னை எங்கே அழைத்துப் போக உத்தேசிக்கிறேன் என்று

தெரிந்து கொள்ளாமலே சொல்லுகிறாய். ஒருவேளை முன்னொரு சமயம் சொன் னேனே அந்த மாதிரி என்னுடன் அஜந்தா மலைக்குகைக்கு வரும்படி அழைப்பதாக எண்ணிக் கொண்டாயோ, என்னவோ? அந்தக் கனவையெல்லாம் மறந்து விட் டேன் சிவகாமி! உன் மனம் ஒருநாளும் மாறப் போவதில்லையென்பதை அறிந்து கொண்டேன். இப்போது என்னுடைய கவலையெல்லாம் உன்னை எப்படியாவது தப்புவித்து உன் தந்தையிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்பதுதான். கோட்டைக்கு வெளியே சென்றதும் நேரே உன் தந்தை யிடம் கொண்டு போய் உன்னை ஒப்புவிப் பேன். பிறகு என் வழியே நான் செல்வேன்.

சிவகாமி சிறிது சிந்தனை செய்து விட்டு, ''சுவாமி! உங்களை நான் பூரணமாய் நம்புகிறேன். ஆனாலும் இந்த வீட்டை விட்டு நான் புறப்பட மாட்டேன். அவர் வந்து என்னைக் கரம் பிடித்து அழைத்துச் சென்றால் இங்கிருந்து போவேன்; இல்லா விட்டால் இங்கேயே இருந்து சாவேன்!'' என்றாள்.

நாகநந்தியின் முகபாவம் திடீரென்று மாறியது. அவர் கண்களில் தணல் வீசியது. நெருப்புச் சிரிப்பு சிரித்தவண்ணம், ''உன் காதலன் மாமல்லன் இங்கு வந்து உன்னை அழைத்துப் போவான் என்றா நினைக் கிறாய்; ஒரு நாளும் இல்லை'' என்றார்.

''ஏன் இல்லை?'' என்று ஒரு குரல் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த் தார்கள். காபாலிகை, ''சிவகாமி! பிக்ஷு சொல்லுவதை நம்பாதே! இதோ உன் காத லன்!'' என்று சொல்லியவண்ணம் தான் தூக்கிக் கொண்டு வந்த உடலைத் தரையிலே போட்டாள். மார்பிலே கத்தி ஊடுருவி யிருந்த உருவத்தைச் சிவகாமி ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தாள்.


அது கண்ணனுடைய முகம் என்று தெரிந்ததும், ''அண்ணா!'' என்று அலறிக் கொண்டு அந்த உடலின் அருகில் சென் றாள்.

கண்ணபிரானுடைய கண்கள் திறந்தன. சிவகாமியின் முகத்தை ஒருகணம் உற்றுப் பார்த்தன. ''தங்காய்! உன் அக்கா கமலி உன்னை ஆசையோடு எதிர்பார்க்கிறாள்; சின்னக் கண்ணனும் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்!'' என்று அவனுடைய உதடுகள் முணுமுணுத்தன.

மறுகணம் அந்தச் சிநேகம் ததும்பிய முகத்தில் மரணக்களை குடிகொண்டது.

பேதை சிவகாமி மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தாள்.

(தொடரும்)



''நேத்து திறப்பு விழாவிற்கு வந்த தலைவர் தன் கஞ்சத் தனத்தைக் காண்பிச் சுட்டார்!''

''எப்படி?''

''ரிப்பனைக் கட் பண்ணாம அவிழ்த் துச் சுருட்டி விட் டுக்குக் கொண்டு போயிட்டார்!''

- தஞ்சைத் தரணியன்

''அந்தச் சலூன்காரன், நான் வேண்டாம் வேண்டாம்னு சொல்லச் சொல்ல... அவன் இஷ்டத்துக்கு என்னை மொட்டை அடிச்சுட்டான் சார்...!''

''ஏனாம்...?''

''அவனுக்கு ஏதோ காரியம் ஆனா... எனக்கு மொட்டை போடற தாக வேண்டிக்கிட்டானாம்...!''

- பெ. கலாசாமி



''என்னை ஜெயிக்க வைத்தால் ஆறே மாதத்தில் உங்கள் தொகுதியைச் சொர்க்கபூமியாக மாற்றுவேன்'னு சொன்னீங்களே...?''

''நாம எங்கே ஜெயிக்கப் போறோம்னு நினைச்சு அப்படிச் சொல்லிட்டேன்... ஹி... ஹி...!''

- சீர்காழி வி. ரேவதி



ரப்பர் வாழையும் தங்கக் கள்ளியும்



● லொனினா ரெகர்வேட்டா

''கோல்டன் பால்' என்று பொருத்தமான பெயர் கொண்ட இந்தக் கள்ளிச் செடியின் விலை என்ன தெரியுமா? எட்டாயிரம் ரூபாய். இதோ இந்தக் கள்ளியின் விலை என்ன தெரியுமா? பத்தாயிரம் ரூபாய்! யானையின் கால்களைப் போலுள்ள - லொனினா ரெகர்வேட்டா என்று சொல்லப்படும் இந்தச் செடியின் விலை என்ன தெரியுமா? பதினைந்தாயிரம் ரூபாய்....'' என்று தமது நர்ஸரியிலுள்ள ஒவ்வொரு செடியாகக் காண்பித்து பிரமிக்க வைக்கும் விலைகளைச் சொல்லிக் கொண்டே போனார் ராஜு ராஜன்.

''இவற்றின் விலைகளை எப்படி நிர்ணயிக்கிறீர்கள்?''

''இந்தக் கள்ளிச் செடிகள் இருக்கின்றனவே, இவை பன்னிரண்டாண்டுகளுக்குப் பிறகுதான் பூக்கவே ஆரம்பிக்கும். அதன் பிறகு தொடர்ந்து பூத்துக் கொண்டே இருக்கும் என்றாலும் ஆரம்பத்தில் பன்னிரண்டாண்டுகள் காத்திருக்கத்தான் வேண்டும். இந்த 'கோல்டன் பால்' கள்ளிக்கு எட்டாண்டுகள் ஆகிறது. அதனால் எட்டாயிரம் ரூபாய். இன்னொன்றுக்குப் பத்தாண்டுகள். அதனால் பத்தாயிரம்!''

''இத்தனை விலை கொடுத்து யாராவது வாங்கியிருக்கிறார்களா?''

"நான் இவற்றின் மதிப்பைத்தான் சொன்னேனே தவிர, விற்பேன் என்று சொல்லவில்லையே! காரணம், இவை என்னிடமிருக்கும் தாய்ச் செடிகள். இவை இருந்தால்தான் புதிய செடிகளை உருவாக்க முடியும்..." என்ற ராஜராஜன் தமது 'ராஜா நர்ஸரி'க்குள் நம்மை அழைத்துச் சென்று சுற்றிக் காண்பித்தார்.

"இதோ பாருங்கள்... இதற்கு 'சூப்பர் வாழை' என்று பெயர். இது தார் போடுவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இதன் ஒரு பழத்தை மட்டும் மூன்று நான்கு பேர் வயிறு நிறையச் சாப்பிடலாம்; அந்த அளவுக்கு சூப்பர் சைஸ் பழம்!" என்றவர் ஒரு செடியின் இலையைப் பறித்து, "இதோ இதை முகர்ந்து பாருங்கள்!" என்றார்.

பூண்டு வாசனை வந்தது. "பூண்டுக்குப் பதிலாக இதை உபயோகிக்கலாம் என்று கோவை வேளாண் பல்கலைக் கழகத்தினரே கூறியிருக்கிறார்கள்!" என்று இன்னொரு செடியின் இலையைப் பறித்துக் கசக்கி முகர்ந்து பார்க்கச் சொன்னார். அந்த வாசனை கமகமத்தது! இப்படி பல்வேறு செடிகளில் பல்வேறு வாசனைகள்!

சாதாரண மிளகாய்ச் செடிகளில் கூட ஏகப்பட்ட ரகங்கள்! மொத்தம் பத்தாயிரம் வகைத் தாவரங்கள் இவரிடம் இருக்கின்றன!

"திருச்சி சுற்றுவட்டாரத்திலுள்ள கல்லூரிகளில் தாவரவியல் படிக்கும் மாணவ, மாணவியர் அனைவரும் தாங்கள் படிக்கும் தாவரவகைகளை நேரில் பார்ப்பதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் என்னுடைய நர்ஸரிக்குத்தான் வருகிறார்கள்!" என்கிறார் ரயில்வேயில் வேலை பார்க்கும் ராஜராஜன்.

அபூர்வ தாவர வகைகளைச் சேகரித்துக் கொண்டு வந்து வளர்ப்பதென்பது ஆரம்பத்தில் இவருக்கு ஒரு ஹாபியாகத்தான் இருந்ததாம். பலரும் அவற்றைப் பார்த்து வியந்து, தங்களுக்கும் அவை வேண்டுமென்று வற்புறுத்த ஆரம்பித்த போதுதான் அவற்றிலிருந்து கன்றுகளை உற்பத்தி செய்ய ஆரம்பித்து லாப நோக்கில்லாமல் விற்பனை செய்ய ஆரம்பித்தாராம். இப் போது விற்பனை படிப்படியாக அதிகரித்து விட்டதால் பத்துப் பேர் வேலை பார்க்கும் அளவுக்கு இவரது நர்ஸரியும் செடிகளோடு சேர்ந்து வளர்ந்து விட்டது!

- பிரின்ஸ்

● கேக்டஸ் பழுடன் ராஜராஜன்





அன்புள்ள அலமு அத்தை,

யானைக் குட்டி கதை எனக்கு ரொம்பப் பிடிச்சது. முதலை, குட்டி யானையோட மூக்கைக் கவ்விக்கிட்டதுன்னு சொன்னதும் பப்லுவுக்கு அழுகை வந்துடுத்து. ஜூவுக்குப் போன போது, யானையைப் பார்த்ததும் அந்தக் கதை ஞாபகம்தான் வந்தது.

மயிலுக்குத் தோகை எப்படி வந்திருக்கும்னு நான் எழுதியிருக்கேன். அப்பா கொஞ்சமே கொஞ்சம் 'ஹெல்ப்' பண்ணினார்.

இதுதான் கதை :

ரொம்ப வருஷத்துக்கு முன்னாலே மயிலுக்குத் தோகையே கிடையாது. கோழி மாதிரி கொஞ்சமா வால்தான் இருக்கும். அப்போ ஒரு மயில் - அதோட பேரு மப்புட்டு - ஒரு நீளமான 'வாக்' போகக் கிளம்பித்து.

கொஞ்சம் தூரம் போனதும் ஒரு தென்னை மரத்தைப் பார்த்தது. அந்தத் தென்னை மரம் அழு அழுன்னு அழுதது. மப்புட்டு ரொம்ப வருத்தப்பட்டு ''தென்னை மரமே ஏன் அழறே?''ன்னு கேட்டது. அப்போ அந்தத் தென்னை மரம், ''என் வேரையெல்லாம் பூச்சி அரிக்குது; அதனால அழறேன்''னுது.

மப்புட்டு தென்னை மரத்து வேர்கிட்டே மூக்காலயும் காலாலயும் கிளறி பூச்சியையெல்லாம் கொன்னுட்டது. தென்னை மரம் ரொம்ப சந்தோஷப்பட்டு ஒரு பச்சை மட்டையை மப்புட்டுவுக்குப் பரிசு கொடுத்தது.

மப்புட்டுவுக்கு மட்டையை என்ன செய்யறதுன்னு தெரியலை. அங்கேயே கொஞ்சம் நேரம் உட்கார்ந்து விட்டது.

அப்போ அங்கே என்ன வந்தது தெரியுமா...? ஒரு வானம்பாடி வந்தது. பாவம்! அந்த வானம்பாடிக்கு ஒரு இறக்கையில காயம் பட்டு ஒரே வலி...! மப்புட்டுவுக்கு வானம்பாடியைப் பார்த்ததும் ரொம்ப வருத்தம் - தன்னோட குட்டை வாலாலே வானம்பாடியின் இறக்கையைத் தடவிக் கொடுத்தது.

கொஞ்ச நேரத்துல வானம்பாடிக்கு வலியே போயிடுத்து. மப்புட்டுவோட குட்டை வாலுக்கு ஒரு முத்தம் கொடுத்தது. அப்புறம் பறந்து - மேலே மேலே ஆகாயம் வரைக்கும் போச்சு வானம்பாடி.

வானம்பாடி பறக்கறதை அதிசயத்தோட பார்த்தது மப்புட்டு. நீலவானத்துல சூரியனோட தங்க நிறம் பட்டு வானம்பாடி ரொம்ப அழகாத் தெரிஞ்சது.

திடீர்னு வானம்பாடி கீழே பறந்து வந்தது. தன் இறக்கைகளிலே ஏந்தி வந்த வானத்து நீலத்தையும் சூரியனின் தங்க நிறத்தையும் மப்புட்டுவோட பச்சைத் தென்னை மட்டையில் தெளிச்சது. குட்டை வால் இருந்த இடத்தில் அதை மாட்டி விட்டது.

மப்புட்டு சந்தோஷத்துல எழுந்து நின்ன போது, தோகையா மாறின குட்டை வால் அழகா விரிஞ்சது.

இதுதான் மப்புட்டுவுக்குத் தோகை முளைச்ச கதை.

அத்தை, ஒரு ரகசியம் : அந்த வானம்பாடி வெறும் குருவியில்லே... அது ஒரு வனதேவதை!

உன்,

அருண்


சபரிமலை செல்லும்
பக்தர்களுக்கு
ஸ்ரீபெட் வழங்கும்
ஓர் அரிய வாய்ப்பு!
சபரிமலை பிரசாதம் கொண்டு வர
ஒரு 220 மி.லி. அழகான
பெட் ஜார் இந்த உடையாத
ஸ்ரீ பெட் வாட்டர் பாட்டிலுடன்
கிடைக்கும் ரூ 25/- மட்டுமே.
இச்சலுகை
சரக்கு உள்ளவரை
மட்டுமே
இச்சலுகையில்லாமலும்
மேற்கண்ட சரக்குகள்
கிடைக்கும்
ShriPET
AAA/SSI/92/21
ஸ்ரீபெட்
ஜாருகள்-பாட்டில்கள்
சபரிமலை பக்தர்களுக்கு
ஒரு உற்றதுணை !
உடையாதது – உணவுத்தரம் வாய்ந்தது
சுகாதாரமானது.
MADRAS
ஸ்ரீபெட்
ஸ்ரீராம் நிறுவனத்தின்
தரமான தயாரிப்பு
விநியோகிஸ்தர்கள்
ஸ்ரீராம் சேல்ஸ் இன்டர்நேஷனல்.


அம்மாவின் கண்களில் கொப்பளித்தது வெறுப்பு. அவள் முகம் சட்டென்று நிறம் மாறியது. முகச்சுருக்கங்களில்- உதட்டுச் சுளிப்புகளில் அப்பட்டமான வெறுப்பு. அருவருப்பு.

இவள் என் வயித்துல வளர்ந்தவள் தானா? என் ரத்தத்தில் ஊறியவள்தானா? என் மடியில் கிடந்து, பாடிய ரோராட்டு (தாலாட்டு)களைக் கேட்டவள்தானா?

இல்லை. இருக்காது. இருக்க முடியாது. இது வேற்று ஜந்து. எங்கேயோ பிறந்து, எப்படி எப்படியோ வளர்ந்த காட்டுப் பிராணி. என் பாலைக் குடித்து வளர்ந்தவள் இப்படி ஒருகேள்வி கேட்பாளா? என் பரம்பரையில் - என்கொடி வழியில் - வந்திருந்தவள் வாயில் இப்படியோர் வார்த்தை வந்திருக்க முடியுமா?

வேலாயிக்குள் ஓடிய வெறுப்பான நினைவுகள். சட்டெனத் தோன்றி விட்ட இடைவெளி. நீளமான இடைவெளி. மகள்...தூரத்தில்...ரொம்ப தூரத்தில் இருப்பது போலப் பட்டது.

அந்நிய மனுசியாக -பார்க்கச் சகிக்காத அற்பப் புழுவாகத் தோன்றினாள், மகள்.



வேலாயியின் கண்கள் இடுங்கின. கூர்மையாக அவளைப் பார்த்தன.

'' ஏண்டி பாதகத்தி... ஒந் நாக்குலே சனியன் வந்து உக்காந்துருச்சா? எதுக்கு இப்படிப் பேசுறே? ஒரு சாதிமான் பொட்டச்சி இந்த வார்த்தையை வாயிலே வைச்சுப் பேசுவாளா...டி? த் தூ!''

''ஏம்மா பேசக் கூடாது? நா...ங் கேக் கேன், ஏன் பேசக் கூடாது? மாமாவுக்கு மட்டும் ஆசை வந்துட்டா... வரைமுறை யில்லாம ரெண்டாம் பொண்டாட்டி கேக்க லாமோ? கேக்குற தைரியம் எப்படி வந் துச்சு? ஆம்பளைக்கின்னா... கொம்பா முளைச்சிருக்கு?''



முற்றுகை 18

''அது வழமுறைதானடி? நம்ம சாதி சம் சாரிக குடும்பங்கள்லே கா(ல்)வாசிக் குடும் பத்துலே, அக்கா தங்கச்சிகளைச் சேத்துக் கட்டிக்கிட்டு வாழுறாகளே... இருக்கத் தானே செய்யுது, நடப்புலே?''

''ராமாயணத்துலே தசரதனுக்கு மூணு பொண்டாட்டிமார். மகாபாரதத்துலே பாஞ் சாலிக்கு அஞ்சு புருஷன்மார். ரெண்டுமே வழமுறைதானேன்னு ஏன் சொல்லக் கூடாது? ஆனா... நாஞ் சொல்லுதேன், ராமா யணமும் வேண்டாம். மகாபாரதமும் வேண்டாம். ஒருத்தனுக்கு ஒருத்தி. ஒருத் திக்கு ஒருத்தன். அதுதான் நம்ம காலத் துக்குப் பொருத்தம்மா... ஆமம்மா... சட்டம் எதுவானாலும் அது ஆம்பளைக்கும் பொம்பளைக்கும் பொதுவாயிருக்க ணும்மா...''

''ஏண்டி... 'அறுதலி (விதவை) வளர்த்த புள்ளை தறுதலை'ன்னு சொல்லு வாக. நீயும் அப்படித்தானா? இல்லே... சம்பாரிக்கப் போறோம்ங்கிற திமிர்லே பேசுறியா?''

''பசை ஒட்டிச் சம்பாரிக்கிற கூலிக் காரிக்கு என்னம்மா திமிர் இருக்கும்? திமிர்லே பேசலேம்மா. பொம்பளைங்கிற ரோஷத்துலே - மனுசிங்கிற தைரியத்துலே பேசுறேம்மா. ஒன்னை மாதிரி அடங்கிக் கிடக்க முடியாதும்மா...''

இதற்கு மேல் எதுவும் பேச விரும்ப வில்லை. பேசக் கூடாது. பேசினால்... அம்மா நொந்து போவாள். காயப்பட்டு விடுவாள். ஏற்கெனவே... அடிபட்டுக் கிடப்பவள்.

சொர்ணம் எழுந்தாள். தொழுவத்திற் குள் நுழைந்தாள். குளித்தாள். துணிமணி களை மாற்றிக் கொண்டாள். சத்தம் இல்லா மல் சாப்பிட்டு முடித்தாள்.

வெளியே வந்து முற்றத்தில் நின்றாள். தூரத்தில் தெருவிளக்கு. முற்றத்தில் செல்கிற

மேலாண்மை பொன்னுச்சாமி

தெரு. ஒரு வெள்ளாட்டுக் குட்டி தாயைத் தேடி 'ம்மே' என்று ஏக்கமாய்க் கத்துகிறது.

அவளுக்குள் மாமாவின் தோற்றம். வெற்றிலைக் காவியேறிய பற்கள். சிவந்து கறுத்த அடி உதடு. பீடி குடிக்கிற உதடு. குள்ளமான தோற்றம். முன் வழுக்கை விழுந்த வட்டத் தலை. காதோரம் நரைத்த முடி. நறுக்கு மீசையிலும் முன்னேறுகிற நரை.

கண்களைச் சுற்றிலும் சுருக்கங்கள். தோல் மடிப்புகள். முதுமையின் முகம் வெளிப்படுகிற உடம்பு.

இவருக்கா... என் மீது ஆசை? ஆசைப்பட என்ன தகுதியிருக்கிறது? என் அக்காளை மாலையிடுவதற்குக் கூட இந்த மனிதரிடம் என்ன தகுதியிருந்தது?

என் அக்காளுக்கே தகுதியில்லாத இந்த ஆள், என் மீதா ஆசைப்படணும்? என் கால்தூசி பெறுவாரா, இவர்? தூ!

மகளைப் போல இத்தனை காலம் பழகி விட்டு, தகப்பன் என்கிற மரியாதை உணர்வு மனசில் நிலைத்துப் போகிற மாதிரி உறவாடி விட்டு... இப்போது பெண்டாள ஆசை எப்படி வந்தது? இது, மனுச ஜென்மந்தானா?

இந்த மிருகத்திடமிருந்து எப்படித் தப்பிப்பது? தப்பிக்க என்ன வழி? ஊர் நாட்டாமையும், ஊர் ஜனமும் முற்றுகை யிட்டு நெருக்கினால்... எப்படி மீள்வது? யார் மீட்பது?

இந்த முற்றுகையை உடைக்க என்ன வழி?

இந்தக் கேள்வியில் போய் முட்டிக் கொண்டாள். ஒரு தடித்த சுவராக நின்று மறித்தது, இந்தக் கேள்வி. வாசலற்ற சுவர். பதில் இல்லாத கேள்வி.

யோசிக்க யோசிக்க மனசுக்குள் கற்பனைகள். விதம்விதமான கற்பனைகள். யூகங்கள். மனசுக்குள் நிகழ்கிற சாகச நிகழ்ச்சிக் காட்சிகள்.

நினைத்துப் பார்த்தால்... எல்லாமே அபத்தமான கற்பனைகள். ஒன்றுக்கும் உதவாது.

ஆயாசப்பட்ட மனசுக்குள் ஆயிரத்தெட்டு கற்பனைகள். முன்னோடுகிற காட்சிகள்... அதிலேயே ஓர் ஆறுதல். சுகம்...

சட்டென்று உள்ளுக்குள் ஒரு வெளிச்சம். பழநி. முனியசாமியின் பேரன். ஏதோ சங்கத்தில் தலைவர். பெரிய தொழிற்சங்கவாதி. பாலிடெக்னிக்கில் படித்து முடித்துவிட்டு... சிமெண்ட் சாலையில் பணியாற்றுகிறவன்...

ஒருவேளை... அவன் விரும்பினால்... இந்த முற்றுகையை உடைக்க முடியுமா? அவன் தயவில், நான் தப்பிக்கவா? அவன் நிழலில் வாழ்வு பெறவா?

என் வீட்டில் பழைய கஞ்சிக்குத் தவம் கிடந்து காத்திருந்து, வாங்கிக் குடித்த வேலைக்காரன் முனியசாமியின் வாரிசு. என் வீட்டில் நாயாகக் கிடந்து கடைசி வரை விசுவாசம் காட்டிய ஒருவனின் பேரன்.

அவன் கருணையில் நான் பிழைக்கவா?

இல்லை... எனக்கு அவன் சேவை செய்யக் கடமைப்பட்டவன். நியாயமாகவே கடன்பட்டவன்.

''சாமியளுக வீட்டுச் சோத்தை உண்டு வளர்த்தவுக நாங்க. உங்களுக்கு எங்க பரம்பரை பூராவுமே காலுக்குச் செருப்பா ஒழைச்சாலும்... எங்க கடன் தீராதும்மா.''

முனியசாமி இப்படித்தான் அடிக்கடி சொல்லுவான்.

நிஜந்தான்... பழநி என்னைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன். செய்ய வேண்டும்.

அவனை எப்படிப் போய்ப் பார்ப்பது? எங்கே இருப்பான்? எப்படி உத்தரவிடுவது?

கேள்விச் சுவரைத் தாண்டி விட்ட மாதிரியானதோர் நிம்மதி. நாதியற்றுப் போய் விடவில்லை என்கிற பாதுகாப்புணர்வு...

பெருமூச்சுடன் வீட்டுக்குள் நுழைந்தாள்.

அந்த டவுன் பஸ் நகரத்திற்குள் நுழைந்த போது, பழநி பொறுமையைச் சுத்தமாக இழந்து விட்டான். முள்ளின் மேல் உட்கார்ந்திருப்பதைப் போல... இருப்புக் கொள்ளாமல் தவித்தான்.

அடிக்கொரு தடவை கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். நகரத்தில் 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' சார்பில் பாரதியார் விழா. பத்து மணிக்கு ஆரம்பம் என்று சொல்கிற அழைப்பிதழ். சிமின்டாலை தொழிலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் பழநி, வாழ்த்துரைக்க வேண்டும்.

நேரம் கடந்து விட்டதோ... தாமதமாகி விட்டேனோ...

அவசரமாக இறங்கினான். இலக்கியக் கூட்டம் என்பதால்... இவனுக்குள் பதற்றம். ஓர் உதறல். ஒரு புரியாமையால் வருகிற நினைப்பு.

இந்தியாவிலேயே மிக அதிகச் சம்பளம்!

டெட்லி நிறுவனத்தின் புதிய இயக்குனராக (நிர்வாகம்) பதவி ஏற்கும் பி. எம். சின்கா என்பவருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வருடச் சம்பளம் எவ்வளவு தெரியுமா...? ஒன்றரை கோடி ரூபாய்...! இந்தியாவில் மிக அதிகச் சம்பளம் வாங்குபவர் இவர்தான் என நம்பப்படுகிறது!

நன்றி : எகனாமிக் டைம்ஸ்; தகவல் : வி. ஆர்.

கையில் பாரதி நூல். கவிதை நூல். படிக்கிற காலத்திலேயே தமிழாசிரியர் ரூஸ்வெல்ட் தமிழோடு சேர்த்து பாரதியை யும் இவனுள் புகட்டினார். பாடத்திற்கு வெளியேயும் போய்... பாரதியைப் பற்றிப் பரவசத்தோடு பேசுவார்.

அவர் விதைத்த மணிகள்... இவனுள் முளைத்து, வளர்ந்து, கொடி வீசி...

பாலிடெக்னிக் படிக்கிற காலத்தில் பாரதியில் கரைந்தே போனான். அவர் மகாகவி என்பதை அறிவால் உணர்ந்தான். பாரதி என்ற கவிஞனை மட்டுமல்ல, பாரதி என்ற மனிதனையும் பிரமிப்போடு உணர்ந் தான்.

'ஓடி விளையாடு பாப்பா'வில் எழுதி யதையெல்லாம் தங்கம்மாளுக்கும் ஊட்டி வளர்த்த நேர்மைத் தந்தை. கவிதையிலும் சொல்லிலும் பாடிய பெண்ணுரிமையை நடப்பிலும் நிகழ்த்திக் காட்டியவன். அந்தக் காலத்திலேயே செல்லம்மாளை நாற்காலி யில் அமர்த்தி, பக்கத்தில் பதியாக நின்று புகைப்படம் எடுத்தவன்.

கவிதைக்கும் வாழ்க்கைக்கும் இடை வெளியேயில்லாமல் வாழ்ந்த மனிதத் தங்கம். இவனுக்குள் பாரதியின் வேர்கள் ஆழத்தில் ஊடுருவி விட்டன...

இன்று இவன் ஆலைத் தொழிலாளி. மாணவனாக இருந்து பாரதியைப் பற்றிப் பேசினால் இயல்பாக இருக்கும். ஆலைத் தொழிலாளி பாரதியைப் பற்றிப் பேசினால்... இயல்பாக இருக்குமா? ஏற்றுக் கொள்வார்களா?

இவனுக்குள் மீண்டும் அதே உதறல். மனத்தாழ்ச்சி.

விழா... ஒரு பள்ளியின் உள் மைதா னத்தில். பஸ் நிலையத்தை விட்டு வெளியே வந்தால்... ஒரு தட்டிப் போர்டு. அதில் இவன் பெயர் இல்லை.

பெயரைத் தேடுகிற தன் மனசை நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

அறிமுகமான ஓரிருவர் வணக்கம் சொல்ல, அதை யந்திரமாய் ஏற்றுக் கொண்டு, ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டுத் தெருவுக்கு வந்தான்.

பரபரப்பு மிகுந்த அந்த நகரத்தில் வித்தி யாசமான விதத்தில் விளம்பரம். எளிமை யான செலவில் கண்ணைக் கவரும் விளம் பரம்.

சாலையில் இரு மருங்கிலும் வழி நெடுக ஒவ்வொரு மின் கம்பத்திலும் தூண்களிலும் சின்னச் சின்ன அட்டைகள். அதில் கலர் கலராய் எழுத்துகள். செய்தி யாய்... தகவலாய்... கவிதைகளாய்...

''மண் பொய் சொல்வதில்லை; மிதிக்கி றோம்

மரம் பொய் சொல்வதில்லை; வெட்டு கிறோம்



ஆசிரியர் : உன் அப்பா அரசியல் வாதியா?

மாணவன் : ஆமாம் சார், எப்படிக் கண்டுபிடிச்சீங்க?

ஆசிரியர் : 'கற்றது கையளவு; கல்லாதது கட்-அவுட் அளவு'ன்னு எழுதியிருக்கியே, அதை வைச்சுத்தான்!

– எஸ். முகம்மது ஜூகப்

மந்திரி பொய் சொல்கிறார்; மாலை போடுகிறோம்''

''மதமாய்ச் சுருங்காதே. ஜாதியாய் ஒடுங்காதே

மனிதனாய் நிமிர். ஆகாயமாய் விரி, மனிதா''

''இலக்கியம், பொழுதுபோக்குப் பண்டமல்ல.

உலகத்தை உழுது பக்குவப்படுத்தும் கருவி''

''கலை, கருத்தை மட்டும் சுமக்கும் வண்டியல்ல

மனதை நெகிழ்த்தும் அழகின் மாயம்''

வாசிக்க வாசிக்க அவனுள் விரிகிற புதிய உலகம். புதிய புதிய வார்த்தைகள். அர்த்த அடர்த்தியுள்ள வார்த்தைகள். தொட்ட சிந்தனையை உள் ஆழப்படுத்தி விரிய வைக்கிற கருத்துச் செறிவு.

யூனியன், சந்தா, கன்ஸ்லேஷன், கேட் மீட்டிங், ஆர்பிட்ரேஷன், மெமோ என்ற வார்த்தைகளுக்குள்ளேயே புழுங்கிக் கொண்டிருந்த பழுதிக்கு, திடுமென்று ஒரு சாளரம் திறந்து கொண்ட மாதிரி இருந்தது.

கற்றை கற்றையாக வெளிச்சமும், காற்றுப் புதுமையும் அவனுள் பாய்ந்து ஒளிப்படுத்துகிற பிரமை.

''என்ன பழுதி சார், இங்க நிக்கீக? இங்க ஏதாச்சும் தர்ணா, ஆர்ப்பாட்டமா?''

சட்டென்று திரும்பினான். பஸ்ஸுக் குப் போகிற அவசரத்தில் வருகிற லேபர் ஆபீஸர்.

''இல்லே சார், பாரதி விழா.''

''பாரதி விழாவா? உங்களுக்கு அங்க என்ன வேலை? பூக்கடையிலே காப்புக் கடைக்காரருக்கு என்ன ஜோலி, சார்...''

''உங்க ரெண்டு உதாரணமுமே தப்பு, சார்.''

''சரி. நா வர்றேன் சார். பஸ்ஸுக்கு டயமாச்சு. பேச நேரமில்லே, ஸாரி.''

''சரி சார்.''

இவனும் விழா நடக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான்.

(தொடரும்)

காதலுக்கு ஒரு • பொய்

"சரி, இப்ப நம்ம மகதான் நாக ராஜனைப் புடிக்கலைன்னு சொல்லிட்டா. உடனே நீயும் மாடு மாதிரி தலையாட்டி டறதா? ஏன்னு காரணம் கேட்க வேணாமா....?

"யோசித்துப் பாரு கஸ்தூரி... இவ ளுக்குச் சம்பந்தம் பேச ஆரம்பிச்ச இந்த பதி மூணு மாசத்துல எவ்வளவு கஷ்டப்பட்டி ருப்போம்? நாலு பேருகிட்ட மட்டும் கேட் டாப் போறாதுன்னு பதினாறு இடத்தில நன்னா விசாரிச்சு, அலைஞ்சு திரிஞ்சு நம்ம ஸ்டேட்டசுக்கு ஒத்து வர்றா மாதிரி ரெண்டு சம்பந்தம் கொண்டு வந்தேன். என்ன ஆச்சு? இங்கே வந்து காப்பி குடிச்சுட்டு வீட்டுக்குப்





போயி, சொல்லி வச்சாப்ல ரெண்டு பேருமே பொண்ணைப் புடிக்கலைன்னு லெட்டர் எழுதிப் போட்டுட்டா.. அப்போ எல்லாம் நீ எப்படி அழுதே? நம்ம மகளுக்கு என்ன குறைன்னு ராத்திரி இரண்டு மணிக்குத் தூங்காமல் என்மேல சாய்ந்து உட்கார்ந்துண்டு புலம்பினியோல்லியோ...?

"அதுக்காக நம்ம கௌரவத்தை விட்டுக் கொடுத்தோமா? இந்தக் கால மாப்பிள்ளைகளிலேயும் நல்ல மனுஷா இருக்கான்னு மூணாவதா நாகராஜன் வந்தப்போ தான்டி தெரிந்தது. எவ்வளவு டீசன்டா பேசினான்? டவுரியெல்லாம் நம்ம இஷ்டம்னு சொன்னான். காப்பி லேசா மேலே தெறிச்சப்போ இங்கிதமா சிரிக்கக்கிட்டே பரவாயில்லைன்னான். அப்போ கூட நமக்கு நம்பிக்கையாப் படலை. இந்தச் சம்பந்தமும் விலகிடுமோன்னு மனசு அடிச்சிக்கிட்டது. சமயபுரத்தாளை ரொம்ப வேண்டிக்கிட்டோம். இவளைப் புடிச்சிருக்கறதா இன்னிக்குக் காலையிலே நாகராஜன்கிட்டேயிருந்து கடிதம் வந்தப்போ உனக்கும்

ஜி.எஸ். மணிகண்டன்

ராசுக்குட்டி

கல்வி பெறாத ராசுக்குட்டி பாக்ய ராஜ்ம், அவரது உதவியாளர் செம்புலியும் (இணை இயக்குனர் ஜெகன்) அடிக்கும் லூட்டிகள் அனந்தம்.

ரகம் ரகமாக உடைகளணிந்து புகைப் படம் பிடித்துக் கொள்வது என்ன...

தந்தையின் பணத்தை மானாவாரியாகச் செலவழித்துத் திரைப்படங்கள் பார்ப்பதி லும் சீட்டாடித் தோற்பதிலும் மகிழ்ச்சி காண்பது என்ன...

ஐஸ்வர்யாவின் புகைப்படத்தைக் கண்டு மனத்தைப் பறிகொடுத்து, வள்ளியை அடைய வேலன், வேடன், விருத்தன் எனப் பல்வேறு உருவங்களில் முருகப்பெருமான் முயன்றது போல மாறுவேடத்தில் அவர் வீட்டைப் படையெடுப்பது என்ன...

சிரிப்பலைகள் படிப்படியாக உச்சம் பெறுகின்றன.

அத்தனை நகைச்சுவைக்கும் மாற்றாக மனத்தை நெகிழ வைப்பவர் மனோரமா. மகனின் போக்கால் மனம் நொந்து போகும் கணவனுக்கு ஆதரவாக இருக்க வேண்டிய கடமை ஒருபுறம்; மகன் மேல் வைத்திருக் கும் பாசத்தின் காரணமாக அவனை இழந்து விட முடியாத பிணைப்பு இன்னொரு புறம். மெருகேறிய நடிப்பு.

நடுவில் காணாமல் போய், இப்போது மீண்டும் தமிழில் தோன்றியிருக்கும் ஐஸ்வர்

எனக்கும் எப்படி இருந்துச்சு? எங்க கஷ்டமெல்லாம் தீர்த்துட்டியே பகவா னேன்னு கதறலை? கல்யாணம், பந்தல், நகை இதெற்கெல்லாம் எவ்வளவு செல வுன்னு சந்தோஷமா மாய்ந்து மாய்ந்து கணக்குப் போடலை...?

''இப்ப இவ ஆரம்பிச்சுட்டா, பையன் களைப் புடிக்கலைன்னு சொல்றதுக்கு. ஏன்னு சொன்னாளா? சொல்லு. மரம் போல நிக்காதே எரிச்சல் வர்றது. ஏதாவது பேசு.''

நான் அறைக்குள் மறைந்திருந்தேன். அம்மா கன்னத்தில் கைவைத்தவாறு சத்தம் போடுகின்ற அப்பாவின் முன் நின்றிருந் தாள். அவளுக்கு பயமாய்த் தோன்றியிருக்க வேண்டும். நாக்கு உலர மெதுவாகப் பேசி னாள்.

''கேட்டேன். ஆபீசுல ஒரு புரமோ ஷனை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறா ளாம். அதுக்கப்புறம் போதும்ங்கறா.''

''புரமோஷனா? யாருக்கு வேணும் அது? அவ ஆபீசுக்குப் போறதே வேஸ்ட், தெரியுமில்லை? உன்னோட நச்சரிப்பு பொறுக்க முடியலைன்னுதான் வேலைக்கே விட்டேன். இந்த லட்சணத்திலே இது ஒரு காரணமா? சே!''

அப்பா தொடர்ந்து அம்மாவிடம் எகிறி னார். எனக்கு விழிகளில் ஈரமேகம் கட் டிற்று. அயர்ச்சியுடன் கட்டிலைப் பிடித்துக் கொண்டேன்.

நாகராஜனை நினைக்கும் போது மனசு கொதித்தது. பாவி! ஏன் என்னைப் பிடித்து விட்டது என்று கடிதம் போட்டான்?

எவ்வளவு தரம் சொன்னேன். இங்கி ருந்து நான்கு மைல் தொலைவில் இருந்த அவன் அலுவலகம் தேடிச் சென்று கண்க ளில் மெலிதாக நீர் திரையிடக் கெஞ்சி னேன், தயவு செய்து என்னைப் பிடிக்க வில்லை எனக் கடிதம் போடுங்கள் என்று; என்னால் உங்களை ஏற்றுக் கொள்ள முடி யாது என்று.

''ஏன் உஷா? எதுக்கு அப்படி சொல்றீங்க? எனக்குப் புரியலை,'' என்று திரும்பத் திரும்பக் கேட்டான்.. முதலில் கூற வேண்டாம் என்றுதான் நினைத்தேன். காரணம் தெரியாமல் விடமாட்டான் எனத் தோன்றவே சொன்னேன்.. எனக்கும் சந்தா னத்திற்கும் உள்ள காதலைச் சொன்னேன். இருவரும் மனப்பூர்வமாய் ஒன்றிப் போய் விட்டதைச் சொன்னேன். இந்தக் கல்யா ணம் நடந்தால் நானோ சந்தானமோ உயிர் வாழ்வதே சாத்தியமில்லை என்பதைச் சொன்னேன்.

நாகராஜன் வியப்போடு, ''அப்போ இதுக்கு முன்னாடி வந்த இரண்டு சம்பந்தங் களையும் வேணாம்னு விலக வச்சது நீங்க தானா?''

''ஆமாம்,'' என்றேன்.

''எப்படி?''

''ஒருத்தரை இப்படி நேரில் பார்த்துப் பேசினேன். இன்னொருவர் ஆபீஸ் அட்ர ஸுக்கு ரகசியமா லெட்டர் போட்டேன்.''

''வீட்டுல உங்க லவ்வை சொல்லிட வேண்டியதுதானே?''

''முடியாது நாகராஜன்.''

''ஏன்?''

''அவங்க ஸ்டேட்டஸ் பார்க்கறவங்க. அப்பாவுக்கு உங்களை மாதிரி பெரிய படிப்பு வேணும். உத்தியோகம் வேணும். அம்மாவுக்கு உடம்பு பூரா நகை மாட்டிட்டு, பெட்டி நிறைய பணத்தோட அலையற வங்க வேணும். சந்தானம் போல சின்ன வேலையில் இருந்தாலும் நல்ல குணத் தோட இருக்கறவனைப் பிடிக்காது. எடுத் தெறிஞ்சு பேசிடுவாங்க. பணம்ங்கற திமி ரோடு அலையறவங்க முன்னாடி என் பேச்செல்லாம் எடுபடாது நாகராஜன்.''

''நான் இப்போ உங்களைப் புடிக்க லைன்னு சொல்லிட்டா என்ன ஆகப் போவுது?''



யாவிடம் தெரிவது புது நகாக. அதில் அவரது பங்கு பாதி என்றால், மீதிக்குப் பொறுப்பு காமெரா.

மகன் மேல் கொண்டிருக்கும் பாசத்தை விடக் குடும்ப கௌரவத்துக்கே முதலிடம் என்பதில் உறுதி காண்பிக்கிறவர் தந்தை கல்யாண்குமார். பண்பட்ட கம்பீரம் பளிச்.

பாக்யராஜ் உண்மையில் சொந்த மகனல்ல; ஓர் அனாதை என்பது இடையில் வெளிப்பட்டுக் கதைக்கு விறுவிறுப்புச் சேர்க்கும் நல்ல சஸ்பென்ஸ்.

குபீர் சிரிப்பைத் தூண்டும் பட்டாசு வசனங்கள். அதற்குத் துணை நிற்கும் விறுவிறுப்பான திரைக்கதை. பாக்யராஜ் பாணியை மீண்டும் வலியுறுத்துகிறவை இந்த இரண்டும் என்றாலும், உச்சகட்டத்துக்குக் கட்டியம் கூறும் திடீர் திருப்பங்கள் சற்று மிகை.

– சி. ஆர். கே.

''உடனே அப்பா வேறு வரன் தேடுவார். இடையிலே கொஞ்சம் நாள் டைம் கிடைக்கும். நாங்களும் யோசிப்போம்.''

''ஓ.கே. நான் இப்போ என்ன செய்யணும்?''

''உங்களுக்கு என்னைப் பிடிக்கலைன்னு அப்பா பேருக்கு தெளிவா ஒரு லெட்டர் எழுதிப் போட்டுடுங்க. போறும். வேற எதுவும் வேணாம். செய்வீங்களா?''

நாகராஜன் சரி என்றான். என் காதல் வெற்றி பெற வாழ்த்துச் சொன்னான். நான் நன்றி சொல்லி விட்டு வந்தேன்.

ஆனால் இப்போது என்னைப் பிடிக்கிறது என்றும், முகூர்த்த நாள் குறிக்குமாறும் லெட்டர் அனுப்பி உள்ளான். நான் பதறிப் போய் அம்மாவிடம் மறுக்க, அப்பா குதிக்கிறார்.

எனக்கு நாகராஜன் மேல் ஆத்திரம் புறப்பட்டு, அதுவே இயலாமையால் அழுகையாக மாறிற்று. முன்னால் என்னைப் பெண் பார்த்துச் சென்ற இருவருமே என் கோரிக்கையை ஏற்றனர். இவனுக்கு மட்டும் என்ன? ஒரு வேளை இவன் சாடிஸ்டோ? என் காதலை அவனிடம் முழுமையாகச் சொன்னது தவறோ? கடவுளே!

அப்பா இன்னும் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.

''பொம்மனாட்டிங்க அதிகம் பேசப்படாது கஸ்தூரி. அது நல்லதில்லை. நல்லதேயில்லை. குடும்பமே நாசமாயிடும். நீ உஷாகிட்ட சொல்லு. உன் நகப்பன் உனக்கு நல்லதுதான் செய்வான்னு. அடுத்த திங்கள் கிழமை நல்ல நாள். நிச்சயதார்த்தம் வைச்சிடலாம். நான் காலையிலே சொந்தக்காரர்கிட்ட தெரிவிக்கட்டு வரேன்.''

நான் செய்வது அறியாதவளாய்த் தடுமாறினேன்.

அடுத்த இரண்டு நாட்கள் அழுவலக விடுமுறை. எனக்கு முள்ளின் மீது இருப்பதாகத் தோன்றியது. அதற்குள் செய்தி பரவ, உறவுப் பெண்கள் வீட்டிற்கு வந்துவிட்டனர்.

''அதிர்ஷ்டம்தாண்டி உஷா உனக்கு.''

''மாப்பிள்ளைக்குப் பெரிய உத்தியோகமாமில்ல!''

''நம்ம குடும்பத்திலே இப்படி ஒரு பையன் இதுவரை எவளுக்குமே கிடைக்கலையாக்கும்.''

''உஷா பணக்கார வீட்டுப் பொண்ணு. கொடுத்து வச்சவ!''

என்னால் அழுகையைக் கட்டுப் படுத்த இயலவில்லை.

நான் அழுததும் சந்தானம் ஆடிப் போய் விட்டார். நான் கண்ணீர் சிந்தி அவர் பார்த்ததில்லை. கடற்கரை என்றும் நினைக்காமல் மெலிதாக அணைத்து கூந்தலை வருடி விட்டார்.

''ச்சீ! எதுக்கு அழறே? இப்போ என்ன ஆயிடுச்சு? இது தேவையில்லை உஷா. காதலிக்கறவங்க உடைஞ்சுரக் கூடாது. அது தப்பு. என்னை நிமிர்ந்து பாரேன். எந்தப் பிராப்ளம் வந்தாலும் துணிந்து நிற்கணும்டா. ப்ளீஸ், பி ஈஸி!''

''எனக்கு பயமா இருக்கு சந்தானம்.''

''எதுக்கு?''

''அந்த நாகராஜன் முரடனோன்னு படறது. ஒருவேளை நம்ம காதலை தெரியாமல் சொல்லிட்டேனோன்னு தோணுது.''

''அப்படி எல்லாம் இருக்காது. சும்மா மனசைப் போட்டு அலட்டிக்காதே. நாகராஜன் ஒருவேளை ஏற்கெனவே எழுதி வச்சிருந்த லெட்டரை மறந்து போய் போஸ்ட் பண்ணியிருக்கலாம்.''

''நோ. நன்னாப் பார்த்தேன்.''

''என்னது?''

''லெட்டர் மூலைல டேட் கரெக்ட்டாத்தான் இருந்துச்சு.''

சந்தானம் மோவாயைத் தடவினார். வானத்தைச் சிறிது நேரம் வெறித்துவிட்டு, மணலில் கோடு கீறியபடி, ''இது யோசிக்க வேண்டிய விஷயம்'' என்றார். என்னால்

தாங்க முடியவில்லை. எத்தனை சிரமம் இந்த இளைஞனுக்கு என்று மனசு விம்மிற்று. இந்தக் காதல் இப்போதே வெற்றி அடைந்து சந்தானத்தின் மார்பில் சாய்ந்து உறங்க மாட்டோமா என்று ஏக்கமாக இருந்தது.

''கவலைப் படாதே உஷா. இதுக்கு ஒரு வழி இருக்கு.''

''என்ன?''

''இப்போ டைம் என்ன ஆகறது?''

''நாலு நாற்பத்தைந்து.''

''நேரம் ஆகலை. வா நாம நாகராஜன் ஆபீசுக்கு ஃபோன் பண்ணி இதைப் பற்றிப் பேசுவோம்.''

''மறுத்துட்டா....?''

''ப்ச்! அது அப்புறம். முதல்ல கேட்டுப் பார்ப்போம். வா, பூத்துக்குப் போகலாம்.''

''எனக்கு நம்பிக்கையில்லை சந்தானம்.''

''எழுந்து வாயேன்.''

நாகராஜன் அலுவலகத்தில் ஃபோன் செய்து கேட்க, அவன் ஊருக்குப் போய் விட்டான் என்றும், திரும்பி வர சிலநாட்கள் ஆகலாம் என்றும் தகவல் கிடைத்தது. நான் கைகளைப் பிசைந்தேன்.

சந்தானம், ''வேறு வழியில்லை உஷா. உங்க வீட்டில் நம்ம காதலைச் சொல்லிரு. சம்மதம் கிடைச்சா நல்லது. இல்லைன்னா வேற ஏதாவது செய்யலாம். நல்லதே நடக்கும்னு நம்புவோம்,'' என்றார் மெதுவாக.

நிம்மதி சுத்தமாகத் தொலைந்து போயிற்று. பஸ் பிடித்து வீட்டிற்கு வந்த போது அதிர்ச்சியாக இருந்தது. நாகராஜுவின் தகப்பனார் வராந்தாவில் பேசிக் கொண்டிருந்தார். நான் பின்பக்கமாக வீட்டிற்குள் வந்து நின்றேன்.

''என்ன விஷயம்?'' அப்பா விசாரித்தார்.

''அது....''

''தயங்காம சொல்லுங்க.''

''மன்னிக்கணும். உங்க வீட்டுப் பொண்ணு வேணாம்னு... இப்ப, பையன் அபிப்ராயப்படுறான்....''

இது என்ன புதுத் திருப்பம்? அப்பாவைப் போல என்னையும் மின்னல் தாக்கியது. நாகராஜன் என்னைப் பிடித்திருப்பதாக முதலில் தெரியாமல் எழுதி விட்டானாம். மறுபடியும் யோசித்துப் பார்த்து நேற்றுத் தான் வேண்டாம் என்று சொன்னானாம். இனி கடிதம் எழுதினால் குழப்பமாக இருக்கும். நேரில் போய்ச் சொல்லுங்கள் என்று தகப்பனாரை அனுப்பி வைத்தானாம்..

''நீங்க சொல்றது நன்னாயிருக்கா?'' அப்பா திடுமெனக் கேட்டார். குரல் நடுங்குவதை உணர முடிந்தது.

''இல்லை. நான் செய்யறது தப்புத் தான். ஒத்துக்கறேன். மறுக்கலை. ஆனா இப்போ நம்ம ரெண்டு பேருக்கும் இடையிலே மனக்கிலேசம் உண்டாயிடும்னு சேர்த்து வச்சுட்டா, பின்னாடிக வாழ்க்கை கெட்டுடும்.''

''நான் உறவு மனுஷாகிட்டே சொல்லிட்டேன். அவங்க இனி என் பொண்ணைத்தான் தப்பாப் பேசுவாங்க....''

''அதுக்கு என்ன செய்யறது? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பேசியதை விட அதிகம் கேட்கறான்னு சொல்லுங்க. கொஞ்ச நாள் கஷ்டமாயிருக்கும். பிறகு சரியாகி விடும்..''

அவர் கிளம்பியதும் வீடே இருண்டு போனது. மழை பெய்து ஓய்ந்தாற் போல் மஹா அமைதி. அப்பாவின் விழிகளில் நீர் சொட்டுவதை முதன் முதலாகப் பார்த்தேன்.

இரவு முழுக்கத் தூக்கமில்லை. 'ஈஸ்வரா! என் வாழ்க்கையில் மட்டும் ஏன் இந்தப் புயல்? நாகராஜன் எதற்காக இப்படி குழப்புகின்றான்?' புரண்டு புரண்டு படுத்ததில் மனசு மாதிரி உடம்பும் வலித்தது.

மூன்று நான்கு நாட்கள் கழித்து, அலுவலகத்தில் என்னைத் தேடி யாரோ வந்திருப்பதாகச் சொன்னார்கள். நாகராஜன் காத்திருந்தான். எனக்கு நமஸ்கரிக்கத் தோன்றவில்லை.

''என் மேல கோபமா?'' என்றான் நாகராஜன்.

நான் வெடித்தேன். ''ஆமாம் கோவந்தான். ஏன் இப்படி நடந்து கொண்டீர்கள்? உங்களுக்குத் தினம் ஒன்று பேசறதால் என்ன லாபம்?''

''ஸாரி உஷா. எத்தனை நாள்தான் லவ் பண்ணிட்டே காலம் தள்ளுவீங்க?''

''அதுக்கு?''

''இது... உங்க ஃபாதர் மனசு மாறுவதற்காக நான் கொடுத்த ஷாக் ட்ரீட்மெண்ட்!''

''புரியலை.''

''உங்களைப் புடிக்கலைன்னு உடனே சொல்லி இருந்தேன்னா, உங்கப்பா அவ்வளவு சீரியசாவே எடுத்திருக்க மாட்டார். ஆனா நான் இப்போ நடந்துண்ட முறையால், எல்லோரிடமும் தெரிவித்த பின்னாடி சம்பந்தம் நின்னுடுச்சேன்னு வருத்தப்படுவாரு. உறவுக்காரங்க கேலி பேசுவாங்களேன்னு மனசுக்குள்ள குமைவாரு. பெரிய இடத்துப் பசங்களே இப்படித்தான்னு நினைப்பாரு. ஸோ, ஸ்டேட்டஸ், பணம், இதும் பேர்ல எல்லாம் அவருக்கு வெறுப்பு வரும்.. இதுதான் ஹ்யூமன் சைக்காலஜி. இனி யாராக இருந்தாலும் இம்மாதிரி மனசுக்கு நோவு தராத நல்லவன்னா, அவன் கையில் உங்களைக் கொடுக்கலாம்ங்கற முடிவோடு இருப்பாரு. இப்ப சந்தானத்தோட நல்ல குணத்தைச் சொல்லிப் பாருங்க. ஈஸியா உங்க லவ்வை ஏத்துக்குவாரு. உங்க காதல் வெற்றி பெறணும்னு தான் இப்படி நடந்துட்டேன். தப்பா?''

நான் நாகராஜனைப் பார்த்துக் கை கூப்பினேன்

காம்ப்ளான் வழங்கும் உன்னதமான சேமிப்பு திட்டம்!



நீங்கள் விரும்பும் காம்ப்ளான் வசதிமிக்க, கச்சிதமான கார்ட்டன் (அட்டைப்பெட்டி) பேக்கிலே கிடைக்கிறது. 200 கிராம் டின் பேக்கைவிட ரூ. 2/- குறைவாகவும், 500 கிராம் டின் பேக்கைவிட ரூ. 5/- குறைவாகவும் உள்ள கார்ட்டன் பேக் வாங்கி, சேமிப்புடன் காம்ப்ளான் அளிக்கும் அவ்வளவு நற்குணங்களையும் நற்சுவையையும் பெறுவீர்.

எவ்வளவு உன்னதமான ஒரு சேமிப்பு திட்டம்!

காம்ப்ளான்® திட்டமிட்ட பரிபூரண உணவு.

GK/91/203 TAM

500 கிராம்: சாக்லேட், மேங்கோ, ரெகுலர். 200 கிராம்: சாக்லேட், ரெகுலர்.
தேர்ந்தெடுத்த மார்க்கெட்டுகளில் கிடைக்கிறது.

சக்கரவர்த்தித் திருமகன்

9. தாடகை

அன்றிரவு சரயூ நதிக்கரையில் முனிவரும் ராஜ குமாரர்களும் புல் தரையில் படுத்துத் தூங்கினார்கள். படுப்பதற்கு முன் இரண்டு மந்திரங்களை விசுவாமித்திரர் உபதேசித்தார். 'பலம்' 'அதிபலம்' என்ற இரண்டு ரகசிய மந்திரங்களை உபதேசம் செய்துவிட்டு, ''இந்த மந்திரங்கள் ஜபித்தவனை எந்தத் தீங்கும் அண்டாது'' என்று சொல்லி ராஜ குமாரர்களை ஆசிர்வதித்தார்.

அடுத்த நாள் காலை எழுந்து புறப்பட்டுப் போய் அங்க தேசத்தில் காமாசிரமத்தை அடைந்தார்கள். அங்கே வாசம் செய்து கொண்டிருந்த ரிஷிகளுக்கு ராம லக்ஷ்மணர்களை அறிமுகம் செய்துவிட்டு, காமாசிரமக் கதையைச் சொன்னார் :

''இதுதான் சங்கர பகவான் நீண்ட காலம் தவம் செய்த இடம். மதியற்ற மன்மதன் சங்கரன் மேல் பாணம் விட்டு, பகவானுடைய கோபத்துக்கு ஆளாகி இந்த இடத்தில் எரிக்கப்பட்டான். அதனால் இந்த இடம் காமாசிரமம் என்று பெயர் அடைந்தது.''

அன்று இரவு அங்கு வசித்து வந்த ரிஷிகளுடைய அதிதிகளாக முனிவரும் ராஜ குமாரர்களும் தங்கினார்கள்.

காலையில் நித்திய கர்மங்களை முடித்துவிட்டுப் புறப்பட்டார்கள். கங்கைக் கரையை அடைந்ததும் அவ்விடத்திலுள்ள ரிஷிகள் அமைத்துத் தந்த ஓர் ஓடத்தில் ஏறிக் கொண்டு கங்கையைத் தாண்டிச் சென்றார்கள்.

ஆற்றின் நடுவில் ஓடம் செல்லும் போது ஒருவிதப் பெருஞ் சத்தம் கேட்டு ராஜகுமாரர்கள் அது என்ன என்று கேட்டார்கள். அது சரயூ நதியானது கங்கையில் பாய்ந்து சேருவதினால் உண்டாகும் ஓசையென்று விளக்கினார். அவ்விடத்தில் ராஜகுமாரர்கள் இரு புண்ணிய நதிகளையும் தியானித்து வணக்கம் செலுத்தினார்கள். பரம் பொருளைத் தியானிக்க ஆறும் மலையும் மேகமும் பயன்படும்; எந்தப் பொருளும் பயன்படும். ஆயினும் தலைமுறை தலைமுறையாக மக்கள் பக்தி செலுத்தின நதியும் மூர்த்தியும் கோயிலும் குளமும் நம்முடைய உள்ளத்தை எளிதில் கடவுள் வழியில் செல்லச் செய்யும்.

கங்கையைத் தாண்டி நடந்து சென்றார்கள். வழி ஒரு பயங்கரமான காட்டுக்குள் சென்றது. மரங்களும் புதர்களும் அடர்ந்து நுழைந்து போவதே மிகக் கஷ்டமாக இருந்தது. துஷ்ட மிருகங்களின் சத்தம் பயங்கரமாக இருந்தது.

ராம லக்ஷ்மணர்களுக்கு முனிவர் சொன்னார் : ''இதுவே தாடகாவனம். இப்பொழுது பயங்கரக் காடாக இருக்கும் இந்த இடம் பூர்வத்தில் மிகச் செழிப்பும் செல்வமும் நிறைந்த தேசமாக இருந்தது. ஒரு காலத்தில் இந்திரன் விருத்திராசுரனைக் கொன்று பிரம்மஹத்தி தோஷம் அடைந்தான். அதனால் அவன் தேவ லோகத்தில் இருக்கத் தகாதவனாகி மிக வருந்தினான். தேவ ராஜனாகிய இந்திரனுடைய பாபத்தைப்



போக்கத் தேவர்கள் எல்லாரும் சேர்ந்து மிகச் சிரமப்பட்டார்கள். புண்ணிய நதிகளிலிருந்து பெரிய பாத்திரங்களில் ஜலம் கொண்டு வந்து அவனை ஸ்நானம் செய்வித்து மந்திரங்களினால் பரிசுத்தப்படுத்தினார்கள். அந்த ஸ்நான நீரினால் அவனிடம் தங்கியிருந்த மலம் கழுவப்பட்டுப் பூமியில் சேர்ந்ததும் பூமியின் சக்தியால் அது ஜீரணிக்கப்பட்டு உரமாகி அந்தப் பிரதேசம் மிகச் செழிப்படைந்தது.''

எத்தகைய அழுகிப் போன, புழுத்துப் போன பொருளும் - பிரேதம், துர்க்கந்தமலம் உட்பட - பூமியில் புதைத்து விட்டால் மண்ணோடு மண்ணாகிப் போய்ப் பயன்பட்டு விடுகிறது. அதுவே புல்லும் செடியும் பழமும் கிழங்கும் அமிருதம் போன்ற உணவுமாகிறது. இதுவே பூதேவியின் அருள் சக்தி.

''வெகு காலம் வரையில் இங்கே ஜனங்கள் சுகமாக இருந்தார்கள். பிறகு சுந்தன் என்கிற யக்ஷனுடைய மனைவியான தாடகையும் அவள் மகன் மாரீசனும் இந்தத் தேசத்தை நாசம் செய்து கோர வனமாக்கி விட்டார்கள். அவர்கள் இன்னும் இந்த வனத்தில் இருந்து கொண்டு வருகிறார்கள். உனக்கு மங்களம்.★ அந்தத் தாடகைக்குப் பயந்து இங்கே யாரும் வருவதில்லை. அவள் ஆயிரம் யானை பலம் கொண்டவள். அவளுடைய உபத்திரவத்தைப் போக்கவே உன்னை அழைத்து வந்தேன். ரிஷிகளைத் தொந்தரவு செய்யும் இந்த அரக்கி உன்னால் கொல்லப்படுவாள் என்பதில் சந்தேகமில்லை'' என்றார்.

தாடகையைப் பற்றி விசுவாமித்திரர் சொன்னதைக் கேட்ட ராமன், ''சுவாமி! தாடகை யக்ஷ ஸ்திரீ என்று சொன்னீர். யக்ஷர்களைப் பற்றி அவர்கள் இவ்வளவு தேக பலம் கொண்டவர்கள் என்று நான் கேள்விப்படவில்லையே? - யக்ஷர்களுக்குத் தேக பலம் ராக்ஷசர்களைப் போல் இல்லை என்று நான் இதுவரை எண்ணி வந்தேன். அதிலும் ஸ்திரீ ஒருத்திக்கு எவ்வாறு இத்தகைய பலம் உண்டாயிற்று?'' என்று கேட்டான்.

''நீ கேட்கும் கேள்வி பொருத்தமானதே. இதற்குக் காரணம் பிதாமகர் கொடுத்த வரமாகும். சுகேது என்ற ஒரு யக்ஷன் இருந்தான். அவனுக்குச் சந்தானம் உண்டாகாமல் தவமிருந்து பிரம்மா அவனுடைய நன்னடத்தையையும் தவத்தையும் கண்டு திருப்தியடைந்து வரம் தந்தார். 'அழகான ஒரு பெண் குழந்தை உனக்கு உண்டாவாள். அவள் வளர்ந்து ஆயிரம் யானைகளின் தேக பலம் அடைவாள். ஆனால், உனக்கு ஆண் சந்தானம் உண்டாகாது' என்று வரம் தந்தான்.

''அப்படியே அவனுக்கு ஒரு மகள் பிறந்தாள். அவள்

★ ''பத்ரம் தே!'' - அதாவது ''உனக்கு மங்களம்'' என்று ராமாயணத்தில் அடிக்கடி வரும். இது ஆசீர்வாத மொழி. பயம் அல்லது துக்கம் தரக்கூடிய விஷயத்தைச் சொல்லும் போது அன்புடன் இவ்விதம் காப்பு மொழியைச் சேர்த்துச் சொல்வது வடமொழி இலக்கிய மரபு.



தான் தாடகை. மிக சௌந்தரிய ரூபவதி யான அவளைச் சுந்தன் என்ற யக்ஷனுக் குக் கொடுத்து விவாகமாயிற்று. அவர்களுக்கு மகன் மாரீசன் பிறந்தான்.

"ஒரு சமயம் அகஸ்தியருடைய கோபத்தினால் சாபம் அடைந்து சுந்தன் மரணமடைந்தான். இதனால் சுந்த னுடைய மனைவி தாடகையும் மகன் மாரீசனும் இருவரும் ரோஷம் கொண்டு, அகஸ்தியரை எதிர்த்தார்கள். தேக பலத்தைக் கொண்டு எதிர்க்க வந்த அவர்களை அகஸ்திய முனிவர் சாப மிட்டார். அதன் பயனாக அவர்கள் நர மாமிசம் தின்னும் ராக்ஷசப் பிராணி களாகி விட்டார்கள். தாடகையின் அழகு தீர்ந்து போய்க் கோரமான ராக்ஷச உருவமடைந்து விட்டாள்.

"தாடகையும் மாரீசனும் அகஸ்தி யருடைய பிரதேசத்தில் இருக்கும் மக்களை அது முதற்கொண்டு இடை விடாமல் இம்சித்து வருகிறார்கள். பெண்ணைக் கொல்வது க்ஷத்திரிய தர்மத்துக்கு விரோதம் என்று நீ தயங்க வேண்டாம். இவளுடைய அக்கிரமங் களைப் பொறுக்க முடியாது. மிகக் குரூரமான அரக்கி. இத்தகையோரை அவர்கள் ஆணாயிருந்தாலும் பெண் ணாயிருந்தாலும் தண்டிப்பது அரசர்க ளுடைய கடமை. அனைவருடைய க்ஷேமத்திற்காகக் காட்டு மிருகங்களைக் கொல்லுவது போல் இந்த அரக்கியைக் கொல்லுவது நியாயமேயாகும். ராஜ்ய பாரம் வகித்தவர்களுக்கு இது கடமை யாகிறது. அதர்மத்தைச் செய்த பல மானிட ஸ்திரீகளுக்கும் இவ்வாறு மரணம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நீ தயங்க வேண்டியதில்லை" என்றார்.

எல்லாத் தேசங்களிலும் பெண் களைத் தண்டிக்க வேண்டி நேரிட்டா லும் மரண தண்டனை விதிக்கக் கூடாது என்று பழைய வழக்கம் உண்டு. ஆனால் எந்தப் பொது விதிக்கும் விதி விலக்குகள் இருந்தே தீரும். இல்லா விடில் பொது நன்மை நிலை பெறாது.

"குருவே, சபையில் எங்கள் தந்தை தாங்கள் சொல்லும்படி நாங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று ஆணையிட் டிருக்கிறார். உங்களுடைய சொற்படி மக்கள் க்ஷேமத்துக்காக இந்தத் தாட கையைக் கொல்வேன்" என்று சொல்லிக் கோதண்டத்தை வளைத்து நாண் ஏற்றித் தோள்வரை நாணை இழுத்து ஒலி எழுப்பினான். அந்த ஒலி வனம் முழுதும் நிரம்பி, எட்டுத் திசை களிலிருந்தும் எதிரொலி கிளம்பிற்று. வனத்திலுள்ள பிராணிகள் அனைத்தும் நடுங்கின.

தாடகை இந்தச் சப்தத்தைக் கேட்டு யாருக்கு இவ்வளவு தைரியம் என்று நினைத்தாள். பிறகு சப்தம் வந்த இடத்தைத் தேடி மகா கோபத்தோடு ராமன் மேல் பாய்ந்தாள்.

முதலில் கை கால்களை வெட்டி விட்டு அங்கஹீனம் செய்தால் போதும் என்று ராமன் எண்ணி அவ்விதம் செய்யப் பார்த்தான். ஆனால் தாடகை யின் பாய்ச்சல் அதிகரித்தது. இங்குமங் கும் சஞ்சரித்துக் கல்மாரி பொழிந்தாள். ராமனும் லக்ஷ்மணனும் அம்புகளைக் கொண்டு கல் மாரியைத் தடுத்து வந்தார் கள்.

யுத்தம் நடந்து கொண்டே இருந் தது. "இவ்விதம் இது முடியாது. இரக்கம் காட்ட வேண்டாம்! மாலை யாகி விட்டது; இருட்டிய பின் அரக்கி யின் பலம் அதிகமாகப் பெருகும். தாமதம் வேண்டாம்" என்று முனிவர் எச்சரித்தார்.

அதன்மேல் அரக்கியைக் கொல்லு வதே சரி என்று ஒரு கொல்லும் அம்பை எய்தான். அது அரக்கியின் மார்பைத் துளைத்தது. அவளுடைய கோரமான பெருந்தேகம் உயிரற்றுப் பூமியில் வீழ்ந் தது.

தேவர்கள் ஆரவாரித்தார்கள். முனி வரும் அடங்கா மகிழ்ச்சியடைந்து சக்கரவர்த்தித் திருமகனை உச்சி முகந்து ஆசீர்வதித்தார்.

தாடகை இறந்து வீழ்ந்ததும் அந்த வனம் உடனே சாபம் நீங்கியது போல் மிக ரமணீயமாய் விளங்கிற்று. இரவு அரச குமாரர்கள் அங்கேயே கழித்தார் கள். அதிகாலையில் எழுந்து அனுஷ்டா னங்கள் முடித்துக் கொண்டு மூவரும் அங்கிருந்து விசுவாமித்திரருடைய ஆசிரமத்துக்குச் சென்றார்கள்.

(தொடரும்)



பாலம்

●● இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டு, இன்னல்களை ஏற்றும் இன்னுயிர் ஈந்தும் தியாகங்கள் புரிந்த தமிழக முஸ்லீம் பெருமக்கள் பற்றிய ஓர் ஆய்வு செய்து வருகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் அல்லது அவர்களுக்கு நெருங்கியவர்கள் முகவரி எழுதினால் நேரில் வந்து விவரங்கள் சேகரித்துக் கொள்வேன்.

- ஆர். முருகன்,
மே/பா எம்.பி. சதாசிவம்,
29–B, மாதைநாள் தெரு,
சேலம் - 636 009

●● தினகரனில் 1984ல் வெளியான எனது ''ஆசை'' சிறுகதையும் அதே ஆண்டில் மாலை மலரில் வெளியான ''ராகிங் மொட்டை'' என்ற சிறுகதையும் எனக்குக் கிடைக்கச் செய்தால் சன்மானம் உண்டு.

- பி. கலியமூர்த்தி,
பெட்டி ஷாப்,
பிடாரி தெற்கு வீதி,
சீர்காழி.

●● புதுச்சேரியை மையமாகக் கொண்டு ''பட்டுப் புழு வளர்ப்புப் பொருளியல்'' என்ற ஆய்வு மேற்கொள்ள விருப்பம். நிதி உதவி நிறுவனங்களும் தொழில் செய்வோரும் ஆலோசனைகள் வழங்கக் கோருகிறேன். பிற மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய ஆய்வுகள் பற்றிய விவரங்கள் கிடைக்குமானாலும் நல்லது.

- ப. பிரபாலோலன்,
6, விநாயகர் கோயில் வீதி,
திலாஸ்பேட்டை,
பாண்டிச்சேரி - 9.

●● மதுரை மணி அய்யர் அவர்களின் கச்சேரி டேப்பில் பதிவு செய்திருப்பின் தொடர்பு கொள்ளவும். என்னிடம் உள்ள டேப்களைத் தரவும் தயார். வியாபார நோக்கம் ஏதும் இல்லை. அவரைப் பற்றிய கட்டுரைகள், செய்திக் குறிப்புக்கள் இருந்தாலும் தெரிவிக்கவும்.

- ஏ. ஆர். எஸ். மணி,
21– A, ஸ்கூல் வியூ சாலை,
ஆர். கே. நகர், சென்னை - 28.

●● அண்ணாமலை பல்கலைக் கழகம் B. Lit (தமிழ்) பழைய பாடத் திட்டத்தில் (86-89) மூன்றாம் ஆண்டுப் பாட நூல்கள் அனைத்தும் தேர்வுக்காகத் தேவைப்படுகின்றன. தேர்வுகள் முடிந்ததும் திருப்பித் தந்து விடுகிறேன்.

- ஏ. சிக்கந்தர் மஸ்த்தான்,
13, முஸ்லீம் தெரு,
பரமத்தி - 637 207
சேலம் (மாவ)

●● கம்பராமாயணத்தை மட்டுமே 367 தடவைகள் பிரசங்கம் செய்த அடியேன், எனக்குப் பிறகு அடியேன் சேகரித்துள்ள கருத்துக்களைப் பரப்புவதற்கு மாணவர்களைத் தயார் செய்ய எண்ணுகிறேன். ஆர்வமுள்ள பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் எழுதவும். கட்டணம் ஏதும் கிடையாது.

- வி. தியாகராஜன்,
17, 27வது தெரு, (விரிவாக்கம்)
தில்லை கங்கா நகர்,
சென்னை - 600 061.

●● நான் B.E. Electrical and Electronics பட்டதாரி. எனக்கு Marine Engineer ஆக விருப்பம். அதற்கான வழி முறைகளை விவரம் அறிந்தவர்கள் தெரியப்படுத்தினால் நன்றி உடையவனாக இருப்பேன்.

- எம். மெய்யப்பன்,
3–A, கமலா நேரு தெரு,
உ. சிறுவயல் - 623 208
ப. மு. தேவர் (மாவ)

●● பிரம்ம சூத்திரம் - ஆதி சங்கரர் சம்ஸ்கிருத பாஷ்யம் - தமிழ் உரையுடன் கூடியது - எழுதியவர் : ஞானானந்த பாரதி சுவாமிகள். யாரிடமாவது இருந்தால் விலை விவரம் எழுதவும்.

- ஏ. வி. ரத்னம்,
C–6, P.A. பில்டிங்ஸ்,
43, வெங்கடகிருஷ்ணன் சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பேற்க இயலாது.)





* அன்னை வீரம்மாள்

அன்பு உள்ளத்தின் வீரசாகசங்கள்!

திருச்சி விமான நிலையத்திற்கு எதிரே உள்ள குண்டும் குழியுமான ஏர்லெஸ் சாலையில் குலுங்கிக் குலுங்கி ஒரு கிலோ மீட்டர் தூரம் பிரயாணித்தால் வருவது அன்னை ஆசிரமம். (அடுத்துவரும் சில வரிகளை 'தம்' பிடித்துப் படிக்கவும்.) அனாதைக் குழந்தைகளுக்கான புகலிடம், இலவச பாலர் பள்ளி, இலவச முதியோர் இல்லம், இலவச வாசக சாலை, இலவச கைத்தொழில் நிலையம், இலவச மேனிலைப் பள்ளி, இலவச சத்துணவு மையம், இலவச மருந்தகம், இலவச இரவுப் பள்ளி, இலவசக் குழந்தைகள் காப்பகம் என்று ஏராளமான 'இலவச'ங்களைத் தன்னகத்தே கொண்டது இந்த அன்னை ஆசிரமம். இதன் ஸ்தாபகர் அறுபத்தியெட்டு வயது அன்னை வீரம்மாள். தூய வெண்ணிறக் கதர் ஆடை, அதிர்ந்து பேசாத குரல், சாந்தம் குடிகொண்ட முகம், சாதனைகள் பல புரிந்த பிறகும் பெண்குல முன்னேற்றத்திற்காக இன்னும் ஏராளமான கனவுகளைச் சுமந்து கொண்டிருக்கும் கண்கள் - இவைதாம் அன்னை வீரம்மாள். அன்பினால் காரியங்களைச் சாதிப்பதற்கும் உள்ளத்தில் வீரம் வேண்டும் என்பதை உணர்த்தும் பொருத்தமான பெயர்.

திருச்சி வானொலி நிலையத்தில் சுமார் நாற்பது ஆண்டு காலம் நிலையக் கலைஞராக வேலை பார்த்துக் கொண்டே ஓய்வு நேரத்தில் ஏழைப் பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் அனாதைக் குழந்தைகளின் நலனுக்காக உழைத்து வந்தார். அந்த நோக்கத்திற்காக 1954-ல் இவரால் ஒரு சிறிய திண்ணையில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு பெண்கள் நலச் சங்கம்தான் இவரது அயராத கடும் உழைப்பினால் இன்று சுமார் ஐம்பது இலட்ச ரூபாய்ச் சொத்துக்களுடன் அன்னை ஆசிரமம் என்ற ஆலமரமாய்த் தழைத்து நிற்கிறது!

''ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில் வளர்ந்ததுதான் சிறு வயதிலிருந்தே எனக்குப் பொதுச் சேவை செய்வதில் ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்தியது!'' என்று கூறும் இவர், அகில இந்திய ரேடியோ உத்தியோக வருமானத்தின் பெரும் பகுதியைப் பெண்



* முதியோர் இல்லத்தினருடன் அன்னை...



● ஏழைக் குழந்தைகளுக்காக கிரஷ்

கள் நலச் சங்கத்தின் வளர்ச்சிக்கே செல விட்டிருக்கிறார்.

''1984-ம் ஆண்டு ரிடையர் ஆனேன். ஓய்வூதியத் தொகை ஐம்பதாயிரம் ரூபாய் கிடைத்தது. அதைக் கொண்டு அன்னை மகளிர் உயர்நிலைப் பள்ளியைத் துவங்கி விட்டேன்'' என்று கூறும் போது இவருடைய கண்களில் ஒரு பெருமிதம் பளிச்சிடுகிறது. அப் பள்ளி இன்று மேனிலைப் பள்ளியாக வளர்ச்சி பெற்றிருக்கிறது.

ஆசிரம வளாகத்தைச் சுற்றி வந்தோம். 'அனாதைக் குழந்தைகள்' என்று துண்டைப் போட்டுத் தாண்டிச் சத்தியம் செய்தால் கூட நம்ப முடியாத அளவுக்கு ஆரோக்கியமான குழந்தைகள். எண்ணிக்கை இருநூறு.

இருபத்தைந்து பேர் அடங்கிய முதியோர் இல்லம். வீட்டில் படுக்கப் பாய் கூட இல்லாத நிலையில் அனாதைகளாய் இங்கு வந்த இவர்கள், ஸ்டீல் கட்டில், ஃபேன் வசதி, தனித்தனி ட்ரங்க் பெட்டி, விளையாட கேரம் போர்டு, தாயக்கட்டை, ஏச்சுப் பேச்சு இல்லாத சாப்பாடு என்று சகல சௌபாக்கியங்களோடு குஷியாக டீவி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உத்தியோகத்துக்குப் போகும் பெண்களுக்குக் கிடைக்கும் ஒரு வசதியைக் கூலி வேலைக்குச் செல்லுகின்ற ஏழைப் பெண்களுக்கும் கிடைக்கச் செய்திருக்கிறார் அன்னை. அவர்களுடைய பச்சைக் குழந்தைகளை விட்டு விட்டுச் செல்வதற்கு வசதியாகக் குழந்தைகள் காப்பகம் உருவாக்கியிருக்கிறார். தாய் கூலி வேலை செய்யும் போது கடும் வெயிலிலும் மண் தரையிலும் கிடந்து அந்த மலர்கள் வாடாமலிருக்கச் செய்த இலவச ஏற்பாடு இது. பாதுகாப்பான கட்டடத்திற்குள் குடிக்கப் பால், விளையாட பொம்மைகள், கவனித்துக் கொள்ள ஆயாக்கள் போன்ற வசதிகளுடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்கின்றன குடிசை வீட்டு மழலைகள்.

முழுக்க முழுக்க ஆசிரமத்தைச் சார்ந்த பெண்களாலேயே பிரிண்டிங் பிரஸ் ஒன்றும் நடத்தப்படுகிறது. அதோடு ஏழைப் பெண்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி, தையல் கலைப் பயிற்சி, கைவினைப் பொருட்கள் செய்யும் பயிற்சி என அனைத்தும் இலவசமாகக் கற்பிக்கப்படுகின்றன. புதுமையான இன்னொரு பயிற்சியும் உண்டு. அதுதான் பெண்களுக்கும் கொத்தனார் பயிற்சி. கட்டடங்களில் சித்தாள் வேலை மட்டும் செய்து கொண்டிருந்த பெண்கள் இனி 'பிரமோஷன்' பெற்றுக் கொத்தனார் வேலையும் செய்யப் போகிறார்கள்!

''இந்த வயதிலும் நான் இத்தனை உற்சாகத்தோடு இருக்கக் காரணம் காமாட்சி தான்'' என்று தொடக்கத்திலிருந்தே இவருடன் இணைந்து பணியாற்றி வரும் காமாட்சியை அறிமுகப்படுத்தினார் அன்னை. உறுதுணையாக இருக்கும் இன்னொருவர் சத்தியபாமா.

அன்னை, வானொலியில் பணியாற்றிய காலத்தில் நிலைய இயக்குநராக இருந்தவர் குமாரி சத்தியபாமா. ஓய்வு பெற்ற அவர், அன்னையின் பொதுத் தொண்டால் கவரப்பட்டு இன்று ஆசிரமத்துக்கே வந்து தங்கிப் பொதுச் சேவையில் தம்மையும் இணைத்துக் கொண்டிருக்கிறார். ஆசிரமத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையும் அளித்துள்ளார்.


''செயற்கை வைரத் தொழிற் பயிற்சி நிலையம், ஆண்களுக்காக முதியோர் இல்லம், ஸ்கிரீன் பிரிண்டிங் இவையெல்லாம் எதிர்காலத் திட்டங்கள்'' என்று விவரித்துக் கொண்டே போகிறார், உடல் தளர்ந்தாலும் மனம் தளராத அன்னை.

– பாபுஜி

● இலவச தையல், பூ வேலைப் பயிற்சி...



பன்றிகள் புத்திசாலிகள்!



!! ராஜ நாகத்தின் விஷம் மிக வீரியம் வாய்ந்தது. 150 பேரைக் கொல்வதற்கு ஒரு கிராம் விஷமே போதும்.

!! பாம்புகளுக்குக் கண் இமைகள் கிடையாது. கண்ணருகே உள்ள செதிலே இரப்பையைப் போல் கண்ணை மூடிப் பாதுகாக்கும். இந்தச் செதில் சல்லாத் துணி போல் இருப்பதால் மூடிய விழி அதன் வழியே தெரியும்.

!! நான்கு முழங்கால்களையுடைய ஒரே விலங்கு யானைதான்.

!! எலிகளுக்கு வியர்க்காது.

!! பாபூன் என்று ஒரு வகைக் குரங்கு. ஓர் ஆண் பாபூன் ஒரு 'சிறுத்தைப் புலியை'க் கொல்லும் அளவுக்கு வலிமை படைத்தது.

!! பத்து மீட்டர் நீளமுள்ள மலைப் பாம்புக்கு அறுநூறுக்கும் மேற்பட்ட விலா எலும்புகள் இருக்கும்.

!! மலைச் சரிவில் மேல்நோக்கி ஓடும் காளை மாடு கீழ் நோக்கி விரையும் காளையை விட வேகமாகச் செல்லும்.

!! தாய்லாந்து நாட்டு (சையாம்) பூனைகள் எல்லாமே வெள்ளை நிறத்தில்தான் இருக்கும்.

!! மூவாயிரம் அடி தூரத்தில் உள்ள மனிதனின் 'வாடையை' ஒரு யானையால் முகர்ந்து அறிய முடியும்.

!! பூனைகள் ஆயுட்காலத்தில் பாதிப் பொழுதுக்கும் மேல் தூக்கத்தில் கழிக்கின்றன.

!! உலகில் சுமார் மூன்று மில்லியன் இன உயிரினங்கள் உள்ளன. இவற்றுள் சில ஆயிரம் மட்டுமே பாலூட்டிகள்.

!! ''எங்கே இருக்கிறாய்?'', ''சொன்னதைக் கேளு!'', ''ஜாக்கிரதை!'', ''நீ யார்?'', ''நான் இங்கே இருக்கிறேன்...'' - இவையெல்லாம் பன்றிகள் தங்கள் 'மொழியில்' பேசக் கூடிய வாக்கியங்கள். பன்றிகள் தங்களுக்குள் பேசிக் கொள்ள பிரத்தியேக ஓசைகளைப் பயன்படுத்துகின்றன என்றும் அவை புத்திசாலிகள் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். வெளி உதவியின்றி, பன்றிகளால் சில சிக்கல்களை விடுவிக்க முடியும் என்பதும் விஞ்ஞானிகளின் முடிவு. கதவுத் தாழ்ப்பாளைத் திறப்பது, குழாயைத் திறந்து மூடுவது, பறவைகளை வேட்டையாட (நாய்களைப் போல்) உதவுவது - போன்றவற்றைச் செய்யப் பன்றிகளைப் பழக்குவது சாத்தியமே.



!! ஒட்டகச் சிவிங்கியின் ரத்த அழுத்தம் மனிதனின் ரத்த அழுத்தத்தை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகம். உலகில் மிக அதிகமான ரத்த அழுத்தம் உடைய விலங்கு இதுவாகத்தான் இருக்கும்.

!! மனிதர்களின் விரல் ரேகைகள் பிரத்தியேகமாக இருப்பது போல் (ஒருவரது போல் இன்னொருவருக்கு இராது) ஒட்டகச் சிவிங்கியின் உடலிலுள்ள புள்ளிகளும் பிரத்தியேகமானவை.

!! மிகச் சாதுவான ஒட்டகச் சிவிங்கியை அமைதி மற்றும் நட்புக்கு அடையாளமாகக் கருதினார்கள் அரேபியர்கள். அவற்றை இந்திய மன்னர்களுக்குப் பரிசாக வழங்கினார்கள் - நட்பின் அடையாளமாக.

தொகுப்பு : உதய்லால்



ஓர் ஊதுவத்தி எரியும்போது விடும் நறுமணப் புகையின் விலை ஒரே ஒரு பைசாதான் என்று உங்களுக்குத் தெரியுமா?



ஒவ்வொரு பைசாவின் மதிப்பைப்பற்றியும் ஏன் கணக்குப் பார்க்க வேண்டும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம்.

துகர் இன்வெஸ்ட்மெண்ட்ஸ், 11 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட போதிலும், துகர் குடும்பத்தினர் 80 ஆண்டுகளாக நிதித்துறை வாணிபத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

துகர் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அதன் நிர்வாக இயக்குநர் திரு. என். தாராசந்த் துகர் மற்றும் சேர்மன் திரு. சி. அன்னா ராவ் (முன்னாள் சேர்மன், திருமலை திருப்பதி தேவஸ்தானம்) தலைமையில் இயங்கி வருகிறது. அவர்கள் அந்நாளைய பண்புகளில் ஊறியவர்கள். எனவே எங்கள் வியாபார தத்துவம், அந்நாளைய பண்புகளான சிக்கனம் மற்றும் நேர்மையை அடிப்படையாகக் கொண்டது.

எங்கள் பண்புகளில் எங்களுக்கு அசையாத நம்பிக்கை. எனவே, எங்கள் டெபாசிட்தாரர்களுக்கும் எங்களிடம் மிகுந்த நம்பிக்கை.

ஒவ்வொரு பைசாவின் அருமையையும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம்

இப்போது எங்களிடமுள்ள டெபாசிட்டுகள், என்றுமே இல்லாத அளவுக்கு ஏறக்குறைய 10 கோடி ரூபாயை எட்டி விட்டது. தொடர்ந்தாற் போல் 5 ஆண்டுகளாக நாங்கள் 25% லாபப் பங்கை (டிவிடெண்ட்) வழங்கி வருகிறோம். எங்கள் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை 20,000ஐத் தாண்டி விட்டது.

கணக்கற்ற டெபாசிட்தாரர்கள் பாடுபட்டு சம்பாதித்து எங்களிடம் ஒப்படைத்திருக்கும் பணத்தை நாங்கள் பொறுப்புடன் பாதுகாத்து வருகிறோம்.

இப்பணத்தை, நாங்கள் விவேகத்துடனும், முன் ஜாக்கிரதையுடனும், நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்பிற்கும் வழிவகுக்கும் துறைகளிலே மட்டுமே முதலீடு செய்கிறோம். ஆகவேதான், சிறந்த கம்பெனிகளில் முதலீடு செய்திருக்கும் 20,000 குடும்பங்களின் பிரார்த்தனைக்கும் பதில் துகர் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் வீட்.

• தவணைக் கொள்முதல் • லீசிங்
• ப்ராப்பர்டி டெவலப்மெண்ட் • பப்ளிக் டெபாசிட்

DUGAR
INVESTMENTS LIMITED

இப்பொழுது அணுகுங்கள். இது எங்கள்
விசேஷ சேவை காலம்

தேசிய மயமாக்கப்பட்ட முன்னணி வங்கிகளின் [illegible]

பதிவு அலுவலகம்: "துகர் டவர்ஸ்", 123 மார்ஷல்ஸ் ரோடு, சென்னை-600 008. போன்: 863535 Tlx: 041-6670 DUGR IN Fax: 91-44-861188
கிளைகள்: சென்னை: வெலாண்ட் ரோடு, போன்: 831888 தி.நகர்: போன்: 447541, அடையார், பெங்களூர் போன்: 584482.
கோழிக்கோடு, போன்: 63244. கோயம்புத்தூர் போன்: 27887, எர்ணாகுளம் போன்: 369515, கரூர் போன்: 830, மதுரை போன்: 33863.
நெல்லூர் போன்: 846006. விசாகப்பட்டினம் போன்: 46381.


● ஜெ.யுடன்...

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
கே. ஆர். வேலுச்சாமி,
வடக்களூர் (அஞ்சல்),
அன்னூர் - 638 653
கோவை (மாவ)

● மா. பழனிசாமி, கோவை.

? இரண்டு ஆண்டு காலமாக 'ஜெ' வீடு செல்லாத எஸ். பி. சவான் இப்போது சென்றுள்ளாரே?

! எஸ். பி. சவான் 'ஜெ' வீட்டுக்குச் சென்றால் அதற்கு ஓர் உள்ளர்த்தம், 'ஜெ'. அத்வானி வீட்டுக்குப் போனால் அதற்கு ஓர் உள்நோக்கம், 'ஜெ'. பிரதமரைச் சந்திக்காமல் அர்ஜுன் சிங், பவாரைச் சந்தித்துத் திரும்பினால் அதற்கு வேறு ஒரு ரகசியக் காரணம்... பத்திரிகை நிருபர்கள் கற்பனைத் திறன் காட்ட நிறையவே சந்தர்ப்பங்கள் அளிக்கிறார் 'ஜெ'!

● ஆர். கருணாகரன், மேட்டூர் அணை.

? ஆஸ்கர் விருதுக்குத் 'தேவர் மகன்' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதே?

! தேர்ந்தெடுக்கப்படவில்லை; இங்கிருந்து அனுப்பப்பட்டுள்ளது; அவ்வளவுதான். இனி அமெரிக்காவில் தேர்வுக் குழு பரிசீலித்து, இறுதிச் சுற்றுப் பரிசீலனைக்கு 'இதையும் பார்க்கலாம்' என்று சிபாரிசு செய்ய வேண்டும். இதை 'நாமிநேஷன்' என்பர். இதற்குப் பிறகுதான் நீதிபதிகள் பார்த்து ஒரு முடிவுக்கு வருவார்கள். 'நாமிநேஷன்' பெறுவதென்பதே மிகப் பெரிய காரியம். விருது பெறுவது அதைவிடப் பெரிய சாதனை. தேவர் மகன் இன்னும் பல படிகள் தாண்ட வேண்டியிருக்கிறது.

● நா. சிந்துகுமார், திருவட்டார்.

? கல்கி பொன் விழா மலரை 312 பக்கங்களுடன் ஐம்பது ரூபாய்க்குத் தந்த நீங்கள், தீபாவளி மலரை 344 பக்கங்களுடன் நாற்பது ரூபாய்க்குத் தந்தது எப்படி...?

! என்ன ஸார் இது. பொன் விழா மலருடன் வழங்கப்பட்ட கேஸட்டை மறந்து இப்படி ஒரு கேள்வி!

● ஆர். கே. லிங்கேசன், மேலக்கிருஷ்ணன்புதூர்.

? 'விசுவ ஹிந்து பரிஷத்துக்கு நீதிமன்றத்தில் நம்பிக்கை இல்லை' என்று அசோக் சிங்ஹால் கூறியுள்ளாரே?

! ராமாயணக் கதையை நன்கு அறிந்தவர்கள் - ராமனுடைய உள்ளத்தைப் புரிந்தவர்கள் - இப்படியெல்லாம் பேச மாட்டார்கள்.

● செல்வன்ஜி, திருச்சி.

? பிரபுவின் நடிப்பு எப்படிங்க?

! அவ்வப்போது அப்பாவின் சாயல் நடிப்பில் எட்டிப் பார்த்தாலும் இரும்பிரமான நடிப்புத்தான்.

● சித்ரா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.

? 'நான் மூப்பனார் கோஷ்டியும் அல்ல; வாழப்பாடி அணியும் அல்ல... காங்கிரஸ் அணி' என்கிறாரே ப. சிதம்பரம்?

! அடக் கடவுளே, தமிழக காங்கிரஸில் இரண்டு கோஷ்டிகள் போதாதென்று மூன்றாவதாக ஒன்றா!


● ... சந்திப்பு!

● எஸ். இலங்கேசுவரன், வேலூர்.

? வேலூர் அருகே போலீஸ் லாரியை வனத் துறையினர் சோதனையிட்டதில் கடத்தல் சந்தனக் கட்டைகள் இருந்ததாகக் கண்டுபிடித்துள்ளார்களே?

! கடத்தப்பட்ட சந்தனக் கட்டைகளைக் கைப்பற்றி வந்ததாகக் கூறி தப்ப முயற்சி செய்யலாம், பயிரை மேய்ந்த வேலிகள். வனத்துறை உஷாராக இருக்கட்டும்!


● நடிப்பு எப்படி?

● பி. ராமகிருஷ்ணன், மேலகிருஷ்ணன்புதூர்.

? தமிழக மக்கள் எந்த விஷயத்தில் ரொம்ப ஏமாந்து கொண்டிருக்கிறார்கள்?

! நல்லாட்சி நடக்கும் என்று எதிர்பார்த்து வோட்டு அளிக்கப் போய், நல்லாட்சி இயக்கத்துக்கே அவசியம் நேர்ந்து விட்டதே, போதாதா?

● எஸ். ஃஜைபகதீன், காஞ்சிபுரம்.

? அடுத்த மாத அயோத்தி நெருக்கடி பிரதமரை எந்த அளவுக்குத் தாக்கும்?


! (நர) சிம்மாராவைச் சுறுசுறுப்பாக்கும் அளவுக்கு.


● மூன்றாவது கோஷ்டி!

● சி. ஆர். நாகராஜன், பொள்ளாச்சி.

? 'நாறு சுவாமிகளை சமாளிக்கக் கூடியவர் ஜெயலலிதா' என்கிறாரே ராமகிருஷ்ண ஹெக்டே?

! இருக்கலாம்; ஆனால் மக்களின் ஆதரவு ஜெக்கு இருக்கும் வரைதான் சமாளிக்க முடி


● அயோத்தி நெருக்கடி...

அட்டர்னி ஜெனரல் பதவி விலகல் குறித்து...?

யும். சு. சுவாமியின் குற்றச்சாட்டுக்களை மக்கள் நம்ப ஆரம்பித்து விட்டால் மறு தினமே ஹெக்டேயின் கணிப்பு தவறாகி விடும். எனவே குற்றச்சாட்டுக்களில் உண்மை இருக்கிறதா இல்லையா; அவற்றை எந்த அளவுக்கு நிரூபிக்க முடியும் என்பதில்தான் எல்லாமே அடங்கியிருக்கிறது.

● ப. ரவிகுமார், திருத்துறைப்பூண்டி.

? அட்டர்னி ஜெனரல் ராமசாமி பதவி விலகல் குறித்து?

! அட்டர்னி ஜெனரலாக இருக்கும் ஒருவர் சட்டரீதியாகத் தன்னைத் தற்காத்துக் கொண்டிருப்பார் என்றே எதிர்பார்க்கலாம். ஆனால், 'தர்மம் என்று ஒன்று இருக்கிறது; அதையும் கவனிக்க வேண்டும்; தவறினால், இன்றில்லாவிட்டால் நாளை அது ஆளைக் கவிழ்த்து விடும்' என்பதற்கு ராமசாமி உதாரணம். ஸ்டான்சார்ட் வங்கியிலிருந்து அடமானம் ஏதுமின்றிப் பெரும் தொகையைக் கடனாகப் பெற்றதில் சட்ட விரோதம் ஏதுமில்லை என்கிறார் ராமசாமி. ஆனால் ஓர் உன்னதப் பதவியில் இருப்பவர் இப்படியெல்லாம் நடந்து கொள்ளலாமா? அதர்மம் அல்லவா! இது திரை மறைவில் தவறான காரியங்களுக்கு வழிவகுக்கக் கூடுமல்லவா? இதையெல்லாம் யோசிக்காதது தான் குற்றம். 'உடல்நலக் குறைவு' என்று காரணம் காட்டி ராஜினாமா செய்திருக்கிறார் ராமசாமி. நமது அரசியல்வாதிகளிடமும் அதிகார வர்க்கத்தினரிடமும் காணப்படுவது உடல்நலக் குறைவு அல்ல மனநலக் குறைவே!

● பி. அ. முஸ்தபா கமால், தக்கோலம்.

? மன ஆறுதல் அளிக்கக்கூடிய செய்தி ஏதாவது...?

! ஏன் இல்லை? இடஒதுக்கீடு பற்றிய உச்சநீதி மன்றத் தீர்ப்பு ஆறுதலை மட்டுமின்றி நிறைவையும் அளிக்கக்கூடிய ஒன்று. வி.பி. சிங் ஆட்சி கொண்டு வந்த 27 சதம் ஒதுக்கீட்டைச் சட்டப்படி செல்லுபடியாகும் என்று கூறியுள்ளது. அதே நேரத்தில் பிற்படுத்தப்பட்டோரில் வசதி படைத்தவர்களே திரும்பத் திரும்ப சலுகைகளை அனுபவிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் இதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சொல்லி இருக்கிறது. மொத்தத்தில் 50 சதவீதத்துக்கு மேல் இட ஒதுக்கீடு செய்யப்படக் கூடாது என்று உச்சவரம்பு விதித்துள்ளது. ஏழைகளுக்கு என்று தனி கோட்டா நிர்ணயித்த நரசிம்மராவ் ஆட்சியின் சட்டத்தை நிராகரித்துள்ளது. வேலையில் சேர மட்டுமே ஒதுக்கீடு செய்யலாம்; உத்யோக உயர்வுகளுக்கு அல்ல என்று தீர்ப்புக் கூறியுள்ளது. எந்தவிதமாகப் பார்த்தாலும் ஏற்கப்படக் கூடிய, அனைவராலும் ஏற்கப்பட வேண்டிய தீர்ப்பு. இனியேனும் ஒதுக்கீடு விஷயத்தில் சண்டை சச்சரவுகளை நிறுத்தி, அந்த மட்டுக்கும் ஆக்கபூர்வமான திசைகளில் தலைவர்கள் கவனம் செலுத்துவது நல்லது.

● இரா. தலிப், திருச்சி - 14.

? அரசியல் டிராஜடி ஒன்று சொல்லுங்களேன்?

! விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒருவர் பெரிய வெடிகுண்டுடன் மோட்டார் சைக்கிளில் விரைந்து, கொழும்புவில் கப்பல் படை உயர் அதிகாரியின் கார் மீது மோதி... அப்பா! பயங்கர டிராஜடி! ராஜீவ் மரணம் அளவுக்கு நம் உள்ளத்தில் அனுதாபத்தை ஏற்படுத்தா விட்டாலும் கொடுமையில் சற்றும் குறைந்ததல்ல.

● கே. ஆர். வேலுச்சாமி, வடக்கலூர். ❑

? விடுதலைப் புலிகளை முற்றிலுமாக ஒடுக்கி விட்டதாகச் சொன்னாலும் அது நிரந்தரம் இல்லை போலிருக்கே?

! மார் தட்டியது போல் நடக்கவில்லை; பதுங்கியவர்கள் மறுபடி தலைதூக்குகிறார்கள் என்பதற்குத் தில்லியில் முதல்வர்கள் மாநாட்டில் 'ஜெ' புலம்பியிருப்பதே சான்று. இதை விடவும் கேவலம், வேலூரில் சிறை வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளில் 19 பேர் மழையைத் திரையாகக் கொண்டு தப்பி ஓட முடிந்திருப்பதுதான். சே, மானக்கேடு!

* கணிப்பு தவறுமா?



* புலம்பலே சான்று





★ பேட்டியின் போது உடனிருந்த அதிகாரிகள்

"'திருச்சி' என்று சொல்லாதீர்கள்!"

– கலெக்டர் கே. எஸ். கிருஷ்ணசாமி பேட்டி

'திருச்சி' என்று யாராவது சொன்னால் உடனே, ''அப்படி சொல்லாதீர்கள்; 'திருச்சிராப்பள்ளி' என்று சொல்லுங்கள்!' என்கிறார் திருச்சி... ஸாரி திருச்சிராப்பள்ளி மாவட்டக் கலெக்டர் கே. எஸ். கிருஷ்ணசாமி. அரசாங்கப் பதிவுகளின்படி 'திருச்சி' என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லையாம். கலெக்டர் கிருஷ்ணசாமி, ஓய்வு நேரம் கிடைத்தால் பழைய வரலாறுகளைத் தோண்டித் துருவிப் பார்த்து விடுகிறார். ''திருச்செந்துறை கோயிலில் கல்லணை கட்டியது பற்றிய விவரங்கள் கல்வெட்டுகளாக இருக்கின்றன'' என்று தெரிவிக்கிறார்.

திருச்சிராப்பள்ளி நகர பிரச்னைகளோடு நாம் கலெக்டரைச் சந்திக்கச் சென்ற போது கலெக்டருடன் இருபதுக்கும் மேற்பட்ட மாவட்ட அதிகாரிகள்



★ கலெக்டர்

நமக்காகக் காத்திருந்தனர். ''திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரி பாய்வது சில பகுதிகளில்தான். பெரும்பகுதி மழையை நம்பி வாடும் பகுதிகள்தான்'' என்கிறார் கிருஷ்ணசாமி.

''நகரைச் சுற்றியுள்ள புறநகர்களில் நடுத்தர மக்கள் வீடு கட்டிக் குடியேறியுள்ளனர்.



அங்கேயெல்லாம் சாலை வசதி சரியில்லை. மேலும் மழை பெய்தால், குடமுருட்டி, உய்யக்கொண்டான் ஆறுகளில் இருந்து வழிந்து வரும் நீர் நகர்களில் புகுந்து விடுகிறது. குறிப்பாக தியாகராச நகர், எம்.எம்.நகர் பகுதிகளில் முட்டியளவு தண்ணீர் நிற்கிறது...!''

''வீடுகள் கட்டப்பட்டுள்ள இடங்களெல்லாம் மிகவும் பள்ளமான பகுதி; மிகச் சமீப காலம் வரை பயிர் செய்த இடங்கள். ஆறுகளின் வடிகால் நிலப்பகுதி. அதனால் அரசு ஒன்றும் செய்ய' இயலாது என்று சொல்லவில்லை; வாய்க்கால்களைத் தூரெடுத்து, நன்கு ஆழப்படுத்தலாம் என்று இருக்கிறோம். இதன் மூலம் தண்ணீர் கரைகளுக்கு மேல் வழிந்து செல்லாது. அதே சமயம் கரைகளையும் உயர்த்த இருக்கிறோம்.''

''பெரும்பாலான நகர்கள் டவுன் பிளானிங் துறையால் அங்கீகரிக்கப்பட்ட லே-அவுட்டில்தான் கட்டப்பட்டிருக்கின்றன...''

''இனி அதைப் பற்றிப் பேசிப் பயனில்லை. இனிமேல் பயிர் செய்யும் இடங்களில் லே அவுட் போட்டால் அப்ரூவல் தர மாட்டோம். அரசு ஆணை போட்டாகி விட்டது. அதே போல் குளங்கள், ஏரிகள், கால்வாய்க் கரைகளை ஆக்ரமித்தவர்கள் 'பட்டா' கிடைக்கும் என்று எதிர்பார்த்தாலும் ஏமாற்றம்தான் மிஞ்சும்.''

''தெற்கு ராமலிங்க நகரின் இருபுறமும் காத்தான், தொட்டி என்று இரு கால்வாய்கள் இருந்தன. இப்போது ஆக்ரமிக்கப்பட்டிருக்கிறபடியால் மழைக் காலத்தில் தண்ணீர் செல்ல வழியில்லாமல் தேங்கி விடுகிறது.''

''ஆக்ரமிப்புகளை அகற்றிக் கொண்டே இருக்கிறோம். நீங்கள் குறிப்பிட்ட அந்தக் கால்வாய் பற்றிக் கவனிக்கிறேன்.''

''ராம்நகர், திருநகர் ஆகிய நகர்களை ஒட்டிச் சுடுகாடு ஒன்று உள்ளது. இந்தச் சுடுகாட்டில் பிணங்களை எரிய வைக்கும் இடத்தில் 'புகை போக்கி' போன்ற அமைப்பு இல்லாததால் பிணங்கள் எரிக்கப்படும் போது பக்கத்தில் உள்ள வீடுகளில் மக்கள் இருக்க முடியாது. பல வருடங்களாக உள்ள பிரச்னை இது. அந்தப் பகுதி மக்கள் 'எரிகிற இடத்தில்' புகைப் போக்கி கட்டுங்களேன் என்று கேட்கிறார்கள்...''

''இந்த வேலையை இன்னமும் பதினைந்தே நாட்களில் செய்து முடிக்கிறேன்.''

''தெப்பக்குளம் படு அசுத்தமாக இருக்கிறது. சுற்றிலும் உள்ள வியாபாரிகள் குப்பைகளை அதில்தான் கொட்டுகிறார்கள். நகர சபையே அதைப் பராமரிக்கலாமே!''

''அந்தக் குளத்துக்குக் காவிரியிலிருந்து தண்ணீர் வருவதற்கு வழிகள் இருந்தன. எல்லாம் அடைத்துப் போய் விட்டன. உச்சிப் பிள்ளையார் கோயிலும், குளமும் தனியான நிர்வாகத்திற்குச் சொந்தமானவை. அவர்களிடம் பேசித்தான் முடிவு செய்ய வேண்டும்.''

''ஆசிரியர் நலச் சங்கம் மூன்று லட்ச ரூபாய் நிதியை வைத்துக் கொண்டு, இருபது வருடங்களாக 'கம்யூனிடி ஹால்', 'கெஸ்ட் அவுஸ்' கட்டுவதற்கு இடத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பு ஒருமுறை கலெக்டர் ஸ்டேடியம் அருகில் இடத்தைக் கொடுத்து விட்டுப் பின்னர் வாபஸ் வாங்கி விட்டாராம்!''

''என்னை இதுவரை யாரும் அணுகவில்லை. அணுகினால் உடனடியாக இடத்தைக் கொடுக்கத் தயார்.''

''சட்டக் கல்லூரி கொஞ்சமும் வசதிகள் இல்லாத இடத்தில் இருக்கிறது. அதையொட்டிய காவிரிப் பாலத்தில் இரவு நேரத்தில் விளக்குகள் எரிவதில்லை.''

''சட்டக் கல்லூரிக்குப் புதுக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அடுத்த வருடம் தயாராகி விடும். காவிரிப் பாலத்தில் விளக்குகள் எரிகின்றனவே!'' (கலெக்டர் சொன்ன அன்று இரவே சென்னை வரும் போது காவிரிப் பாலத்தைப் பார்த்தோம். அங்கொன்றும் இங்கொன்றுமாக விளக்குகள் எரிந்தனவே தவிர எல்லா விளக்குகளும் எரியவில்லை)

''ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் படித்துறையில் குளிப்பவர்கள் நீரில் மூழ்கி விபத்துக்கள் நேருகின்றனவே. இதைத் தடுக்க வழிகள் ஏதேனும்...?

''ஏற்கெனவே இரும்புத் தடுப்புகள் போடப்பட்டு போர்டு வைக்கப்பட்டுள்ளது. இந்த முறை ஆடிப் பெருக்கின் போது முன் ஜாக்கிரதையுடன் ஏகப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்ததால் மரணங்கள் தவிர்க்கப்பட்டன. தடுப்பை மீறி யாரும் குளிக்காமல்



● கோவிந்தம்மாளுக்கு விரைவில் உதவி!

இருப்பது நல்லது. அதையும் மீறிக் குளிக்கிறார்கள் என்றால் தடுப்புக்கு அப்புறம் போக முடியாதபடி இரும்பு வலைகள் போடுவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.''

''ஸ்ரீரங்கம் புதுக் கோபுரத்தை ஒட்டிய படி பழைய போலீஸ் லைன் ஒன்று இப்போது பாழடைந்து போயிருக்கிறது. அது சமூக விரோதிகளின் செயல்களுக்கு நன்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.''

''அந்த லைனை இடித்து விட்டு, ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டுகிற திட்டம் இருக்கிறது.''

''காவிரிப் பாலத்தை ஒட்டியுள்ள பழைய பாலம் 'நிழல்' வேலைகளுக்குப் பயன்படுகிறது. சமீபத்தில் பாலத்தின் நடுவில் நடந்த கொலையைக் கண்டுபிடிக்கவே மூன்று நாட்கள் ஆனதாமே?''

''அந்தப் பாலத்தை எந்தவிதத்தில் உபயோகிக்கலாம் என்று யோசித்துத்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் விளக்கு களை உடனே போடலாம்.''

''நகரத்தில் உள்ள சாலைகள் படுமோசமாக உள்ளன...''

''நாங்களும் புதிதாகப் போட்டுக் கொண்டுதானிருக்கிறோம். இதுவரை 16 கி.மீ. போட்டிருக்கிறோம். இன்னமும் 20 கி.மீ. போட வேண்டும். நிதி வசதிக்கேற்ப செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.''

''சத்திரம் பஸ் ஸ்டாண்டில் எந்த பஸ் எங்கே நிற்கிறது என்பதில் ஒரே குழப்பமாக இருக்கிறது. பயணிகள் நிலை பரிதாபம். பஸ் ஸ்டாண்டை மாற்றும் திட்டம் இருக்கிறதா?''

''அந்த பஸ் ஸ்டாண்டுக்காக கரூர் சாலையில் நிலத்தை ஆர்ஜிதப்படுத்திக் கொண்டிருக்கிறோம். விரைவில் அந்த வேலை முடியும்.''

''ஹோலிகிராஸ் கல்லூரிச் சுவரில் ஆண்கள் வரிசையாக நின்று சிறுநீர் கழிப்பதால் இடம் அசுத்தமாவது மட்டுமல்ல; மாணவிகள் அந்த வழியாக நடக்கவே சங்கடப்படுகிறார்கள். இதே நிலைதான் ஜங்ஷன் பஸ் நிலையத்திலும்...''

''போலீஸை வைத்துத் தடுக்கலாம் என்றால் எவ்வளவு நாட்கள்தான் செய்ய முடியும்? இருந்தாலும் ஒன்றிரண்டு நாட்கள் காவல் போட்டுப் பார்க்கிறோம். மனிதன் தானாகத் திருந்தினால்தான் இதற்கெல்லாம் விமோசனம் உண்டு.''

''ஜங்ஷன் பஸ் ஸ்டாண்ட் நெருக்கடியைச் சொல்லாமல் இருக்க முடியாது...''

''திருவள்ளுவர் பஸ்களும் உள்ளேயே நிறுத்தப்படுவதால்தான் இந்த நெருக்கடி. திருவள்ளுவருக்கென்று கட்டப்பட்டு வீணாகி விட்ட பஸ் ஸ்டாண்ட் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் டி.டி.சிக்கு வேறு இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எந்த இடம் என்று இப்போது சொன்னால் உடனே, அந்த இடத்தைச் சேர்ந்தவர்கள்

மாதம் ஒரு நகரம்

பாண்டிச்சேரிக்கு வரப்போகிறோம்!



பாண்டிச்சேரி ஒரு தனி யூனியன் பிரதேசமாக இருந்தாலும் பிரச்னைகள் இல்லாமல் போய்விடுமா என்ன?

எனவே, 'மாதம் ஒரு நகரம்' என்ற திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் பாண்டிச்சேரிக்கு வரப் போகிறோம்; அங்குள்ள பிரச்னைகளையும் சாதனைகளையும் சாதனையாளர்களையும் நேரில் பார்த்து எழுதப் போகிறோம்.

அதற்கு உதவியாகப் பாண்டிச்சேரியிலுள்ள வாசகர்கள் தங்கள் பகுதியிலுள்ள பிரச்னைகளையும், சாதனைகளையும், சாதனையாளர்களையும், பொது நோக்குடன் சேவை புரிந்து கொண்டிருக்கும் இளைஞர்கள் மற்றும் அமைப்புகள் பற்றியும் எங்களுக்கு எழுத வேண்டுகிறோம்.

உங்கள் கடிதங்களின் அடிப்படையில் பாண்டிச்சேரியைச் சுற்றிப் பார்த்த பிறகு, இறுதியில் பாண்டிச்சேரி முதல்வரைச் சந்தித்துப் பிரச்னைகளை எடுத்துச் சொல்லி, அவற்றின் தீர்வுக்காக அரசு எடுக்கப் போகும் நடவடிக்கைகளையும் கேட்க இருக்கிறோம்.

பாண்டிச்சேரி வாசிகளான உங்கள் கடிதங்கள் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 3.12.92.

உறையின் மேல், 'மாதம் ஒரு நகரம் - பாண்டிச்சேரி' என்று குறிப்பிட்டு உடனடியாக எழுதியனுப்புங்கள்.

– ஆசிரியர்

கோர்ட்டுக்குச் சென்று 'ஸ்டே' வாங்கி விடுவார்கள். அது தவிர மற்ற பஸ்கள் ஸ்டாண்டிற்குள் குறிப்பிட்ட நேரம் நின்று சென்றாலே நெரிசல் இருக்காது. அதே போல் காந்தி மார்க்கெட். 'இதை மாற்றலாம் என்று இருக்கிறோம்' என்று அறிவிப்பு வந்த வுடனேயே, அந்த வியாபாரிகள் 'ஸ்டே' வாங்கி விடுவார்கள். அதனால் முன் எச்சரிக் கையுடன் செயல்பட வேண்டியிருக்கிறது.''

''பெரியார் நகர் மக்களுக்கு நகராட்சி வசதி ஏதும் செய்து தராத காரணத்தால், அவர்கள் வரி கட்ட மறுத்து விட்டார்கள். அதே போல் மற்ற நகர்களைச் சேர்ந்தவர் களும் செய்யலாம் என்று இருக்கிறார்கள்!''

''இப்போது அவர்கள் கட்டத் துவங்கி விட்டார்கள். மேலும் நிதி வசதி மற்றும் முன் னுரிமையைப் பொறுத்து வளர்ச்சிப் பணிகள் செய்யப்படுகின்றன. இதை மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.''

''திருச்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஒழுங்காகச் செயல்படுகிறதா?''

''இப்போது இருக்கும் திட்டம் 22,000 இணைப்புகளைத் தாங்கும். ஆனால் 4,000 இணைப்புகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின் றன. இதற்குக் காரணம் இணைப்புக் கொடுப் பதற்கு அதிகச் செலவாவதுதான். வங்கிகள் ஏதேனும் நிதியுதவி அளித்தால்தான் அதிக மான மக்கள் பாதாளச் சாக்கடையைப் பயன் படுத்தத் துவங்குவார்கள். அது பற்றியும் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.''

''தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்ப ரேஷனின் மண்ணச்சநல்லூர் கிடங்கில் காவல்காரராக இருந்தார் செல்வராஜ் என்ப வர். 88ம் வருடம், ஆகஸ்ட் மாதத்தில் இரவு நேர டியூட்டிக்குச் சென்ற அவர் திரும்பவே யில்லை. இப்போது அவர் மனைவி கோவிந்தம்மாள் இரண்டு குழந்தைகளோடு மிகவும் கஷ்டப்படுகிறார். செல்வராஜ் நிலை என்ன என்று தெரியாத நிலையில் கோவிந் தம்மாளுக்குச் சேர வேண்டிய பணமும் கொடுக்கப்படவில்லை. அரியமங்கலம் கிடங்கில் 250 ரூபாய் சம்பளத்தில் வேலை கொடுத்திருக்கிறார்கள். ஸ்ரீரங்கத்தில் இருந்து சென்று வரவே நூறு ரூபாய்க்கு மேல் செலவாகி விடுகிறது. இந்த நிலையில் கோவிந்தம்மாளுக்கு நீங்கள்தான் உதவ வேண்டும். இது தவிர அரிசி கடத்தல் கும்பலால் செல்வராஜ் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. அவரைக் ''காணவில்லை'' என்று புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதன் மீது தீவிர விசாரணை நடத்த வேண்டும்.''

''முழு விவரங்களையும் கொடுங்கள். நிச்சயம் என்னால் இயன்ற வரையில் முயற்சி செய்து கொஞ்சம் அதிகப்படியான சம்பளத் தில் வேலை வாங்கித் தர ஏற்பாடு செய் கிறேன். சட்டப்படி பன்னிரண்டு ஆண்டுகள் காணாமல் இருந்தால்தான் ஒருவர் இறந்தவ ராகக் கருதப்படுவார். அதனால் கோவிந் தம்மாளுக்கு வர வேண்டிய தொகைகள், கார்ப்பரேஷனிடமிருந்து வர வாய்ப்பில்லை. செல்வராஜ் கேஸ் பற்றித் தீர விசாரிக்கச் சொல்கிறேன்.''

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத் திற்கும் அதிகமாக, நாம் எடுத்துச் சொன்ன பிரச்னைகளை நிதானமாகக் கேட்டுப் பதில் சொன்னார் கலெக்டர். முடிக்கும் போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் துவங்க இருக்கும் தொழிற்சாலைகள் பற்றியும் விவ ரித்தார்.

''ஜெயங்கொண்ட சோழபுரத்தில் நிலக் கரிச் சுரங்கமும், அனல்மின் நிலையமும் 4,500 கோடி ரூபாய் முதலீட்டில் வர இருக் கின்றன. நூறு கோடி ரூபாய்ச் செலவில் இனாம் குளத்தூரில் சமையல் எரிவாயுவைச் சிலிண்டர்களில் நிரப்பும் தொழிற்சாலை ஏற்பட இருக்கிறது. போதாவூரில் வாழை ஆராய்ச்சி நிலையம் வர இருக்கிறது. மாவட்டம் முழுவதும் 21 கோடி ரூபாய்ச் செலவில் செம்பனை (பாம் ஆயில் மரம்) வளர்க்க இருக்கிறோம். மருத்துவக் கல்லூ ரிக்கு இடம் பார்த்தாகி விட்டது. அந்தக் கல்லூரிக்கு ஏற்ப, பொது மருத்துவ மனைக்குப் பல வசதிகள் செய்து கொடுக்க இருக்கிறோம்.

''இந்த மாவட்டத்திற்கு இவ்வளவு திட்டங்களை வழங்கியதற்காக முதல்வ ருக்கு, மாவட்ட மக்கள் சார்பில் நன்றி தெரி வித்துக் கொள்கிறேன். மேலும் பொது விநி யோகத் துறை செயல்படுவதை நானே நேரில் அடிக்கடி கண்காணிக்கிறேன். கள்ளச் சாரா யம் ஒழிந்து விட்டது. தாராநல்லூர் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சிக் கொண்டிருந்த சாத்தையா என்பவனைக் குண்டர்கள் சட்டத் தில் உள்ளே தள்ளியிருக்கிறோம்'' என்று விவரித்துக் கொண்டே வந்த கலெக்டர், கடைசியாக நாம் விடைபெறும் முன்பு, நம் கண்முன்னேயே, உதவியாளரைக் கூப்பிட்டு, ராம்நகர் சுடுகாட்டுக்குப் புகைப்போக்கி போடுவது குறித்தும், கோவிந்தம்மாளுக்கு நல்ல வேலை வாங்கித் தருவது குறித்தும் அலுவலகக் குறிப்பை டிக்டேட் செய்தது அவரது 'கடமை உணர்வைப் பளிச்செனக் காட்டியது.

- ப்ரியன்

வட்டமேஜை

இதற்குமுன் வராத விமர்சனம் இப்போது ஏன்?

◆ சின்னதம்பி சிறந்த படமா, பிரபு சிறந்த நடிகரா? என்று கேட்டிருந்தீர்களே. மூன்றாம் பிறை படத்தில் கமலை விட ஸ்ரீதேவி நன்றாக நடித்து இருந்தார்; கமலுக்குத்தான் விருது கொடுத்தார்கள். அப்போது எங்கே உங்கள் கேள்வி? சின்னதம்பி படத்திற்கு எல்லோருக்குமே விருது கொடுத்தார்கள்; பிரபுவுக்குக் கொடுக்கவில்லை. அப்போது எங்கே உங்கள் கேள்வி? பிரபு இதையெல்லாம் நம்பித் திரையுலகத்துக்கு வரவில்லை.

தூத்துக்குடி - 1, மக்கள் அன்பன் பிரபு இளைஞர்கள் தற்கொலைப்படை (பதினொரு பேர் இரத்தக் கையெழுத்திட்டிருக்கிறார்கள்).

◆ தில்லுமுல்லுகள் அரசியலில் மட்டுமில்லை; படங்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசுகள் வழங்குவதிலும் கூட நடைபெற்று வருகிறது என்பதற்குச் சாட்சியே இந்த சின்னதம்பி படத்திற்கு விருதளித்தது. மேலும் இக்கால மக்கள் ரசனையிலும் மேம்பட்டவர்கள் என்பதையும், அவர்களை இந்த விஷயங்களில் சிறிது கூட ஏமாற்ற முடியாது என்பதையும் கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

பாண்டிச்சேரி - 3, தா. செல்வராசன்.

◆ சின்ன தம்பி சிறந்த படமா எனக்கேட்டு ஒன்றரைப் பக்கம் அளவிற்கு எழுதியிருக்கிறீர்களே ஏன் சார்? இதற்கு முன் சிறந்த படங்களைத் தேர்ந்தெடுத்த போது வராத விமர்சனம், சின்னதம்பிக்கு மட்டும் ஏன்? இதைப் போல் தான் முன்பு நடிகர் திலகத்தை ஒதுக்கினீர்கள். இப்பொழுது அவர் மகனை. ஒன்று மட்டும் நிச்சயம்! தமிழ் நாட்டில் பெயர் வாங்க, கர்நாடகத்திலோ ஆந்திராவிலோ பம்பாயிலோ பிறந்துதான் இங்கே வர வேண்டுமா?

ராதநல்லூர், த. செல்வராஜ் சித்தப்பா.

◆ பலரது மனத்தில் கிளப்பப்பட்டிருக்கும் சர்ச்சையை 'கல்கி' மிகத் தெளிவாக நாட்டிற்கு எடுத்துரைத்திருக்கிறது. சர்ச்சை கிளம்பியது உண்மையாக இருந்த போதிலும், பூனைக்கு யார் மணிகட்டுவது என்று அனைவரும் கையைப் பிசைந்து கொண்டிருந்த சமயத்தில், ஓர் அப்பட்டமான உண்மையின் அடிப்படையில் கிளம்பியிருக்கும் சர்ச்சையைத் துணிச்சலுடனும் பல பின்னணி ரகசியங்களுடன் வெளியிட்டிருந்த 'கல்கி' யின் தைரியத்திற்கு ஈடு இணை எதுவுமில்லை.

தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

◆ 'அமெரிக்கத் தேர்தல் ஆச்சரியங்கள்' தலையங்கத்தை அப்படியே வைத்திருந்து இங்கு தேர்தல் நடக்கும் போது அப்படியே வெளியிடுங்கள்; அப்போதாவது நம் மக்கள் திருந்தட்டும்.

தக்கோலம், அ. முஸ்தபா கமால்.

◆ கல்யாணம் என்பது இப்போதெல்லாம் வரதட்சணையில்தான் நிச்சயிக்கப்படுகிறது. ஆனால் அஸ்வினி எழுதிய 'காவ்யாவின் கல்யாணம்' மட்டும் ஓர் ஆண் மகனின் தன்மானத்தில் நிச்சயிக்கப்படுகிறது! அருமையான கரு!

முத்துப்பேட்டை, தஞ்சைத் தரணியன்.

◆ அழகுக்காகக் கண்ட கண்ட கண்ணாடிகளை வாங்கிப் போட்டுக் கொள்பவர்களுக்கும், கண் விஷயத்தில் அலட்சியமாக இருப்பவர்களுக்கும் 'கண்கள் : ஃபாஷனும் பாதுகாப்பும்' கட்டுரை நல்ல உபயோகமான விஷயம்.. பல்லாயிரக் கணக்கான மக்களின் கண்களைத் திறந்து விட்டிருக்கிறீர்கள்.

கும்பகோணம், டி.எஸ். சீதாராமன்.

◆ இன்றைய தலையாய பிரச்னையான ராம ஜென்ம பூமியில் ராமர் பிறந்த இடம் முதல் சீதையின் சமையலறை வரை நேரில் சென்று பார்த்த உணர்வை உண்டாக்கிய கட்டுரையும் படமும் சியாமி சூப்பர்!

மேட்டூர் அணை - 2, ஆர். கருணாகரன்.

◆ அயோத்தி பற்றிய கட்டுரையில், பிரச்னை தீராத போதே 'ராம் ஜன்ம பூமி போலீஸ் ஸ்டேஷன்' என்று எப்படி பெயர் வைத்தார்கள் என்று கேட்டிருக்கிறீர்கள். போலீஸ் ஸ்டேஷன் மட்டுமல்லாமல் அங்கு உள்ள தபால் அலுவலகம் கூட 'ஜன்மஸ்தான் போஸ்டாபீஸ்' என்ற பெயரில்தான் இயங்கி வருகிறது. அரசு ஆவணங்கள் அந்த இடத்தை 'ஜன்மஸ்தான்' என்றுதான் குறிப்பிடுகின்றன.

சென்னை - 17, கே.என். ஸ்ரீதரன்.

◆ கொல்லைப் புறத்தில் சாதாரணமாகக் காய்க்கும் பப்பாளியில் இத்தனை பயன்களா?

கொளப்பாடு, ப. வெங்கடேசன்.

◆ புதிய அதிபர் கிளிண்டனின், குழந்தைப் பருவம், இளமைப் பருவம் என அவருடைய வாழ்க்கை பற்றிய செய்திகளைத் தெள்ளத் தெளிவாக வெளியிட்டது கல்கி மட்டுதான்!

கடம்பநல்லூர், ஏ.எஸ். மீனாட்சிசுந்தரம்.

◆ ஆஸ்திரேலியாவில், சாலைகள் வாரம் ஒருமுறை சோப்பு நீரால் கழுவி விடப்படுகின்றன என்பதைப் படித்துப் பெருமூச்சு விட்டேன்!

மதுரை - 9, இரா. கல்யாணசுந்தரம்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.


அருமையான உங்கள் வீடுகளுக்கு

அழகும் உறுதியும் நிறைந்த

மாயூரம் டிம்பர்

கதவுகள்

- ★ தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்
- ★ சரப்பதம் குறைக்கப்பட்டது.
- ★ ரசாயன கலவை பாதுகாப்பு
- ★ நேர்த்தியான இயந்திர வடிவமைப்பு



MADE TO ORDER BY:

MAYURAM TIMBER

& General Trading Corpn.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Madras – 600 017. Phone: 445207

8 A.M. TO 12 NOON ★ 3 P.M. TO 5 P.M.

H.O. 83, G.S.T. Road, Tambaram – 600 045, Tel: 465297

MAYAVARAM TIMBER DEPOT

No. 4, Post Office Road, Mayiladuthurai, Quaid-e-Milleth District, Phone: 3216.

Future Ads

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

